# செவ்வேளும் செந்தமிழும்



ஜி. ஜான் சாமுவேல்

# செவ்வேளும் செந்தமிழும்

ஜி. ஜான் சாமுவேல்

இயக்குநர்

ஆசியவியல் நிறுவனம்

விற்பனை உரிமை

ஆசியவியல் நிறுவனம்

சென்னை - 600 119

**Cevvēḷum Centamiḻum**

**( Collection of Essays on various aspects of Tamil Culture)**

**First Edition: Decmber 1998 pp. x + 93**

**© Dr. G. John Samuel**

**Price Rs. 50 US $ 4**

**Copies can be had from**

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai - 600 119.
India.

| | | |
|---|---|---|
| Phone | (Off.) | 4961662 , 4960831 |
| | (Res.) | 4960085 |
| Fax | | 91-44-4960959 |
| E-mail | | ias@xlweb.com |
| World Wide Web site | | http://xlweb.com/heritage/asian |

Composed by

INSTITUTE OF ASIAN STUDIES, Chennai - 600 119.

Printed by

STUDENTS OFFSET SERVICES , Chennai - 600 017.
Phone : 4343862, 582513

ஆசியவியல் நிறுவனத்தில்
எட்டு ஆண்டுகள் அருந்தமிழ்ப்
பணிகள் பல திறம்பட ஆற்றி
ஓய்வுபெற்று இவ்வுலகைத் துறந்து சென்ற
தமிழ்ச் செம்மல் முனைவர் முத்துச்சண்முகம் பிள்ளை
அவர்கட்கு என் அன்புக் காணிக்கை

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| பதிற். | - | பதிற்றுப்பத்து |
| பரி. | - | பரிபாடல் |
| சிலம்பு. | - | சிலப்பதிகாரம் |
| திருமுரு. | - | திருமுருகாற்றுப்படை |
| கந்த. | - | கந்தபுராணம் |
| அகம். | - | அகநானூறு |
| திரு.வி.க. | - | திருவாரூர் வி. கல்யாணசுந்தர முதலியார் |

# முன்னுரை

செவ்வேளும் செந்தமிழும் எனப்பெயரிய இந்நூல் பல்வேறு காலகட்டங்களில் என்னால் எழுதப்பெற்ற ஐந்து கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. கட்டுரைகளின் தலைப்புக்கள் வேறுவேறாக அமைந்த போதிலும், இக்கட்டுரைகள் பல்வேறு கால இடைவெளிகளுக்குள் பிறப்பெடுத்த போதிலும் இவற்றின் மையக் கருத்து தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு பற்றியனவாகவே அமைந்துள்ளது.

கடந்த ஜூலை மாதத்தில் அமெரிக்க ஐக்கியநாடுகள், இங்கிலாந்து, வளைகுடா நாடுகள் ஆகியவற்றில் சுற்றுப்பயணம் செய்து அங்கு வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அளவளாவிய போது தமிழ்ச் சமுதாயத்தின் மேம்பாடு பற்றிய நமது கண்ணோட்டங்களும் தமிழ் வளர்ச்சிபற்றி நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகளும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நான் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. இவை பற்றிய செய்திகளையும், விவாதங்களையும் நீண்ட ஒரு பயண நூல் பின்னணியில் தயாரிக்கும் பணியில் நான் மும்முரமாகத் தற்போது ஈடுபட்டு உள்ளேன்.

எங்கள் நிறுவனத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றித் தமிழ் உலகை மீளாத்துயரில் ஆழ்த்தி இம்மண்ணுலகைவிட்டுப் பிரிந்து சென்ற தமிழ்ச்செம்மல் அமரர் முனைவர் முத்துச் சண்முகம் பிள்ளை அவர்களும், இங்கு ஆராய்ச்சி புரிகின்ற அமெரிக்க நாட்டு முருகவியல் அறிஞர் திரு. பாட்ரிக் ஹாரிகனும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் என்னைச் சந்தித்து ஆசியவியல் நிறுவனம் வாயிலாக முதல் சர்வதேசக் கந்தன் முருகன் கருத்தரங்கை நடத்த வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். தமிழ்க் கடவுளாக மட்டுமன்றித் தமிழ்ச் சமுதாயத்தின் குறியீடாகவும், தமிழகத்தின் பண்பாட்டுத் தலைவனாகவும் (Culture Hero) திகழும் முருகக்

கடவுள் பற்றிய ஆய்வு தமிழ்ச் சமுதாயம் பற்றிய ஆய்வாகவே அமையும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் ஏற்கெனவே ஆழமாகப் பதிந்திருந்தது. எனவே இத்தகைய சர்வதேசக் கருத்தரங்கிற்குத் தேவைப்படும் பெரும் பொருட்செலவைச் சற்றும் சிந்தியாது, இதை நடத்துவதில் ஏற்படும் சிரமங்களைச் சிறிதளவும் எண்ணிப் பார்க்காது உடனடியாக இசைவு தந்து விட்டேன்.

இதனைத் தொடர்ந்து முருகக் கடவுளின் வழிபாட்டுத் தோற்றம் பற்றியும், வளர்ச்சி பற்றியும் அது ஒரு பிரதேச வழிபாடாக அரும்பி தேசிய வழிபாடாக வளர்ந்து, சர்வதேச வழிபாட்டு மரபாக மலர்ந்தது பற்றியும் விரிவாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இந்நிலையில் அமெரிக்க நாட்டின் தமிழ்ச் சங்கங்களின் 7வது ஆண்டு விழாவில் நான் சிறப்புரை ஆற்ற வேண்டும் என்றும், சிகாகோ, ஹூஸ்டன், டல்லெஸ், வாஷிங்டன் போன்ற நகரங்களில் முருக வழிபாடுபற்றிப் பேச வேண்டும் என்றும், அமெரிக்க நாட்டில் வாழும் நண்பர்களான டாக்டர் கணேசன், டாக்டர் அரசு செல்லையா ஆகியோரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட இடங்களில் முருக வழிபாடுபற்றிச் சிறப்புரை ஆற்றிய போது இத்தகைய பொருண்மை பற்றி மேலும் பல புதிய வெளிச்சங்களை நான் பெற முடிந்தது. இவற்றை அடிப்படையாக வைத்துப் பிறந்ததே செவ்வேளும் செந்தமிழும் என்ற இந்நூலின் முதல் கட்டுரை.

தொடக்க நிலையில் செவ்வேள் பற்றிப் பரிபாடலில் அமையும் இரண்டு பாடல்களை நான் விரிவாக ஆய்ந்ததன் பயனாகத் தோன்றியதே பரிபாடலும் பக்தி நெறியும் என்னும் தலைப்பில் அமைந்த இரண்டாவது கட்டுரை. இவ்விரு கட்டுரைகளும் முருக வழிபாடு பற்றிய சில புதிய சிந்தனைகளையும் அணுகுமுறைகளையும் வாசகர்களுக்குத் தந்து நிற்குமென்று உறுதியாக நம்புகிறேன்.

தமிழாய்வு வருகின்ற 21ஆம் நூற்றாண்டில் எப்படியிருக்கும் என்பதையும், சர்வதேச நிலையில் நடைபெறும் இத்தகைய ஆய்வில் ஆசியவியல் நிறுவனம் எப்படித் தன்னை இணைத்துக் கொண்டு செயல்படப் போகின்றது என்பதையும் நான் சிந்தித்ததன் விளைவாகத் தோன்றியனவே அடுத்த இரண்டு கட்டுரைகள்.

என்னோடு கடந்த எட்டு ஆண்டுகளாகத் தமிழ்ப் பணிபுரிந்து வந்ததோடு மட்டுமன்றிப் பெருமளவில் நடைபெறவிருக்கின்ற முதல் உலக முருகன் கருத்தரங்கு பற்றிய சிந்தனை தோன்றுவதற்கும் காரணமாக இருந்த முதுபெரும் தமிழறிஞர் முனைவர் முத்துச் சண்முகம் பிள்ளை அவர்கள் இக் கருத்தரங்கைக் காண்பதற்கு முன்னால் இம்மண்ணுலகைத் துறந்துவிட்ட செய்தி எங்களை எல்லாம் அளவற்ற துயரக் கடலுள் ஆழ்த்தியது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தன்னைப் பற்றி ஒரு மலர் வெளியிடும் முயற்சி நடைபெறுவதாகவும், அதற்கு நான் ஒரு கட்டுரை அவசியம் தரவேண்டும் என்றும் அவர் என்னை வற்புறுத்திக் கொண்டிருந்தார். அவரைப் பற்றிய என் எண்ணங்களை அல்லது மனப் பதிவுகளை அவரிடம் நான் எழுதிக் கொடுத்த போது அவர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். இக்கட்டுரையைப் பயின்று கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய, சொற்கள் தடுமாற, உணர்ச்சிவசப்பட்டு அநத முதறிஞர் நின்ற காட்சி இன்னும் என் கண்களை விட்டு அகலவில்லை. அவர் நினைவாக இந்த நூலைப் படைப்பதுடன், இக்கட்டுரையும் இந்நூலில் இடம்பெறுவது பொருத்தம் என்று நான் கருதினேன். இந்த நூலின் சிந்தனைகளில் பெரும்பாலானவை தோன்றுவதற்கு முழுமுதற் காரணமாக அமைந்தவர் டாக்டர் முத்துச் சண்முகம் பிள்ளை அவர்களே என்பதை மனதிற்கொண்டு இக்கட்டுரையினையும் இங்கு இணைத்துள்ளேன்.

இக்கட்டுரைகளை எழுதும்போது, பலநிலைகளில் உதவிய எனது வாழ்க்கைத்துணைவி திருமதி. இந்திரா சாமுவேலுக்கு என்நெஞ்சம் நிறைந்த நன்றி என்றும் உரியது.

இந்நூலின் கட்டுரைகளுடன் ஒரு சிலவற்றைப் படித்துக் கருத்துக்கள் வழங்கிய அறிஞர் வா. செ. குழந்தைசாமி அவர்களுக்கும், எனது பேராசிரியர் முனைவர் சோ.நா. கந்தசாமி அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். இக்கட்டுரைகளைப் படித்து கருத்து வழங்கிய பேராசிரியர் பெ. தியாகராஜன், மா. மதியழகன், எம்.எஸ். நாகராஜன் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன். இக்கட்டுரைகள் வடிவம் பெறுவதற்குப் பல நிலைகளிலும் துணைபுரிந்த டாக்டர். கி. ஜெய குமார் அவர்களுக்கும், கணிப்பொறி வாயிலாகக் கட்டமைத்துக் கொடுத்த கணிப்பொறி மைய அலுவலர் க. செல்லதுரை அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்

பட்டிருக்கிறேன். முருகன் பற்றிய விவாதங்களில் என்னுடன் பல நிலைகளில் கருத்துப் பரிமாற்றம் செய்த அமெரிக்க நாட்டு முருகவியல் அறிஞர் பாட்ரிக் ஹாரிகன் அவர்கள் எனது நன்றிக்கு என்றும் உரியவர். அழகிய முகப்போவியம் வரைந்தளித்த திரு அ.செ. நடராசன், அச்சுப்பிழைகளைத் திருத்துவதில் உதவி புரிந்த கு. செல்வலட்சுமி அவர்களுக்கும், சிறப்பாக அச்சிட்டு உதவிய மாணவர் மறுதோன்றி அச்சகத்தார் ஆகியோருக்கு என் வாழ்த்துக்கள் உரியன.

சென்னை, டாக்டர் ஜி. ஜான் சாமுவேல்

27-11-98.

## உள்ளே. . .


| | | |
|---|---|---|
| 1. | செவ்வேளும் செந்தமிழும் | 1 |
| 2. | பரிபாடலும் பக்தி நெறியும் | 19 |
| 3. | இருபத்தொன்றாம் நூற்றாண்டில் தமிழ் ஆய்வு | 50 |
| 4. | ஆசியவியல் நிறுவனமும் தமிழ்ப் பணிகளும் | 65 |
| 5. | இங்கும் ஒரு தமிழ்த்தாத்தா | 76 |
| | சொல்லடைவு | 85 |

# 1. செவ்வேளும் செந்தமிழும்

## சமயமும் பண்பாடும்

தமிழ் மண்ணில் அரும்பிய முருக வழிபாடு காலப்போக்கில் வட இந்தியாவில் தோன்றிய கந்தன், கார்த்திகேயன் தொடர்பான புராண வழிபாட்டு மரபுகளின் கூறுகளையும், கிரேக்கக் கடவுளான டயோனிசஸ் பற்றிய சில புராண மரபுகளையும் அரவணைத்துக் கொண்டு அனைத்திந்திய வழிபாட்டு மரபாக, ஓரளவிற்கு சர்வதேச மரபாக இன்று வளர்ந்துள்ளது நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்துகின்றது. முருகன், கந்தன் பற்றிய புராண, சமய, பண்பாட்டு மரபுகளில் தமிழ்நாட்டுப் பிரதேச மரபுகளும், இந்திய நாட்டுக்கே பொதுவாக உரிய தேசிய மரபுகளும் இணைந்து சங்கமமாவதைக் காண்கின்றோம்.

கடவுளர்கள் மனிதனின் வரலாற்றுப் பண்பாட்டுப் பின்னணிகளைப் பிரதிபலிப்பவர்களாகவும், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் மாற்றங்கள் பல ஏற்படும்போது, அச்சமுதாயத்தினர் வழிபடும் கடவுளர்கள் தொடர்பான சமய, புராண, வழிபாட்டு மரபுகளிலும் மாறுதல் ஏற்படுவது இயல்பே என்றும் கருதுவர். இந்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தின் பிரதிநிதியாகவும், பிரதிபலிப்பாகவும் திகழும் முருகக் கடவுளின் வழிபாட்டில் காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றம் தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் அல்லது வளர்ச்சி நிலைகளின் பிரதிபலிப்பாகவே அமைந்துள்ளன. எனவே தமிழ்க் கடவுளாகிய முருகன் பற்றிய ஆய்வு தமிழ்ச் சமுதாயம் பற்றிய ஆய்வாகவே அமையும். முருக வழிபாட்டின் தோற்ற வளர்ச்சி நிலைகள் தமிழ்ப் பண்பாட்டின் தோற்ற வளர்ச்சி நிலைகளின் பிரதிபலிப்பாகவே அமைந்துள்ளதால் முருக வழிபாடு பற்றி நாம் மேற்கொள்ளும் எந்த வரலாற்றுநிலை ஆய்வும்,

சமூகவியல்ஆய்வும், சமய மரபுகளின்ஆய்வும் தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சி நிலை பற்றிய ஆய்வாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

## தமிழ் மண்ணும் தமிழ்க் கடவுளும்

தமிழ்க் கடவுளான முருகனின் வழிபாடு இந்திய நாட்டிற்குரிய ஒரு பொது வழிபாடாக இன்றைய நிலையில் எழுச்சிபெற்று முருகன் ஒரு தேசியக் கடவுளாகப் பரிணமித்தபோதிலும் இக்கடவுள் பற்றிய அடிப்படைக் கூறுகள் தமிழ் மண்ணில் பிறப்பெடுத்தனவாகவும், தமிழ்ப் பண்பாட்டிற்கே உரியனவாகவும் திகழ்கின்றன. முருக வழிபாடு சிந்துவெளி நாகரிகத்தில் சிறப்பிடம் பெற்றிருந்ததற்குரிய பல தடயங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. எனினும், தமிழ்நாட்டு மரபில் முருகன் பற்றிய முதல் ஏட்டிலக்கியக் குறிப்பாக நமக்குக் கிடைப்பது "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற தொல்காப்பிய வரியேயாகும். இந்நூல் முருகனைச் சிவப்பு நிறம் பொருந்தியவன் என்ற பொருளில் "சேயோன் என்று சுட்டுவதோடு அவனை மலைநிலமான குறிஞ்சிக்கு உரிய நிலக்கடவுளாகச் சுட்டுகின்றது. முருகனது சிவப்பு நிறத்தை மனத்திற்கொண்டு செவ்வேள் என்ற பெயரும் பழந்தமிழ் இலக்கியத்தில் அவனுக்குத் தரப்பட்டுள்ளது. அந்திப்பொழுதில் செக்கர் வானத்துப் பின்னணியில் நிரைநிரையாகப் பறந்து செல்லும் வெண்ணிறக் கொக்குகளின் வரிசையைச் செவ்வேளின் மார்பிலுள்ள வெண்ணிறம் பொருந்திய கடப்பம்பூ மாலையோடு ஒப்பிட்டு 'நெடுவேள் மார்பின் ஆரம்போல' என்று அகநானூறு விளக்கியுரைக்கும். இங்குச் செவ்வேளை நெடுவேளாக அகநானூறு சுட்டுவது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நினைப்பதைச் செய்துமுடிக்கும் மனத்திண்மை கொண்டவனாக முருகனைச் சங்கப் பாடல்கள் சித்திரிக்கும். "முருகொத்தீயே முன்னியது முடித்தலின்" என்ற புறநானூற்று வரிகள் முருகக்கடவுளின் மனத்திண்மையினைத் தெளிவுபடுத்திச் செல்லும். கடலின் நடுவில் சஞ்சரித்துத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கடம்பர்கள் என்னும் கடற்கொள்ளைக் கூட்டத்தினரைச் சேர மன்னன் முறியடித்த செயலை நடுக்கடலில் கிரவுஞ்ச மலையில் வாழ்ந்த சூரனைச் சுடரிலை நெடுவேலினால் முருகக்கடவுள் பிளந்த செயலோடு பதிற்றுப்பத்து ஒப்பிட்டுப் பேசும்.

"நளி இரும் பரப்பின் மாக் கடல் முன்னி,
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேர் இசை . . ."

(பதிற். - 2.11)

என்பது பதிற்றுப்பத்து வரிகள்.

சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரையில் முருகனைப் பற்றிய குறிப்புக்கள் அகநானூற்றில் பெருமளவிற்கு இடம்பெறுகின்றன (அகம். 22-11; 28-6; 118-5; 137-8; 138-10; 181-6; 232-14; 272-13; 288-4). இதையடுத்து ஐங்குறுநூற்றிலும் (245-3; 247-3; 249-2; 308-4), நற்றிணையிலும் (34-11; 47-10; 82-4; 225-1) இவனைப் பற்றிய செய்திகள் அதிக அளவில் உள்ளன. குறுந்தொகை (362-1), பட்டினப்பாலை (37), பதிற்றுப்பத்து (26-12), புறநானூறு (56-14; 259-5), மதுரைக்காஞ்சி (38,181,724) ஆகியனவும் முருகன் பற்றிய பல குறிப்புக்களைத் தருகின்றன. திருமுருகாற்றுப்படையும், பரிபாடலில் அமையும் செவ்வேள் பற்றிய பாடல்களும் முருகன் புகழ்பாடும் முழுமுதல் படைப்புக்களாக உள்ளன. இவனைச் செவ்வேளாகப் பட்டினப்பாலையும் (154), பரிபாடலும் (5-13) சுட்டுகின்றன. முருகன் பற்றிய புராண நிகழ்ச்சிகளில் சூரனைப் போரிட்டு முருகன் வெற்றி கொண்டமை, வள்ளியோடு கொண்ட களவு மணம் ஆகிய அடிப்படைக் கூறுகள் (motifs) முற்றிலும் தமிழ் மண்ணிற்கே உரியன. வடநாட்டுக் கந்தக்கடவுள் தாரகன் என்னும் அரக்கனோடு போரிட்டு வெற்றிகொள்ள, தமிழ்க் கடவுளான முருகன் சூரனோடு போரிட்டு வென்றதாகத் தமிழ்ப் புராணங்கள் உரைக்கும்.

## வடவர் நெறியும் தமிழ் மரபும்

சமய மரபில் வடவர்நெறியும் தமிழ்நெறியும் இணைந்து சங்கமம் ஆனபோது ஒரே கடவுள் வடநாட்டுப் பெண்தெய்வம் ஒன்றையும் தமிழ்நாட்டுப் பெண்தெய்வம் ஒன்றையும் மனைவியராக ஏற்பது போன்று புராணங்களைப் படைக்கும் இயல்பினைக் காணலாம். இந்த மரபுக்கு ஏற்ப கந்தன் பற்றிய வடவர்நெறியும், முருகன் பற்றிய தமிழர் நெறியும் இணைந்தபோது முருகனும் தமிழ்ப் பெண்ணான வள்ளியுடன் வடநாட்டுப் பெண்தெய்வமான தெய்வயானையினையும் மணக்கின்றான். இவர்களுள் தமிழ்ப் பெண்ணான வள்ளி முருகனின் அடியவர்களைக்

கவர்ந்த விருப்ப தெய்வமாகத் திகழ்கின்றாள். வள்ளி - முருகன் உறவு கடவுளை எய்தத்துடிக்கும் ஆன்மாவின் ஏக்கத்துடிப்பின் உருவக வெளிப்பாடாக அமைகின்றது. தமிழ்நாட்டு முருகனும், வடநாட்டுக் கந்தனும் இணையும் இந்த இணைப்பு கி.பி. 4ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்டிருக்கலாம் என்பதை உறுதிப்படுத்தும் இலக்கியச் சான்றுகள் ஏராளம் உள்ளன.

முருகனை அழகு, இளமை, இனிமை ஆகிய பண்புகளோடு பழந்தமிழர் இணைத்துக் கண்டனர். அவனது அழகை 'மணங்கமழ் தெய்வத் திளநலம்' என்று நக்கீரர் விளக்குகின்றார். மலை நிலத்தில் என்று தமிழர் வாழ்வு தொடங்கியதோ அன்றுமுதல் இன்றுவரை முருகன் தமிழ் கடவுளாகத் திகழ்ந்து வருகின்றான் என்பார் திரு. வி. க . இயற்கை அழகான 'கைபுனைந்தியற்றாகவின்பெறு வனப்புக்குரிய அக்கடவுளை மலைகளில் வைத்து வழிபடுவதே பொருத்தம் எனக் கருதிக் குன்று தோறும் அவனுக்குத் தமிழர் கோயில் கட்டினர்.

## நிலக்கடவுளின் பெருந்தெய்வ நிலை

பழந்தமிழ் இலக்கியத்தில் சேயோன், செவ்வேள், வேலன் என்றெல்லாம் அழைக்கப்பட்ட குறிஞ்சிநிலக் கடவுளான முருகன் வட நாட்டுக் கந்தன்-சுப்பிரமணியனோடு இணைந்து தேசியக் கடவுளாக, பெருந்தெய்வமாக மாறுவதை இந்த சமய வழிபாட்டு மரபுகளின் இணைப்பு தெளிவுபடுத்தும். தமிழ்க் கடவுளான முருகன் தமிழ் மரபுப்படி வேடர்குலப் பெண்ணான வள்ளியோடு களவு மணம் புரிகின்றான். அழகு, இளமை, மாறா இன்பம் என்னும் நுண் பொருட்களின் குறியீடாகக் கருதப்படும் இக்கடவுள் இனக்குழு வேடர் மரபிலிருந்து, போர்க்கடவுளாகவும், தமிழர்களின் பொதுக்கடவுளாகவும், தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் புரவலனாகவும் படிப்படியாகக் காலந்தோறும் உயர்த்தப்படுவதைத் தமிழ்நாட்டின் சமய, இலக்கிய வரலாறு தெளிவுபடுத்தக் காண்கின்றோம். இனக்குழுக் கடவுளாகவும், வேடர்களின் கடவுளாகவும் இருந்த முருகன் உயர்குடிமக்களின் கடவுளாக வளர்ச்சிபெறுவதைத் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்ற சங்க நூல்கள் மிகத் தெளிவாகத் தெரிவிக்கும். இவ்விரு நூல்களும் வடமொழிக் கந்தன்-சுப்பிரமணியனையும் தமிழ்நாட்டு இனக்குழுக்

கடவுளான வேலன்-முருகன் மரபினையும் இணைத்து ஒரு புதிய சமய மரபினைத் தமிழகத்தில் தோற்றுவித்த முதல் நூல்களாகக் காட்சிதருகின்றன.

இக்காலக் கட்டத்தில் முருகன் ஆறுமுகக்கடவுளாக உயர்குடியைச் சார்ந்த அரசர்களாலும் வீரர்களாலும் ஆகம நெறிப்படியமைந்த கோயில்களுக்குள் வைத்து வணங்கப்படுவதையும், சாதாரண மக்களால் கோயில்களுக்கு வெளியில் சிவப்புத் துணியாலும், சிவப்பு மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டு, இரத்தப்பலியுண்ணும் வேல்வடிவில் வணங்கப்படுவதையும் ஒருங்கே காணலாம். முருக வழிபாட்டில் சான்றோர் மரபு, சாதாரணமக்கள் மரபு என இரு மரபுகள் தோன்றிய நிலையினை இது தெளிவுபடுத்தும். நோயை நீக்க அல்லது அணங்கினை அகற்ற வெறியாடும் மரபு சாதாரண மக்களிடையே, குறிப்பாக மலைவாழ் மக்களிடையே முருகன் பற்றிய சமய மரபாகத் தொடர்ந்து நீடித்த போதிலும் மறு உலகத்தையும், அருளையும், அன்பையும் தரும் பெருங்கடவுளாக அவன் காலப்போக்கில் பரிபாடலிலும் திருமுருகாற்றுப்படையிலும் வளர்ச்சி பெற்றுள்ளான்.

> "- - - - யாஅ மிரப்பவை
> பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
> அருளும் அன்பும் அறனும் மூன்றும்"

என்ற பரிபாடல் வரிகள் முருகன் பெருந்தெய்வமாக வடவர் பண்பாட்டுக் கலப்போடு வளர்ந்த நிலையைக் காட்டும்.

சங்க மரபில் முருகன் அழகிய பெண்களிடத்தில் அணங்கினைத் தோற்றுவிப்பவனாகவும், அவ்வணங்கினை நீக்குபவனாகவும் காட்டப்பட்டுள்ளான். இந்தத் தொன்மையான மரபு,

> "வெறிகமழ் வெற்பனோய் தீர்க்கவரும் வேலன்
> வேலன் மடவன் அவனினும் தான்மடவன்
> ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்"

(சிலம்பு.- குன்றக்குரவை 13)

என்ற சிலப்பதிகார வரிகளுள் சற்று எள்ளலுடன் விமர்சனம் செய்யப்படுவதைக் காணலாம். முருகனது வழிபாட்டிடம் வேலியால் சூழப்பட்ட மணல் பரப்பிய தரையாக அமையும். வேல்

நாட்டப்பட்டுள்ள இந்த வெறியாட்டுக்களம் வேற்கோட்டம் என்றும் அழைக்கப்படும். மறியின் இறைச்சியும், இரத்தமும், கள்ளும் அவனுக்குரிய பலிப் பொருட்களாகும். கடம்பும், வேங்கையும் முருகனோடு தொடர்புடைய மரங்களாகச் சுட்டப்படுகின்றன. வேங்கை மரத்தின் மஞ்சள் நிறப் பூக்களின் மலர்ச்சி காதலர்கள் கற்பு மணம் புரியத் தயாராகித் திருமண நாள் குறிப்பதைக் காட்டும் குறியீடாகும். வள்ளியின் முன்னர் வேங்கை மரமாக முருகன் நிற்பதைப் புராணங்கள் நயம்படச் சித்திரிக்கும். வேங்கை மரத்தடியில் நிற்கும் கண்ணகியை,

'மலைவேங்கை நறுநிழலின் வள்ளி போல்வீர்'

(சிலம்பு. - குன்றக்குரவை.1)

என்று குறப்பெண்கள் குறிப்பிடுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. முருகன் காதலனாகவும், மணமகனாகவும் திகழ்வதை வேங்கை மரம் குறியீடாகக் காட்டிநிற்கின்றது.

## முருகனின் புதிய தந்தை

முருக வழிபாடு மலைப்பகுதிகளிலிருந்து நகர்ந்து நகரங்களில் பரவியபோது அதன் வடிவம் மேலும் பல மாறுதல்களைப் பெற்றது. காஞ்சிமரப் பூக்களைச் சூடி மதுரை நகரத்து வீதிகளில் கடப்பம் மலர் சூடிய முருகனுக்காகப் பெண்கள் ஆடிப்பாடுவதை மதுரைக்காஞ்சி விளக்கும். திருமுருகாற்றுப்படையில் முருகனின் வழிபாடு நிகழ்த்தும் வேலனும் பெண்களோடு இணைந்து ஆடுவதைக் காணலாம். இவை போன்ற நிலைகளை ஏனைய சங்க நூல்களில் காணமுடியவில்லை. வெற்றிதரும் தாய்த்தெய்வமான கொற்றவையின் மைந்தனாக, பழையோள் குழவியாக, கொற்றவைச் சிறுவனாகத் தமிழ் முருகன் வடவர் புராண மரபு கலப்பதற்கு முற்பட்ட காலத்தில் கருதப்பட்டான். பழைய தமிழ் மரபில் முருகனின் தந்தை யார் என்பது சுட்டப்படவில்லை. பழைய தாய்வழிச் சமுதாயத்தில் ஆண்களின் துணையின்றிப் பெண்கள் குழந்தை பெறுவதாகக் கருதப்படும் மரபின் ஒரு பகுதியாக, இந்தத் தமிழ் மரபின் அடிக்கருத்துத் தோற்றம் பெற்றிருக்கலாம் என்று கருத வாய்ப்புக்கள் உள்ளன.

பின்னர்வந்த தமிழ்நாட்டுப் பௌராணிகர்கள் (myth- makers) முருகனுக்குத் தந்தையைத் தேட முற்பட்டபோது, வடமொழி மரபுகள் கந்தனின் தந்தையாகக் குறிப்பிடும் அக்கினி அல்லது உருத்திரனை ஏற்றுக் கொள்ளாது, தென்னாடுடைய சிவனாக, பெருங்கடவுளாகத் தமிழகத்தில் வளர்ச்சி பெற்ற சிவனையே அவனது தந்தையாக ஏற்றுக் கொண்டனர். வடமொழி மரபுப்படி கந்தனுக்குத் தந்தை (அக்கினி / உருத்திரன்) உண்டே தவிர பெற்றெடுத்த தாய் எவரும் கிடையாது. இது முருகன் - கந்தன் பற்றிய மரபில் தமிழ்நாட்டுச் சமய மரபுகளுக்கும் வடநாட்டு மரபுகளுக்கும் இடையே காணப்படும் அடிப்படை வேறுபாடாக அமைந்துள்ளது. தமிழ் முருகன் தாயைப் பெற்றுத் திகழ, வடநாட்டுக் கந்தன் தந்தையை மட்டுமே பெற்றுள்ளான்.

முருகனுக்கும் வேடர் குலத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு இலங்கை மக்களின் வழிபாட்டு மரபிலும் ஆழமாக வேருன்றியுள்ளது. இங்கு வாழும் பழைய இனக்குழு மக்களான வேடர்கள் கதிர்காம மலையில் வாழும் கடவுளான முருகனைக் குலக் கடவுளாக வழிபடுகின்றனர். இந்தக் கதிர்காமத்தினைத் தக்கண கயிலாயம், என்று அழைக்கும் மரபும் உள்ளது. இந்தத் தக்கண கயிலாயமும், வட நாட்டுக் கயிலாயமும் முருகன் சென்றுவந்த புனிதப் பயணத் தலங்களாகப் (Sacred Geography) புராண மரபில் மலர்ச்சி பெறுகின்றன. இலங்கையிலுள்ள புராண மரபுகள் முருகன் இங்குள்ள வேடர் தலைவனின் மகளாகிய வள்ளியை மணந்ததாகக் குறிப்பிடும்.

## தமிழ்க் கடவுளும் கிரேக்கத் தெய்வமும்

தொடக்க கால முருக வழிபாடு கிரேக்கக்' குமரக் கடவுளான டயோனிசஸ் வழிபாட்டோடு பல நிலைகளிலும் தொடர்புடையது. டயோனிசசைப் போன்று முருகக் கடவுளும் மலைகளோடு தொடர்புடையவனாகக் காட்சி தருகின்றான். இவ்விரு கடவுள்களும் வேடர்களோடு தொடர்புடையவர்கள்; மயக்கும் கள்ளோடு இவர்கள் இணைத்துப் பேசப்படுகின்றனர்; மரத்தோடும், கொடிகளோடும் (வள்ளி) இணைத்து நோக்கப்படுகின்றனர். இவ்விருவருமே குமரக் கடவுள்கள்; இவ்விருவரும் வெறியாட்டோடு தொடர்புடையவர்கள். கதிர்காம முருகக் கடவுளுக்கும் டயோனிசசுக்கும் இடையேயுள்ள தொடர்பு விரிவாக

ஆராயப்பட்டுள்ளது. கந்தன் பற்றிய வடநாட்டு மரபு இந்தியாவிற்குப் படையெடுத்து வந்த கிரேக்க மன்னன் அலெக்சாண்டரோடு தொடர்புடையது என்ற கருத்தும் நிலவுகின்றது. அலெக்சாண்டர் இஸ்கந்தர் என்று சுட்டப்படுவதையும், டயோனிசசுடன் அவன் இணைத்துப் பேசப்படுவதையும் இதற்குச் சான்றாகக் காட்டுவர்.

## முருகும் சூரும்

பழைய தமிழர் மரபில் முருகனின் எதிர்சக்தியாக சூர் அல்லது அணங்கு சுட்டப்படுகின்றது. நோய் செய்யும் அணங்கு அல்லது சூர் என்னும் தீய சக்தியைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் முருகனுக்கு உண்டு என்று பழைய தமிழ்ச் சமுதாயம் நம்பியது. தீமை செய்யும் சக்தியாகக் கருதப்படும் அணங்கினை அழகிய பெண்ணாகச் (மோகினி) சுட்டும் மரபும் உள்ளது. இவற்றின் தொடர்ச்சியாகவே 'அணங்குகொல் ஆய்மயில்கொல்', 'தாக்கணங்கு', 'தமிழணங்கு' போன்ற பொருள் விரிவுகள் (Semantic expansion) காலப்போக்கில் ஏற்பட்டன. அச்சம் தரும் தீய ஆற்றலான அணங்கு என்னும் பொருள்படும் சூர் என்ற தமிழ்ச் சொல்லுடன் 'பத்மன்' என்ற வட சொல்லும் இணைந்து முருகனின் எதிரியான சூரபத்மன் பற்றிய பல கதைகள் காலப்போக்கில் உருப்பெற்றன. அணங்கு என்பது அழகு, மோகினி என்பன போன்ற பொருளைக் காலப்போக்கில்தான் பெற்றிருக்க வேண்டும் என்பதை இலக்கியச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. தொடக்க நிலையில் அணங்கு அல்லது சூர் என்பது அச்சம், கொடுமை போன்ற பொருட்களிலேயே வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தமிழிலக்கியம் தெளிவுபடுத்தும். சூர் என்ற சொல் முதன்முதலாக சூரபத்மனைச் சுட்டும் நிலையைப் பதிற்றுப்பத்தில் காண்கிறோம்.

## போர்க்கடவுளின் படை வீடுகள்

புனிதத்தலங்கள் பற்றிய கருத்துக்கள் எழுந்தபோது கோயில் வழிபாட்டுமுறைகள் தென்னிந்தியாவின் பல இடங்களிலும் பெருகின. ஆகம முறைப்படி கோயில்கட்டும் மரபு கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் பெருவாரியாகத் தோற்றம் பெற்றிருக்கலாம். மக்களின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளின் மையமாகக் கோயில்கள் செயல்படும் நிலை காலப்போக்கில் அரும்பத் தொடங்கியது. இந்தப் பின்னணியில்

ஏனைய தெய்வங்களைப் போன்று முருகனுக்கும் ஏராளமான கோயில்கள் எழுந்தன. இவற்றுள் அறுபடைவீடுகள் குறிப்பிடத்தக்கன. முருகனின் வேற்படை வைத்து வழிபடப்பட்ட வேற்கோட்டங்களே இப்படை வீடுகள் என்று கருதவும் வாய்ப்புக்கள் உள்ளன. போர்த் தெய்வமான முருகன் எதிரியைத் தாக்கப் பயன்படுத்திய இடங்களாகவும் இப்படைவீடுகள் கருதப்படுகின்றன.

## முருகனும் கந்தனும்

தற்போதுள்ள முருகன்-கந்தன் இணைப்பு கி.பி. நான்காம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று கருத வாய்ப்புக்கள் உள்ளன. இக்காலக் கட்டத்தில் வடமொழிப் புராணங்களின் செல்வாக்கு தமிழகத்தில் மிகுந்திருந்தது எனலாம். இந்த இணைப்பால் தோன்றிய முருகனைத் திருமுருகாற்றுப்படையும், பரிபாடலும், சிலப்பதிகாரமும் நமக்குக் காட்டுகின்றன. முருகன் மயில்மீது ஏறிவருவது, அவனது திருமுகம் சூரியனைப் போன்று ஒளிவீசுவது, நீலமயில் மீது இவர்ந்து வரும் முருகன் நீலக்கடல் மீது தோன்றும் எழுஞாயிறு போன்று காட்சி தருவது போன்ற பல சொல்லோவியங்களை இப்படைப்புக்களில் காணலாம். நிலக்கடவுளாகக் காட்சிதந்த முருகன் பெருந்தெய்வம் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்ட நிலையில் அவனது தோற்றத்தை முழுப்பிரபஞ்சமும் தழுவிய கோலமாகத் திருமுருகாற்றுப்படை கீழ்க்கண்டவாறு காட்சிப்படுத்துகின்றது.

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டா அங்கு
ஓ அற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி
உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன் தாள்
செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்"

(திருமுருகு. 1-6)

என்பது திருமுருகாற்றுப்படையின் தொடக்க வரிகள். திருப்பரங்குன்றம் போன்ற படைவீடுகள் பற்றிய அற்புதக்காட்சிகளையும் இப்படைப்புக்கள் சித்திரித்துக் காட்டுகின்றன. பல்லவர் காலத்தில் இக்கலப்பு முழுவடிவம் பெற்று, சிவன், பார்வதி ஆகியோர் இடையில் முருகன் வீற்றிருக்கும்

சோமஸ்கந்தக் கலைவடிவங்கள் பெரும்புகழ் பெற்றன. இவை பற்றிய குறிப்புக்கள் ஏனைய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய சிற்பங்களில் முருகனுடன் விநாயகர் இடம் பெறாததும் குறிப்பிடத்தக்கது.

## சூரனும் சுடரிலை நெடுவேலும்

முருகன்-சூரன் முரண்பாடு வடமொழிக் கந்தன் பற்றிய புராண மரபுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட தமிழ் மரபாக அமைந்துள்ளது. வடநாட்டுக் கந்தனின் பகைவன் தாரகாசுரனேயன்றி சூரன் அல்லன் என்பது குறிப்பிடத்தக்கது. கிரவுஞ்ச மலையில் வாழும் தாரகனை ஒளிக் கற்றையால் கந்தன் பிளந்ததாக வடமொழி மரபுகள் கூற, சூரனை வேலால் முருகன்/கந்தன் பிளந்ததாகத் தமிழ் மரபு கூறும்.

சூரனை மனிதனிடமுள்ள கொடிய சக்தி அல்லது அழிக்கும் சக்தியின் குறியீடாகக் கொள்வர் தத்துவ நோக்காளர். இத்தகைய அழிக்கும் சக்தியைச் சமநிலைப்படுத்தும் ஆற்றலாக மாறா இளமையும், குறையா வீரமும் கொண்ட முருகக் கடவுள் காட்சி தருகின்றான். பகையை வேரறுக்கும் அறிவென்னும் வேலை எறிந்து அவன் சூரனது கொடுமையை அழிக்கின்றான். அச்சம், வெகுளி போன்றவற்றை ஒழிக்கும் சக்தியாக அவனது வேல் அமைந்துள்ளது. இதுவே முருகன் பற்றிய பௌராணிக மரபுகள் உணர்த்தும் அடிப்படை உண்மை.

> **"அஞ்சும்முகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்**
> **வெஞ்சமரில் அஞ்சல் எனவேல்தோன்றும் . . ."**

(திருமுருகு. தனிப்பாடல் 6)

என்ற வரிகள் இதனையே உணர்த்தும்

சூர் என்பதைப் பிரபஞ்சத்திலுள்ள குழப்பம் (cosmic chaos), ஒழுங்கற்றநிலை, கொடூரத்தன்மை, பகைமை என்பனவற்றின் குறியீடாகவும் கொள்வர். சூரன்வதையை, ஒழுங்கற்ற நிலையை ஒழித்து ஒழுங்கையும், கொடூரத்தன்மை, பகைமை ஆகியவற்றை வென்று அன்பை நிலைநாட்டும் தெய்வீகச் செயலாகவும் விளக்குவர். முருகனின் வேல் சூரனை ஒழித்து ஒழுங்கை நிலை நாட்டுகின்றது. இருளின் வாயிலிருந்து ஒளியை மீட்கின்றது. இறுதியில் சூரனுக்கும் அது

மீட்பு அளிக்கின்றது. இந்நிலையில் சூரன்வதை என்பது கால இட எல்லையைக் கடந்த ஓர் உலகப் பொது நிகழ்வாகவே அமைந்துள்ளது.

பரசுராமன் மழுவைக் கடலில் எறிந்து புதிய நிலமான கேரளத்தைத் தோற்றுவிக்கின்றான். நிலந்தருதிருவின் பாண்டியன் வேலைக் கடலில் எறிந்து கடல் விழுங்கிய நிலத்தை மீட்டுத் தருகின்றான். இந்தப் பகையை மனதில் வைத்துக் கொண்டு பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோட்டினையும் கடல் கொண்டதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடும்.

**"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது**
**பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள "**

(சிலம்பு-மதுரைக் காண்டம் 19-21)

என்னும் சிலப்பதிகார வரிகள் இங்குச் சுட்டத்தக்கன. கிறிஸ்தவத் திருமறையின் பழைய ஏற்பாட்டில் வரும் மோசே என்பவன் தனது கோலைக் கடலின் மீது நீட்டி நிலப்பாதையைத் தோற்றுவிக்கிறான். சிங்களப் புராண மரபில் வரும் கயவாகு மன்னனும் கோலால் கடலைப் பிளக்கின்றான். முருகன் வேலை எறிந்து கடலில் நிலப் பகுதியைத் தோற்றுவித்து மாமரமாக நடுக்கடலில் நின்ற சூரனைப் பிளக்கின்றான். இவை போன்ற புராண மரபுகளை உலகின் பல்வேறு சமய இலக்கிய மரபுகளிலும் நாம் காண்கின்றோம். இதனை புதியவழி காண கடல்மீது மேற்கொள்ளும் தாக்குதல் (Creative attack upon the Ocean) என்று விளக்குவார் பேராசிரியர் டேவிட் சுல்மன் அவர்கள்.

சூரனை முற்றிலும் அழிக்காது அவனைச் சேவலாகவும் மயிலாகவும் முருகன் பிறக்கச் செய்கின்றான். இயற்கையின் படைப்பை அழிக்கமுடியாது; மாற்றவோ, அடக்கவோ, மறுபடியும் பிறப்பிக்கவோ, மடைமாற்றம் (sublimation ) செய்யவோ மட்டுந்தான் முடியும் என்பதை இது காட்டும். அரக்கனின் கொடிய தன்மை, பயன்படும் நல்ல பண்பாக இங்கு மாற்றப்படுகின்றது அல்லது மடைமாற்றம் செய்யப்படுகின்றது என்று கூறுவதே பொருந்தும். சூரன்வதையின் குறிக்கோளைக் கச்சியப்பர் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்.

"தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்"
(கந்த. சூரபன்மன் வதைப் படலம் 496)

## வள்ளியும் தமிழ்க் காதல் மரபும்

வடமொழி மரபில் கந்தன் ஒரு பிரமச்சாரியாகவோ, தேவசேனை என்ற பெண் தெய்வத்தின் கணவனாகவோ சித்திரிக்கப்பட்டுள்ளான். வடநாட்டுக் கார்த்திகேயன் முழுநிலையில் பிரமச்சாரியாகவே உள்ளான்; பெண்கள் அவன் பக்கம் செல்லவே அஞ்சுவர். ஆனால் தமிழில் உள்ளத்தைக் கவரும் அழகிய வேட்டுவப் பெண்ணான வள்ளியின் உள்ளங்கவர் கள்வனாக, காதலனாக முருகன் காட்டப்படுகின்றான். இந்தக் களவுக் காதலின் ஒவ்வொரு கூறும் பழைய தமிழ் அகப்பாடல் மரபுகளைப் பின்பற்றி அமைவது குறிப்பிடத்தக்கது.

வேடர்குலப் பெண்ணான வள்ளி பன்னிரெண்டு வயதை எட்டியதும் பரண்மீது வீற்றிருந்து தினைப்புனக் காவலை மேற்கொள்கின்றாள். அகப்பாடல்களில் தலைவன் தோன்றுவதைப் போன்று முருகன் தோன்றி அவள்மீது களவுக் காதல் கொள்கின்றான். மடலேறுதல், காமநோய், குறிசொல்லல், வேலன் வெறியாடுதல் போன்ற அனைத்து அகப்பாடல் மரபுகளும் இக்களவுக் காதல் நிகழ்ச்சிகளில் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இக்கதை நிகழ்ச்சிகள் சங்ககால மனிதக் காதல் நிகழ்ச்சியான புலநெறிவழக்கினை அடித்தளமாகக் கொண்டு பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பிறப்பெடுத்துள்ளன. இந்த நிகழ்ச்சிகள் அல்லது மரபுகள் சமஸ்கிருத, அல்லது வட இந்தியப் புராணமரபில் அறவே இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வடவர் மரபு குறிப்பிடும் கந்தன்-தெய்வயானைத் திருமணம் பிராமண முறைப்படி அமைந்த சடங்காச்சாரங்களைக் கொண்ட திருமணமாக உள்ளது. பரிபாடல் காட்டும் முருகன்-வள்ளி திருமண மரபு ஆரியத் தாக்கத்துக்கு முற்பட்ட தமிழ் மரபாகும். முருகன்-தெய்வயானை திருமணத்தினைத் தமிழிலக்கியத்தில் முதன்முதலாகத்

திருமுருகாற்றுப்படையில்தான் நாம் சந்திக்கின்றோம். தமிழிலக்கியங்களில் ஆங்காங்கே இடம்பெறும் வள்ளி - தெய்வயானை முரண்பாடு அல்லது மோதல் ஆரிய திராவிடப் பண்பாட்டு மோதலாகவே காட்சி தருகின்றது. தெய்வயானை - வள்ளி இணைவு கந்தன், குமரன், கார்த்திகேயன், முருகன் ஆகிய கடவுளர்களின் இணைவின் மறுபக்கமாக அல்லது ஒரு கூறாக அமைந்துள்ளது. மேற்கூறிய சமயப் பண்பாட்டுக் கலப்பின்போது தமிழ் முருகன் மீது வடமொழிக் கந்தன் பற்றிய மரபுகள் மட்டுமன்றி, கார்த்திகேயன், தெய்வயானை தொடர்பான அனைத்து மரபுகளும் திணிக்கப்பட்டுள்ளன அல்லது இணைக்கப்பட்டுள்ளன என்பதே பொருந்தும். தமிழ் முருகனும் வடநாட்டுக் கந்தனும் பெரும்பாலான இடங்களில் ஒன்றாக இணைந்து இரண்டறக் கலந்து சங்கமமாகின்றனர். இத்தகைய இணைவிலும் தமிழ்ச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளாத புராண மரபுகள் தவிர்க்கப்பட்டுள்ளன அல்லது மாற்றியமைக்கப்பட்டுள்ளன எனலாம்.

### வள்ளி தெய்வயானை இணைப்பு

வள்ளியும் தெய்வயானையும் கந்தன் முருகன் போன்று ஒன்றாக இணைந்து ஒரு பாத்திரமாக உருவாக முடியாத நிலையில் வள்ளி பற்றிய தமிழ் மரபின் நிகழ்வுகள் கந்தன் பற்றிய வடவர் மரபோடு அப்படியே தனித்தன்மை இழக்காமல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாகத் தமிழ் மரபான வள்ளி-முருகன் கதையை வடவர் மரபு அப்படியே கந்தன் பற்றிய மரபுகளோடு அதிக மாறுதல்கள் இன்றி இணைத்துக் கொண்டுள்ளது எனலாம். எனினும் புராண மரபுகளில் பிராமண சடங்காச்சாரங்களின்படி முருகன் வள்ளியைத் திருமணம் செய்து கொள்வதாகக் காலப்போக்கில் கதை மாற்றப்பட்டுள்ளதோடு வள்ளியும் தெய்வயானையும் திருமாலின் குழந்தைகள் என்ற புராண ஒருங்கிணைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வடவர்-திராவிட சமய மரபுகளின் இணைப்பின்போது ஒரு கடவுளுக்கு இரு மனைவியர்கள் அமைவதாகப் புராணங்கள் அமைப்பது இந்தியச் சமயப் பொதுமரபாக உள்ளது. பொன்னிறம் அல்லது வெண்ணிறங் கொண்ட வடநாட்டுப் பெண்ணோடு கருநிறங்கொண்ட தமிழ்ப் பெண்தெய்வமும் கடவுளருக்கு மனைவிகளாக்கப்படுகின்றனர்.

வெங்கடேசுவரன் வெண்ணிறச் சீதையுடன் (வைதேகி) கரியநிற பத்மாவதியினையும், கண்ணன் பொன்னிறங் கொண்ட ருக்மணியோடு கரியநிற நப்பின்னையினையும், சிவன் பொன்னிறங் கொண்ட கௌரியுடன் கரிய நிறக் காளியினையும் மனைவியராகப் பெற்றிருப்பது இப்பண்பாட்டு இணைப்பினைத் தெளிவுபடுத்திக்காட்டும். இந்த இரண்டாவது கரிய மனைவி தமிழ் நாட்டுப் பெண்ணாக அல்லது திராவிடப் பெண்ணாக அமைவது இயல்பு. சமூகநிலையில் முதல் மனைவியை விட அவளைத் தாழ்ந்தவளாகப் படைத்துக் காட்டுவது புராண மரபு. தமிழ்நாட்டுப் புராண மரபுகளைப் பொறுத்தவரையில் இந்த இரண்டாவது மனைவியே இறைவனின் வலப்பக்கம் இடம் பெறுவது வழக்கம். தமிழ்நாட்டு இறையடியார்களின் உள்ளத்தைக் கவர்ந்திழுப்பவளாக இந்தத் தென்னிந்தியப் பெண் தெய்வம் அமைவது இயல்பு. கணவனின் மட்டற்ற அன்பிற்குரியவளாகவும் அவளைத் தமிழகப் புராண மரபு படைத்துக்காட்டும். வள்ளியைப் பொறுத்த வரையில் தமிழர்களின் அன்பிற்குரிய தாய்த் தெய்வமாக அவள் அமைவதோடு அவள் மூலமாகவே முருகன் உயிர்களுக்கு அருள்பாலிப் பதாகக் கருதும் மரபும் உள்ளது.

## கந்தபுராணமும் முருக வழிபாடும்

முருகன் பற்றிய பௌராணிக சமய மரபுகளை விளக்கியுரைக்கும் முழுமுதல் தமிழ் நூலாகக் கந்தபுராணம் திகழ்கின்றது. **10,345** பாடல்களைக் கொண்ட இந்தப் பெருங்காப்பியம் ஏறத்தாழ கி.பி. 1400இல் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்பரால் இயற்றப்பட்டது. காஞ்சி குமரக்கோட்டத்தில் எழுந்தருளியுள்ள முருகனைப் பாடும் இக்காப்பியம் தொண்டை நாட்டில் வழக்கிலிருந்த முருகன்பற்றிய கதைகளை எடுத்தியம்பும் ஒரு தலபுராணமாக அமைந்துள்ளது. இந்நூல் வடநாட்டில் எழுந்த வடமொழியிலுள்ள ஸ்கந்த புராணத்தைப் பின்பற்றி எழுந்ததாகக் கூறப்பட்டுவருகின்றது. ஆனால் வடமொழி நூலுக்கு இது முற்பட்டது என்பதை இவ்விரு நூல்களையும் ஒப்பிட்டு ஆராயும் போது அறிந்து கொள்ள முடிகின்றது. எனினும், மேற்கூறிய வடநூலுக்கு முற்பட்ட சமஸ்கிருத நூலொன்று ஸ்ரீ ஸ்கந்த மகாபுராணம் அல்லது சிவரகசிய காண்டம் என்ற பெயரில் தென்நாட்டில் நிலவி வந்ததாகத் தெரிகின்றது.

தமிழில் வழங்கிவந்த கந்தன் பற்றிய புராண மரபுகளோடு இந்த சமஸ்கிருத நூலில். இடம் பெறும் செய்திகளையும் கச்சியப்பர் பயன்படுத்தியிருக்கலாம் என்று பலர் கருதுகின்றனர். எனினும் இந்த சமஸ்கிருத நூலை விடவும் கச்சியப்பரின் கந்தபுராணம் அளவில் பெரியது; இது பல புதுச்செய்திகளைத் தாங்கிநிற்கின்றது; இலக்கியச் சிறப்பிலும், தரத்திலும் மேற்கூறிய சமஸ்கிருத நூலைவிடப் பன்மடங்கு உயர்ந்தது. சமஸ்கிருத நூல் காமசூத்திரத்தை அடியொற்றி வள்ளி - கந்தன் காதலைக் கொச்சைப்படுத்த, தமிழ்க் கந்தபுராணம் தமிழ் அகப்பாடல் மரபையொட்டி இதனை இலக்கியச் சுவையோடு விரிவாக எடுத்தியம்பும். மேற்கூறிய சமஸ்கிருத நூல் தமிழ்க் கந்தபுராணத்தின் சுருக்கப்பதிப்புப் போன்று 'காட்சி தருகின்றதே தவிர மூலநூல் போன்று அமையவில்லை. கந்தபுராணத்தின் தொடர்ச்சியாகக் கச்சியப்பரின் மாணாக்கர் கோனேரியப்பரும், ஞானவரோதயரும் பாடியுள்ள உபதேசக் காண்டங்களும் முருக வழிபாடு பற்றிய சமயப் புராண மரபுகளை விரிவாக எடுத்தியம்புகின்றன.

தொன்மைக்காலத்தில் மலைவாழ் மக்களிடம் வெறியாட்டாகத் திகழ்ந்த முருக வழிபாடு படிப்படியாகப் பிற நில மக்களாலும் உயர் குடிமாந்தர்களாலும் போற்றப்பட்டு வளர்ந்து, காலப் போக்கில் வடமொழித் தொடர்பால் புராணக் கலப்புற்றுப் பெருக்கம் எய்திய காலச் சூழலில், அக்கால மக்களின் சமய வழிபாட்டுத் தேவைகளை நிறைவு செய்ய எழுந்த ஒரு பெருங்காப்பியமாகக் கந்தபுராணம் காட்சி தருகின்றது.

முகமதியர் படையெடுப்பாலும், மதுரைச் சுல்தான்களின் ஆளுகையாலும் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் ஒரு தேக்கம் விளைந்தமையினைத் தமிழக வரலாறு தெளிவுபடுத்தும். உண்மை வாழ்வில் கலகம், குழப்பம், முகமதியக் கொடுங்கோன்மை ஆகிய வற்றிலிருந்து விடுதலைபெற ஏங்கித்தவித்த தமிழ்நாட்டு மக்களுக்கு வல்லாட்சி நீங்கி நல்லாட்சி மீண்டும் மலரும் என்ற நம்பிக்கையினைப் புராணப் பின்னணியில் நல்கும் முறையில் கந்தபுராணம் எழுந்தது என்றும் கூறலாம். அறம் தவறி உலகை ஆளும் அசுரன் ஆட்சியில், துயர்ப்பட்டு வருந்தும் தேவர்களைக் காக்கும் அரசனாம் இந்திரன்,

பகைவனை எதிர்க்கும் வலியிழந்து மறைந்து திரிதலும், பின்னர் முருகன் தோன்றி அசுரனைக் கொன்று மீண்டும் அமரருக்கு வாழ்வு கொடுத்தலும் போன்ற செய்திகளைக் கதை நிகழ்ச்சிகளாகக் கொண்ட கந்தபுராணம் தங்களைக் காக்கும் அரசர்களும் உயிர் தப்பி ஒளிந்து கொண்ட நிலையில் வேற்று மதத்தினரால் அலைக்கழிக்கப்பட்டு உயிருக்குப் புகலிடம் காணாது வருந்தி மெலிந்திருந்த தமிழக மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் அருமருந்தாகத் திகழ்ந்ததாக ஓர் ஆய்வாளர் (ந. இராமலிங்கம்) குறிப்பிடுகின்றார். தமிழகத்திலுள்ள பல கோயில்கள் தோறும் சென்று பல்லாயிரக்கணக்கான திருப்புகழ்ப் பாக்களை இசைச் சிறப்போடு பாடிப்பரவி முருக வழிபாட்டை இசையோடு இணைந்த வழிபாடாக மாற்றிய அருணகிரிநாதருக்கு அடித்தளம் அமைத்துத் தந்தவர் கந்தபுராண ஆசிரியர் கச்சியப்பர் எனலாம்.

முருக வழிபாட்டிற்கு அரிய இசைத்தமிழ்ப் பின்னணியினை வழங்கிய அருணகிரியாரின் பங்களிப்பு இத்துறையில் ஈடு இணையற்றது எனலாம். குமரகுருபரர், இராமலிங்க சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், அண்ணாமலை ரெட்டியார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆகியோர் உள்ளங்கவரும் சொற்றமிழால் அரிய பல இலக்கிய மாலைகளை இத்தமிழ்க் கடவுளுக்கு நாளும் சூட்டி முருக வழிபாடு பற்றிய இலக்கிய மரபில் பல புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியுள்ளனர். தமிழ் இலக்கியத்தின் இணைபிரியாத ஒரு பகுதியாக முருகன் புகழ்பாடும் இறைநெறி இலக்கியங்கள் பெருக்கெடுக்க இப்பெரியோர்கள் ஆற்றிய இறைத்தொண்டும், தமிழ்த் தொண்டும் என்றும் போற்றிப் புகழ்வதற்கு உரியன.

## தமிழும் முருகனும்

வடவர் சமய புராண மரபுகளோடு இணைந்து ஐக்கியமான போதிலும் தமிழ் இலக்கிய வரலாறு முழுவதும் முருகன் தமிழ்க் கடவுளாகவே காட்சி தருகின்றான். அகத்தியருக்குத் தமிழ் இலக்கணம் கற்றுத் தந்தவனாகக் கல்லாடம் முருகனைப் போற்றிப் பரவும். அவன் ஞானசம்பந்தராகப் பிறப்பெடுத்துத் தேவாரம் பாடியதாகச் சைவமரபு குறிப்பிடும். இறையனார் களவியலுக்கு எழுதப்பட்ட உரைகளுள் தரமிக்க உரையைக் கண்டறிய உருத்திரசன்மன் என்னும் மூங்கைப்

பையனாக அவன் பிறப்பெடுத்ததாகத் தமிழ் மரபு கூறும். கந்தபுராணத்தில் வரும் 'திகடச்சக்கரம்' என்னும் தொடரை விளக்க வீரசோழியம் என்னும் பௌத்த இலக்கண நூலிலிருந்து புணர்ச்சி விதிமுறைகளை அவன் எடுத்துக்காட்டி விளக்கியதாக மற்றொரு இலக்கிய மரபு பகரும். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளோடு குன்றம் எரிந்த குமரவேளாகத் தமிழ்ச் சங்கத்தில் அவன் வீற்றிருந்ததாக இறையனார் களவியல் உரை கூறும். தமிழோடு அவனுக்குள்ள தொடர்புகளை விளக்கும் கதைகள் காலந்தோறும் தமிழ் மண்ணில் ஏராளமாகத் தோன்றியுள்ளன.

## தமிழகம் திரும்பிய தமிழ்க் கடவுள்

தமிழ்க் கடவுளான முருகன் வடநாட்டு மரபுகள் பலவற்றை ஏற்று ஆரியக் கடலில் நீராடிய தமிழ்க் கடவுளாகக் காட்சி தந்த போதிலும், அவன் மீண்டும் தமிழ்க் கடவுளாகத் தமிழகம் திரும்பும் நிகழ்ச்சி மிகவும் குறிப்பிடத்தக்கது. வடநாட்டுச் சமயக்கூறுகள் தமிழ் முருகன் மீது இணைக்கப்பட்டபோது அல்லது திணிக்கப்பட்டபோது (Superimpose) அவனுக்குத் தந்தையாகச் சிவனும், தமையனாக விநாயகனும், மனைவியாகத் தெய்வயானையும் வந்தமைந்தனர். வடநாட்டுக் கயிலாயமலையில் இத்திருக்குடும்பத்தோடு காட்சி தரும் தமிழ்க் கடவுளான முருகனுக்கு முதன்மை தருவதில் ஒரு சிக்கல் ஞானப்பழம் என்ற பொருண்மை (Motif) குறித்து ஏற்படுகின்றது. ஞானப்பழத்தைத் தந்திரமாகப் பெற்றுவிடும் அண்ணன் விநாயகர் மீதும், அதை முறைதவறி விநாயகருக்குக் கொடுத்த தந்தை மீதும் சினங்கொண்டு, எனக்கென்று ஒருநாடு, எனக்கென்று மக்கள் என்று வஞ்சினம் உரைத்து, அந்த உறவைத் துண்டித்துவிட்டு, உத்தர கயிலாயத்தை விட்டுப் புறப்பட்டு, தமிழகம் போந்து, தக்கணக் கயிலாயமான பழநிக்கு முருகன் வந்து விடுகின்றான். இலங்கை மக்களின் சமயமரபுப்படி அவன் கயிலாயத்தைத் துறந்து தக்கணக் கயிலாயமான கதிர்மலைக்கு மீண்டு விடுகின்றான். இது தமிழ்க் கடவுள் வடநாடு சென்று, மீண்டும் தமிழ் மக்களைத் தேடி வந்து தமிழ் மண்ணில் நிலைத்து விட்டதைக் காட்டும் புராணக் கதையாக அமைந்துள்ளது.

### புதியமலர்ச்சி

தமிழ் மண்ணில் ஆழமாக வேரூன்றி வளர்ந்து இந்திய நாட்டிற்குரிய பொதுவான தேசிய வழிபாட்டுக் கூறுகள் பலவற்றை அரவணைத்து வளர்ந்துள்ள முருக வழிபாடு இன்று ஒரு சர்வதேச வழிபாட்டு மரபாகப் பரந்து விரிந்து வளர்ந்துள்ளது. கடல் கடந்து சென்று பாரெங்கும் பரந்துள்ள தமிழர்கள் இவ்வழிபாட்டினை உலகெங்கும் பரப்பியுள்ளனர். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, கானடா, நியுசிலாந்து, சிங்கப்பூர், மலேயா, மொரிசியசு, பிஜி, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற பல நாடுகளிலும் இவ்வழிபாடு பரந்து இன்று ஒரு சர்வதேச வழிபாட்டு மரபாகப் பரிணமித்துள்ளது. அழகான பல முருகன் கோயில்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, மொரிசியசு, ஆஸ்திரேலியா போன்ற பல நாடுகளிலும் தோன்றியுள்ளன. தமிழ் இனத்தின் குறியீடாகவும், தமிழ்ப் பண்பாட்டுத் தலைவனாகவும் (culture hero) தமிழ்க் கடவுளாகவும் காட்சி தரும் முருகக் கடவுளின் வழிபாடு பிரதேச நிலையிலிருந்து, தேசிய நிலைக்கும், தேசிய நிலையிலிருந்து சர்வதேச நிலைக்கும் உயர்ந்து பரந்த வரலாறு தமிழ் இனத்தின் மேற்கூறிய வளர்ச்சி நிலைகளின் பிரதிபலிப்பாகவே அமைந்துள்ளது.

#### கருவிநூல்கள்


1. Fred Clothey, *Many Faces of Murukan.*
2. Kamil V. Zvelebil, *Thiru Murukan*, 1981.
3. ---------------------, *Tamil Traditions on Subrahmanya - Murugan* , 1991.
4. இராமலிங்கம், ந. கந்தபுராண ஆராய்ச்சி, 1988.

## 2. பரிபாடலும் பக்தி நெறியும்

பரிபாடலில் காணக்கிடக்கும் இரு பாடல்களை ஆராய்ந்து அவற்றின் அடிப்படை இயக்கு சக்தியாக அமையும் இலக்கியக் கோட்பாடுகளை இனம் கண்டு கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரையில் ஆராயப்படுகின்ற இலக்கியக் கோட்பாட்டின் தேட்டத்திற்கு முருகனைப் புகழ்ந்து பாடும் பரிபாடலின் 17,18 ஆகிய இரு பாடல்கள் அடிப்படையாக அமைகின்றன.

இன்று நூல் வடிவில் நமக்குக் கிடைக்கும் பரிபாடலின் பாடல்கள் வீரயுகத்திற்குப் பின்னர் கிரேக்க நாட்டில் தோன்றிய கிரேக்க வாழ்த்துப் பாடல்களை அமைப்பிலும், உணர்ச்சி வெளியீட்டிலும் ஒத்துக் காணப்படுகின்றன. பரிபாடலில் அமையும் கவிதைகள் பெரும்பாலும் புற வடிவத்திற்கும் (Structure), சமயச் செய்திகளுக்கும் அதிகச் சிறப்பிடம் தருகின்றன. கிரேக்க வாழ்த்துப் பாடல்களைப் போன்று இப்பாடல்கள் இசை தழுவிய நீண்ட தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைகின்றன. சமுதாய, சமய, அரசியல் தொடர்பான செய்திகளை ஏனையோருக்கு ஆற்றலுடன் புலப்படுத்துவதற்குப் பரிபாடலின் வடிவ அமைப்பு சிறப்புடைய கருத்துப் பரிமாற்றக் கருவியாகக் காட்சி தருகின்றது.

இக்கவிதைகள் அனைத்தும் குறுநில மன்னர்கள், அரசர்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் அரசவையிலும், உயர்குடி மக்களின் சமுதாய, சமய விழாக்களின் போதும் இசையோடு பாடப்பட்டன என்பதற்குப் பல்வேறு அகச் சான்றுகள் உள்ளன. யாழிசைத்துக் கவிதை பாடும் பாணர்கள் இப் பாடல்களைப் பாடித் திரிந்திருக்க வேண்டும் என்பதற்கும் சான்றுகள் பல உள்ளன. வறுமை மிகுந்த இக்கவிஞர்களின் சமுதாய இழிநிலை, பொருள் கொடுத்து ஆதரிக்கும் வள்ளல்களை

அண்டிப் பிழைத்த அவர்களின் சார்புநிலை, பாண்டிய மன்னர்கள் அவர்களைப் பேணிப் பாதுகாத்த நிலை, செல்வந்தர் முன் இரப்போர் நிற்பது போன்று, மன்னர்கள் முன்னர் புலவர்கள் இரந்து நிற்கும் அவலநிலை போன்றவற்றைப் பரிபாடலின் 10வது பாடல்,

"இலம்படு புலவர் ஏற்றகை நெருமரப்
பொலஞ்சொரி வழுதியிற் புனல்இறை பரப்பி"

(பரி. 10: 126-127)

என்று சுட்டுகின்றது. புலவர்கள் பொருளுக்காகக் கையேந்தி நிற்கும் நிலையும் அவர்களின் கைநிறைய பாண்டியன் பொற்காசுகளைச் சொரியும் நிகழ்ச்சியும் இங்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பரிபாடலின் 11வது பாடல், வையை ஆற்றில் கொண்டாடப்பட்ட புதுப் புனல் விழாவின்போது யாழின் துணையோடு மருதப்பண்ணில் நீண்ட பாடல்களைப் பாணர்கள் பாடியது பற்றிய குறிப்பினைத் தருகின்றது. பரிபாடலின் இசைச் சிறப்பினை இப்பாடல்,

"இன்னியல்மாண் தேர்ச்சி இசைபரி பாடல்"

(பரி. 11 : 137)

என்று விளக்கிச் செல்கின்றது. இதனால் இப்பாடல்கள் உயர்குடி மக்களின் ஆதரவில் உருப்பெற்றன என்றும், பொருளாதார நிலையில் உயர்குடி மக்களைச் சார்ந்து வாழ்ந்த புலவர்கள் அல்லது பாணர்களால் படைத்துப் பாடப்பட்டன என்றும், உயர்குடி மக்களின் விழாக்களின் போது அவர்களின் பொழுது போக்கிற்காக யாழ் மீட்டி இசையோடு இவை பாடப்பட்டன என்றும் தெரிகின்றது.

எழுபது பரிபாடல்கள் தமிழில் இருந்ததாக இலக்கிய வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவித்த போதிலும், இன்று நூல்வடிவில் 22 பாடல்களே நமக்குக் கிடைக்கின்றன. கிடைக்கின்ற பாடல்களும் காலத்தின் சுழற்சியில் பல மாற்றங்களைப் பெற்றுள்ளன என்பது தெரிகின்றது. பரிமேலழகரின் உரையைச் சிறப்பிக்கின்ற பழைய பாயிரம் ஒன்று நச்சினார்க்கினியரின் காலத்தில் வாழ்ந்த கந்தியார் என்னும் பெண்பாற் புலவர் பரிபாடலில் பல வரிகளையும், சொற்களையும் இடைச் செருகலாகச் சேர்த்ததாகக்

குறிப்பிடுகின்றது. அதோடு, ஏடு எழுதுவோராலும், பாடுவோராலும், இடைச் செருகல்களைச் செய்வோராலும் பரிபாடலில் பல பாட பேதங்கள் எழுந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட பாயிரம், பிழை மலிந்த பரிபாடலில் பரிமேலழகர் பல திருத்தங்களைச் செய்ததாகச் சுட்டிச் செல்கின்றது.

ஏனைய பழைய தமிழ்ச் செந்நெறி இலக்கியங்களைப் போன்று பரிபாடல் தொகுக்கப்பட்ட காலத்தினையும் தெளிவாக அறிய முடியவில்லை. கணித நூல் வல்லுநர்கள் கால நிலை தொடர்பாகப் பரிபாடலில் காணப்படுகின்ற சில குறிப்புக்களை வைத்துப் பரிபாடலின் காலத்தைக் கணக்கிட முயன்றுள்ளனர். பரிபாடலின் பாடல் ஒன்று சையம் என்ற மலையில் பெருமழை பெய்த காலத்தின் கோள் நிலை பற்றிய குறிப்பினைத் தருகின்றது. இதனை மையமாகக் கொண்டு அறிஞர்கள் சிலர் பரிபாடல் தோன்றிய காலத்தை வரையறை செய்துள்ளனர். பி.டி. சீனிவாச அய்யங்கார் வான நூல் ஆய்வு பற்றிய மேற்கூறிய முயற்சிகள் தோல்வியைத் தழுவியுள்ளன என்று சுட்டிச் செல்கின்றார். பரிபாடலில் கிடைக்கும் கோள் நிலைபற்றிய குறிப்புக்கள் நூலின் காலத்தை அறிந்திடப் போதுமானவையாக அமையவில்லை என்பது அவர்கருத்து. இக்கோள் நிலையைப் பற்றி உரையாசிரியர்கள் தரும் செய்திகளில் எண்ணற்ற குழப்பங்கள் அமைந்துள்ளன என்றும் அவர் கூறுகின்றார்.

எனினும் இந்நூலின் அமைப்பும் நூலில் கிடைக்கின்ற குறிப்புக்களும், வையை ஆறு பற்றிய பரிபாடலின் பாடல்கள் வீரயுகத்திற்குப் பின்னரும், அறநெறிக் காலத்திற்கு முன்னரும் தோன்றியுள்ளன என்று முடிவு கூறத் துணை செய்கின்றன. இத்தகைய நிலை மாறுபட்ட காலத்தில் (Transitional Stage) தோன்றியதால் அறநெறிப் பாடல்களைப் போல் வையை பற்றிய பரிபாடலின் பாடல்கள் ஒழுக்கநெறி இல்லாத வாழ்வை இகழ்ந்து பேசவில்லை. கள் உண்ணுதல், பரத்தமை ஆகியவற்றை எதிர்த்து, அறநெறிப் பாடல்களைப் போன்று, பரிபாடல் கவிதைகள் போர்க்குரல் எழுப்பவும் இல்லை.

பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களைச் சார்ந்த தமிழ் அறநெறிப் பாடல்கள் காமக்கேளிக்கைகள் நிறைந்த உலகியல் வாழ்க்கையை விடத்

துறவு வாழ்விற்கே அதிகச் சிறப்பிடம் தருகின்றன. ஆனால் பரிபாடலில் அமையும் பாடல்கள் துறவு வாழ்க்கையை விட காமக்கேளிக்கைகள் நிறைந்த உலகியல் வாழ்விற்கே அதிகச் சிறப்பிடம் தருகின்றன. எனினும், புராணச் செய்திகளையும் தத்துவச் சிந்தனைகளையும் இணைத்துத் தருவதில் சங்க இலக்கியங்களிலிருந்து பரிபாடலின் கவிதைகள் பல நிலைகளில் மாறுபடுவதைக் காணலாம். சில பாடல்கள் வால்மீகியின் இராமாயணம், வியாசரின் பாரதம் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு முருகனின் பிறப்புப் பற்றிய சில செய்திகளைப் பேசுகின்றன. சில பாடல்கள் விஷ்ணுவின் ஐந்து அவதாரங்களைப் பற்றிப் பேசுகின்றன. இவற்றை அடிப்படையாக வைத்து நோக்கும்போது வையை பற்றிய பாடல்களில் சமயம் தொடர்பான செய்திகள் குறைவாகவும், முருகன், திருமால் ஆகியோரைப் பற்றிய பாடல்களில் சமயம் தொடர்பான செய்திகள் நிறைந்தும் இடம் பெறுவதைக் காண முடிகின்றது.

எனவே கடவுளர்களை மையமாகக் கொண்ட பரிபாடல் கவிதைகளுக்கும், வையையை மையமாகக் கொண்ட பாடல்களுக்கு மிடையே குறிப்பிடத் தகுந்த கால வேறுபாடு அல்லது கால இடைவெளி இருந்திருக்க வேண்டுமென்று தெரிகின்றது. இந்த அடிப்படையில் நோக்கும்போது முருகன், திருமால் ஆகிய கடவுளர்களைப் பற்றிய பாடல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் அறநெறிப் பாடல்கள் தோன்றிய காலக் கட்டத்தை அடுத்து, அதாவது கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தோன்றியிருக்க வேண்டுமென்று கருதலாம். வையை பற்றிய பாடல்களில் புராணச் செய்திகள் அதிகம் இன்மைக்கு அதன் பாடுபொருளும் ஒரு காரணமாக அமையலாம். அவ்வாறெனில் சமயச் சார்பற்ற கவிதைகளும் (Secular poems), சமயச் சார்புடைய கவிதைகளும் ஒருங்கே இணைந்த ஒரு கவிதைத் தொகுதியாகப் பரிபாடலைக் கொள்ளவும் இடமுள்ளது.

## சமுதாயப் பின்புலம்

பரிபாடல் என்னும் தொகுப்பில் காணக் கிடக்கும் பல்வகைப் பாடல்களைத் தோற்றுவித்த காலக் கட்டமும், சமுதாயப் பின்புலமும் சங்க இலக்கியத் தொகுப்பில் காணக் கிடக்கும் வீரயுகப் பாடல்களைத்

தோற்றுவித்த காலக் கட்டத்திலிருந்தும், சமுதாயப் பின்புலத்திலிருந்தும் முற்றிலும் வேறுபடுவதைக் காண்கின்றோம். நிலப்பிரபுத்துவ அமைப்பு தமிழ் மண்ணில் ஆழமாகத் . தன் கால்சுவடுகளைப் பதித்த காலக் கட்டத்தில் பரிபாடல் என்னும் இலக்கியம் தோன்றியிருக்கலாம் என்று கருதுவதற்கு வாய்ப்புக்கள் பல உள்ளன. இக்காலக் கட்டத்தில் தமிழ்ச் சமுதாய அமைப்பில் வணிகர்களும், நிலப்பிரபுக்களும் உயரிய இடத்தைப் பெற்றனர். மன்னனை மையமாகக் கொண்ட வீரயுகச் சமுதாய அமைப்பு மெல்ல மெல்லக் கட்டவிழ்ந்து இறைவனையும், சமயக் கோட்பாடுகளையும் மையமாகக் கொண்ட ஒருவிதப் புதுமைச் சமுதாயம் (Theocracy) தோன்றத் தொடங்கிய காலக் கட்டத்தில்தான் பரிபாடல் தோன்றியிருக்க வேண்டும்.

இக்காலக் கட்டத்தில் சமயம் சாராத அறநெறிகளும், ஒழுக்கக் கோட்பாடுகளும் மெல்ல மெல்லச் சமயக் கோட்பாடுகளாகவும், கடவுளர்களின் திருவாக்குகளாகவும் மாற்றம் பெற்றன. வீரயுகச் சமுதாயத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட, வளர்ச்சி பெற்ற சமுதாயமாகப் பரிபாடல் காட்டும் தமிழ்ச் சமுதாயம் அமைகின்றது. உற்பத்தி நிலைகளிலும், செல்வச் செழிப்பிலும் மேம்பாடு பெற்ற இக்காலக் கட்டத்தில் பிறர் நாட்டைச் சூறையாடிப் பொருளைச் சேர்க்கும் வீரயுகப் போக்கு மெல்ல மெல்ல மாற்றம் பெற்றுள்ளது. தத்துவச் சிந்தனைகளிலும், சமயச் செய்திகளிலும் இக்காலக் கலைஞர்களும், கவிஞர்களும் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கினர். உயர்குடி வர்க்கத்தினரின் ஒரு பகுதியினர் (leisurley class) உலகியல் வாழ்விலும், காமக்களியாட்டங்களிலும் அதிக ஆர்வம் காட்டினர். பரிபாடலின் பாடல்கள் பழைய தமிழ்ச் சமுதாயத்தின் இவ்விருவகைப் போக்குகளையும் சொல்லோவியமாக வடித்துத் தருகின்றன.

வையை பற்றிய பாடல்களில் உலகியல் வாழ்வில் உயர்குடியினர் காட்டிய ஆர்வத்தினையும், முருகன், திருமால் ஆகியோர் பற்றிய பாடல்களில் ஆன்மீக வாழ்வில் தமிழ்ச் சமுதாயம் காட்டிய ஈடுபாட்டினையும் ஒருங்கே காணமுடிகின்றது. இலக்கியத்தை அகம் என்றும் புறம் என்றும் பிரிக்கும் பழைய போக்கு இங்கு மாற்றம் பெறுவதைக் காண்கின்றோம். அகம், புறம் என்னும் இலக்கியப்

பாகுபாட்டிற்குப் பதிலாக உலகியல் வாழ்வு பற்றிய இலக்கியங்கள், ஆன்மீக வாழ்வு பற்றிய இலக்கியங்கள் என்ற இரு பெரும் இலக்கியப் பாகுபாடு மெல்ல மெல்ல உருப்பெறத் தொடங்கின. வீரத்தைப் பேசும் வீரயுகக் கவிதைகளான புறப்பாடல்களின் இடத்தைச் சமயச் சிந்தனைகளும், தத்துவங்களும் நிரம்பிய மெய்யுணர்வுப் பாடல்கள் இக்காலக் கட்டத்தில் மெதுவாகக் கவர்ந்து கொண்டன.

**கவிதையில் வளர்ச்சி**

வீரயுகக் கவிதைகள் களிறு எறிந்து பெயரும் வீரர்களின் புகழை உணர்வு கலந்து பாடின. பரிபாடலின் பாடல்கள் மனம், வாக்கு, மெய் ஆகிய முன்றையும் கடந்து நிற்கும் நுண்மைப் பொருளான கடவுளின் மாட்சியை வியந்து போற்றின. நடப்பியல் செய்திகளோடு பொருந்தி வருகின்ற வீர சாகசங்களை எழுத்தோவியமாகக் காட்டிய வீரயுகப் பாடல்களின் இடத்தை, இயற்கை இகந்த செய்திகளை இணைத்துப் பேசி கடவுளர்களின் அற்புதச் செயல்களைப் பாடும் பாடல்கள் கவர்ந்து கொண்டன. இந்நிலையில் மானுடத்தின் மகத்துவத்தைப் பாடும் வீரயுகப் போக்கு மெதுவாக மாறி மானுடத்தின் வலுவின்மையைப் பாடும் இறை நெறிப் பாடல்கள் இக்காலக் கட்டத்தில் வளர்ச்சி பெற்றன. வையையைப் பற்றிய பாடல்களில் காணப்படும் மனிதர்கள் வீரயுகப் பாடல்களில் இடம் பெறும் வீரர்கள் போன்று ஆற்றல் மிக்க தன்னேரில்லாத தலைவர்களாகக் காட்சி தராது, இரக்கத்திற்கும் நகைப்பிற்கும் உரிய மனிதர்களாகக் காட்சி தருகின்றனர். சுருங்கக்கூறின் பரிபாடலின் பாடல்கள் மனிதனைப் பாடுவதில் அதிக அக்கறை காட்டாமல் கடவுளர்களைப் பாடுவதிலும், இயற்கை இகந்த புராணச் செய்திகளைப் பாடுவதிலும் ஆர்வம் காட்டுகின்றன எனலாம்.

நடப்பியலுக்குப் பொருந்தி வருகின்ற நிகழ்ச்சிகளைப் படைக்கும் படைப்பாற்றலாகச் சங்கப் பாடல்களில் கவிஞர்களின் படைப்புக் கற்பனை (Creative imagination) செயல்படுகின்றது. இந்நிலை பரிபாடலின் பாடல்களில் முற்றிலும் மாறத் தொடங்கியது. கண்ணுக்கெட்டாத விந்தைகளையும், அற்புதக் காட்சிகளையும் படைப்பதுவே கற்பனையின் பணி என்று கருதும் புதிய இலக்கியக் கோட்பாடு இக்காலத்தில் மெதுவாக உருப்பெற்றது.

வீரயுகப் பாடல்கள் வீரர்களின் உள்ளத்தில் போர் வேட்கையைத் தூண்டி எழச் செய்து அவர்களை ஆற்றல் மிக்க மனிதர்களாக மாற்ற உதவின. பரிபாடலின் பாடல்கள் இதற்கு மாறாக மனிதனைப் பக்தியுடையவனாக மாற்றவும், உலகத்தின் மீது அவன் பற்றின்மையை வளர்க்கவும் தூண்டுகின்றன. வீரயுகப் பாடல்களை ஆற்றல் இலக்கியம் என்று குறிப்பிட்டால் பரிபாடலின் பாடல்களைச் சமய இலக்கியங்கள் என்றும், பொழுதுபோக்கு இலக்கியங்கள் என்றும், தப்பியோடிச் செல்லும் குறிக்கோளுடன் அமைந்த படைப்புக்கள் (Escape poetry) என்றும் கருதுவது பொருந்தும்.

இனக்குழுக்கள் மெதுவாக அழிந்து பேரரசுகள் உருப்பெறத் தொடங்கிய காலக் கட்டத்தில் வீரயுகப் பாடல்கள் தோன்றின. வீர உணர்வை ஊட்டி வலுவான அரசுகளை நிலைநாட்டுவதற்கும், நாட்டின் எல்லையைப் பெருக்குவதற்கும் வீரயுகப் பாடல்கள் துணை புரிந்தன. இப்போக்கு வீரயுகச் சமுதாயத்தின் இன்றியமையாத சமுதாயத் தேவையாக அமைந்தது. வீரயுகத்திற்கு மாறுபட்ட காலக்கட்டத்தில் தோன்றிய பரிபாடலின் சமுதாயப் பின்னணி இதற்கு முற்றிலும் வேறுபட்ட நிலையில் அமைந்திருந்தது. வாசகர்களை மகிழ்வூட்டுவது, வாசகர்கள் உள்ளங்களில் இறையுணர்வினைத் தோற்றுவிப்பது ஆகியனவே இப்பாடல்களின் அடிப்படைக் குறிக்கோள்களாக அமைந்தன.

**உணர்வில் மாற்றம்**

இலக்கிய உணர்விலும் (Sensibility) தமிழ்ச் சமுதாயம் குறிப்பிடத் தகுந்த மாற்றத்தினை அடைந்துள்ள நிலையினைப் பரிபாடலின் பாடல்கள் சித்திரித்துக் காட்டுகின்றன. உலகியல் தொடர்பான வாழ்விலிருந்து ஆன்மீகம் தொடர்பான வாழ்விற்கும், சமயம் சாராத உணர்வுகளிலிருந்து சமயம் சார்ந்த உணர்வுகளுக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் மனப்போக்கு மாறிச் செல்வதை இப்பாடல்கள் காட்டுகின்றன. வீரயுகச் சமுதாயத்தில் மன்னர்களைச் சார்ந்திருந்து, அவர்தம் புகழைப் பாடி, அவர்கள் தரும் பொருளைப் பெற்றுக் கவிஞர்கள் வாழ்ந்து கொண்டிருந்த நிலையைக் காணலாம். உலகியல் தொடர்பான பொருளுக்காகப் பாடும் இப்போக்கு

பரிபாடலில் அமைந்துள்ள இறையுணர்வுப் பாடல்களில் மாற்றம் பெறுவதைக் காண்கின்றோம்.

மன்னர்களைச் சார்ந்திருந்த புலவர்கள், கோயில்களைச் சார்ந்து, மன்னரிலும் உயர்ந்த மன்னனான கடவுளைப் பாடி, பொருட் செல்வத்திற்குப் பதிலாக அருட் செல்வத்தை இரந்து பெறுவதை பரிபாடலின் சில பாடல்கள் காட்டுகின்றன. முருகனைப் பற்றிய பரிபாடல் கவிதைகளைப் பொறுத்தவரையில் மண்ணுலக மன்னர்களைப் பாடும் போக்கை விட்டு விண்ணுலகக் கடவுளர்களைப் பாடும் போக்கினைக் கவிஞர்கள் முழுமையாகத் தழுவிக் கொண்டதைக் காண்கின்றோம். வீரயுகச் சமுதாய அமைப்பில் மன்னன் உயர்நிலையினைப் பெற்றுத் திகழ்ந்தான். இறைநெறிக் காலக் கட்டத்தின் சமுதாய அமைப்பில் இறைவனுக்கே மன்னனை விடவும் உயரிய இடம் தரப்பட்டது. இந்நிலையில் மண்ணுலக மன்னர்கள் விண்ணுலகக் கடவுளர்களின் பிரதிநிதிகளாகச் செயல்படத் தொடங்கினர். இம்மனப் போக்கு வளர்ச்சி பெற்ற காலத்தில்தான் "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று கூறும் தத்துவமும் உருப்பெற்றது.

இக்கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட 17,18 ஆகிய பாடல்கள் திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கும் முருகக் கடவுளின் புகழைப் பாடுகின்றன. வீரயுக இலக்கியங்களில் இடம் பெறும் வாழ்த்துப் பாடல்களின் அமைப்பை இவை பெற்றுத் திகழ்ந்த போதிலும், இறைவனின் புகழை ஊனுருகப் பாடுவதில் இவை பிற்காலத்தில் தோன்றிய பக்திப் பாடல்களின் போக்குகளை அப்படியே பிரதிபலித்து நிற்கின்றன. வீர உணர்வு பெற்ற இடத்தை இப்பாடல்களில் முழுமையாகச் சமயச் சிந்தனைகள் பெற்றுவிடுவதைக் காண்கின்றோம். இப்பாடல்களின் அடிக்குறிப்புக்களை வைத்து நோக்கும் போது இவற்றை, முறையே நல்லழிசியார், குன்றம் பூதனார் ஆகிய இரு புலவர்கள் பாடியதாக அறிகின்றோம். சங்கத் தொகை நூல்களில் இப்புலவர்கள் வேறு எந்தக் கவிதைகளையும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பக்தியுணர்வு, வீரவுணர்வு, இயற்கைப் பாடல்களின் கூறுகள், அகப்பாடல்களின் தன்மைகள் ஆகிய அனைத்தையும் இவ்விரு பாடல்கள் பெற்றுத் திகழ்ந்த போதிலும் இப்பாடல்களுள் பக்தி உணர்வே

தனிச் சிறப்பிடம் எய்துகின்றது. பக்தியுணர்வை அடித்தளமாகக் கொண்டு அதன் மீது மேற் கூறிய உணர்வுகளெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாகக் கட்டி எழுப்பப்படுவதை இப்பாடல்களில் காண்கின்றோம். கி.பி. 650ஐ ஒட்டித் திருப்பரங்குன்றம் முருகனின் படைவீடு என்னும் சிறப்பினை அடைந்துள்ளால் இப்பாடல்களும் இக்காலத்திற்குப் பின்னர் தோன்றியிருக்க வேண்டுமென்று கருதுவதற்கு வாய்ப்புக்கள் பல உள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் அறநெறிக் காலக் கட்டம் முடிவடைந்த பின்னர்தான் இறைநெறிப் பாடல்களைப் படைக்கும் இறைநெறிக் காலக் கட்டம் தோன்றியிருக்க வேண்டும். அறநெறிக் காலக் கட்டத்தில் சமயச் சார்பு குறைந்த அறப்பாடல்கள் தமிழ் நாட்டில் பெருவாரியாகத் தோன்றின. எனவே பரிபாடலின் மேற்கூறிய பாடல்களை இறைநெறிக் காலக் கட்டத்தின் தொடக்க நிலை இலக்கியங்கள் என்று கருதுவது பொருந்தும்.

## முருகியல் பின்புலம்

இலக்கியத்தில் வடிவத்திற்குச் சிறப்பிடம் தரும் திறனாய்வாளர்கள் கவிதையின் வரலாறு என்பது கவிதையில் பயன்படுத்தப்படும் இலக்கிய உத்திகளின் வளர்ச்சி நிலைகளின் வரலாறே என்று வாதிடுவர். எனினும், கவிதையின் வடிவத்திலும், உள்ளீட்டிலும் ஏற்படும் மாற்றங்களும், வளர்ச்சிகளும், சமுதாய மாற்றங்களையும், வளர்ச்சி நிலைகளையும் அடித்தளமாகக் கொண்டு எழுகின்றன என்பதை மறுக்க முடியாது. உற்பத்தி நிலையிலும், சமுதாய வளர்ச்சியிலும் மாற்றம் ஏற்படும் போது சமுதாயத்தின் மேற்கட்டுமானத்தின் (Super structure) ஒரு பகுதியாகக் காணப்படும் கவிதையின் போக்குகளிலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே அமைந்து விடுகின்றது.

சமூகவியல் திறனாய்வாளர்களைப் பொறுத்த வரையில் கவிதையின் வடிவத்திற்கும் சமுதாய அமைப்பிற்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. புதிய சமுதாயக் கோட்பாடுகளும், அரசியல் சிந்தனைகளும் தோன்றும் போது இலக்கியப் படைப்பு உலகிலும், திறனாய்வு உலகிலும் புதிய கோட்பாடுகளும், சிந்தனைகளும் தோன்றுவது இயல்பே. எனவேதான் சமுதாயப் போக்குகள் மனிதர்களின் மனப்போக்குகளை நிர்ணயம் செய்வதாக மார்க்சியத் திறனாய்வாளர்கள் குறிப்பிட்டுச் செல்கின்றனர். இதனால் இலக்கியத்தைச் சமுதாயத்தின் அங்கமாகக்

கொண்டு சமுதாய வளர்ச்சி நிலைகளோடு அதன் வளர்ச்சி நிலைகளை இணைத்து ஆராய வேண்டிய கட்டாயத் தேவை ஏற்படுகின்றது.

தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளை மேற்கூறிய கண்ணோட்டத்தில் ஆயும் போது தமிழ் இலக்கியத்தின் உள்ளீடும், உத்திகளும், வடிவங்களும் சமுதாயத்தின் பொருளாதார நிலைகளுக்கு ஏற்பவும், மக்களின் மனப்போக்கிற்கு ஏற்பவும் இணைந்து, இயைந்து, வளர்ந்து செல்வதைக் காணமுடிகின்றது. அரசுகளை நிலைநிறுத்துவதற்காக இனக் குழுக்கள் போராடிக் கொண்டிருந்த காலத்தில், அக்காலக் கட்டத்தின் சமுதாயத் தேவைக்கு ஏற்ப வீரயுகப்பாடல்கள் தமிழ்ச் சமுதாயத்தில் தோற்றம் பெற்றுள்ளதைக் காணலாம். காலப் போக்கில் இனக் குழுக்கள் அழிந்து வல்லரசுகள் தோன்றின. படிப்படியாகத் தனியுடைமை வளரத் தொடங்கியது. உடைமைகளைக் காக்க வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்ட இக்காலத்தில் வீரயுகப்பாடல்களுக்கு முற்றிலும் மாறுபட்ட அறநெறிப் பாடல்கள் தோற்றம் பெற்றன. இக்காலக் கட்டத்தில் பாடலின் உள்ளடக்கத்தில் மாற்றம் ஏற்படவே யாப்பமைதியிலும் மாறுதல் ஏற்பட்டது. அகவற்பாவின் ஆதிக்கம் குறைந்து வெண்பாவின் செல்வாக்கு வளரத் தொடங்கியது. வெண்பாவில் அமைந்த அறநெறிப் பாடல்கள் இக்காலக் கட்டத்தின் அரசியல் பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப அமைவது குறிப்பிடத்தக்கது.

காலப்போக்கில் அறநெறிப் பாடல்களை ஏராளமாகப் படைத்த சமுதாயத்தின் போக்கிலும் மாற்றங்கள் பல ஏற்படத் தொடங்கின. இதன் விளைவாகச் சமயத்தையும், கோயிலையும் மையமாகக் கொண்ட ஒருவிதச் சமுதாய அமைப்பு உருப்பெறத் தொடங்கியது. தனிமனிதனைப் பாடும் போக்கு மாறி இறைவனைக் கவிதையில் புகழும் மனப் போக்கு வளர்ந்தது. இதன் விளைவாக எண்ணற்ற பக்திப் பாடல்கள் தமிழ் இலக்கிய உலகை அழகு செய்யத் தொடங்கின.

இக்கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பாடல்கள் படிப்படியாகப் பக்தி இலக்கியம் தமிழில் உருப்பெற்று வளரத் தொடங்கிய தொடக்க நிலையினைச் சுட்டிக் காட்டி நிற்கின்றன. இறைநெறி அனுபவங்களைச் சொற்றமிழ் மாலையாக அமைத்துத் தர விரும்பும்

இக்கவிஞர்கள் பாடுபொருளின் மாற்றத்திற்கேற்ப யாப்பமைதியிலும் மாற்றம் செய்ய முனைந்துள்ளனர். வீரயுகத்தில் செல்வாக்குப் பெற்ற அகவற்பாவினையும், அறநெறிக் காலத்தில் புகழ் பெற்ற வெண்பாவினையும் இவர்கள் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, தொல்காப்பியர் காலத்தில் காதற் பாடல்களைப் பாடுவதற்குத் தகுந்த யாப்பாகச் சுட்டப்பட்ட பரிபாடல் என்னும் யாப்பு வடிவத்தில் சில மாற்றங்களைச் செய்து அதனைப் பக்திப் பாடலுக்குரிய யாப்பு வடிவமாக அவர்கள் பயன்படுத்துவதைக் காண்கின்றோம்.

பல வகையான யாப்புக்களின் கலவையாகத் திகழும் பரிபாடல் என்னும் யாப்பு வடிவம் பக்தி இலக்கியத்தின் தொடக்க காலத்தில் எழுந்த இறையுணர்வைக் கலை நுட்பத்துடன் வெளிப்படுத்திக் காட்டுவதற்குச் சிறந்த முறையில் கவிஞர்களுக்குத் துணை செய்துள்ளது எனலாம். தொடக்க நிலையில் எழுந்த பக்திப் பாடல்களில் வீரயுக இலக்கிய இயல்புகளும், காதல் பாடல்களின் தன்மைகளும், இறைநெறிக் கவிதைகளின் போக்குகளும் இணைந்து அமைவதைக் காணலாம். இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட இலக்கியக் கூறுகளை ஒருங்கே இணைத்துக் கலைத்திறனுடன் வெளிப்படுத்துவதற்குரிய பொருத்தமான யாப்பு வடிவமாகப் பரிபாடல் அமைந்துள்ளது. மேற்கூறிய கலவை நிலையில் அமைந்த பக்திப் பாடல்களின் செல்வாக்கு ஓரளவு குறைந்து தூய இறைநெறிப் பாடல்கள் காலப் போக்கில் பெருகத் தொடங்கின. முழு நிலையில் அமைந்த இறைநெறிப் பாடல்கள் இவ்வாறு தோற்றம் பெற்றதும் பரிபாடல் என்னும் யாப்பு வடிவம் மெல்ல மெல்ல மறைந்து விருத்தம் என்னும் யாப்பு வடிவம் ஆதிக்கம் பெறுவதைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணமுடிகின்றது.

### பராமரிப்பு அமைப்புக்கள்

வீரயுகத்தில் மன்னர்களின் அரசவை முக்கியமான கலை இலக்கியப் பராமரிப்பு அமைப்பாகக் (Patronage system of art and literature) காட்சி தந்தது. இறையுணர்வினையும், கோயில்களையும் மையமாகக் கொண்ட சமுதாயம் எழுச்சி பெற்றதும், கோயில்கள் மற்றொரு கலை இலக்கியப் பராமரிப்பு அமைப்பாக உருப்பெற்றன. தனிமனிதனைப் பாடும் வீரயுகப் பாடல்களும், புகழ்ச்சிப் பாடல்களும் அரண்மனைகளை மையமாகக்

கொண்டு தோற்றம் பெற, மன்னர்களின் அல்லது நிலப்பிரபுக்களின் ஆதரவிலிருந்த கோயில்களை மையமாகக் கொண்டு இறைநெறிப் பாடல்கள் தோன்றத் தொடங்கின. சமய அமைப்புக்களை அடித்தளமாகக் கொண்டு தோன்றிய இறைநெறிப் பாடல்கள் அந்தந்தக் காலங்களில் உயர்நிலையிலிருந்த சமயங்களின் இலட்சியங்களையும் வேட்கை களையும் பிரதிபலிப்பனவாக அமைந்தன. அதோடு, இத்தகைய சமயங்களைத் தழுவி அவற்றை ஆதரித்து வந்த உயர்குடி மக்களின் சமுதாய, சமயக் கண்ணோட்டங்களை இப்பாடல்கள் வெளிப்படுத்தி நின்றன.

இவற்றைப் பாடிய கவிஞர்களின் கலை அனுபவ உணர்வுகள் அவர்கள் சார்ந்திருந்த உயர்குடி மக்களின் இலட்சியக் கோட்பாடுகளை ஒட்டியே அமைந்தன. எனவே, சமயவாதிகளின் தேவைகளுக்கு ஏற்பவும், சமயங்களை ஆதரித்த உயர்குடி மக்களின் விருப்பங்களுக்கு ஏற்பவும் கட்டாயப்படுத்தப்பட்ட நிலையில் கவிதை பாடுபவர்களாகவே இக்காலக் கவிஞர்களுள் பெரும்பாலோர் காட்சி தருவதைக் காண்கின்றோம். எனவே, இறையுணர்வு இலக்கியங்களைப் பொறுத்த வரையில் வீரயுகக் கலைஞர்களைப் போன்று இக்கவிஞர்களுக்கு முழு நிலையில் கற்பனைச் சுதந்திரம் இல்லை என்றே கூறலாம் நிலப்பிரபுத்துவ அமைப்பில் தோன்றிய ஏனைய கலைகளைப் போன்று கவிதையும் மனித இனத்தின் அல்லது ஒரு குறிப்பிட்ட மொழிக்குழுவின் (Linguistic community) ஒட்டு மொத்தமான உணர்வு வெளியீடாக அமையவில்லை. கோயில்களைச் சார்ந்து, கோயில்களை ஆதரித்து வாழ்ந்த ஒரு பிரிவினரின் உணர்வு வெளிப்பாடாகவே இக்காலக் கவிதைகள் அமைவதைக் காண்கின்றோம். இப்பிரிவினரின் உணர்வுகளை வெளிப்படுத்தும் தனிமனிதனாக, இப்பிரிவின் பிரதிநிதியாகவே கவிஞன் காட்சி தருகின்றான். இந்நிலையில் இறைநெறிப் பாடல்கள் அவ்வுணர்வுகளை ஏற்றுக்கொள்ளும் இப்பிரிவினரால் பகிர்ந்து கொள்ளும் இறையனுபவங்களைப் பெரும்பாலும் தாங்கியனவாக, பொதுமைப்படுத்தப்பட்ட நிலையில் அமைகின்றன எனலாம். அவற்றின் இயல்பு குறிப்பிட்ட சமயத்தின் எல்லையைப் பெரும்பாலும் தாண்டிச் செல்லாமல் அமைவது குறிப்பிடத்தக்கது.

### சமய மரபுகள்

முன்னர் குறிப்பிட்டதைப் போன்று இறையுணர்வினையும், கோயிலினையும் மையமாக்க் கொண்ட சமுதாயத்தில் மட்டுமே இறைநெறிப் பாடல்கள் பெருமளவில் மலர முடியும். இக்காலக் கட்டத்தில் சமுதாயச் சட்டங்களும் ஒழுக்கக் கோட்பாடுகளும் சமயக் கோட்பாடுகளோடு இணைத்து நோக்கப்படுவதைக் காணலாம். இத்தகைய மனப்போக்கு, இனக்குழு என்னும் நிலையிலிருந்து வளர்ந்த, நிலையாக அமையப் பெற்ற சமுதாய அமைப்பில்தான் ஏற்றம் பெற முடியும். நிலையான அரசும், வளர்ச்சி பெற்ற நிர்வாகமும் தோன்றிய காலக் கட்டத்தில்தான் இறைநெறி இலக்கியங்கள் தோன்ற முடியும். இப்பொதுவான போக்கிற்கு மாறுபட்ட இயல்புகளைச் சில மொழிகளில் தோன்றிய இறைநெறிப் பாடல்களில் காணமுடிகின்றது. இனக்குழு நிலையிலிருந்து முழுமையாக வளர்ச்சி பெறாத எபிரேயச் சமுதாயத்தில் இறைநெறிப் பாடல்கள் தோன்றியதை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

நிலையான அரசுகள் தோன்றிய பின்னர் உருப்பெற்ற தமிழ் இறைநெறிப் பாடல்களிலும் செந்நெறிப் படைப்புக்களின் பொதுவான போக்குகள் சிலவற்றை நாம் காண்கின்றோம். வீரயுகத்திற்குப் பின்னர் இப்படைப்புக்கள் தோன்றியதால் வீரயுகக் கவிதைகளின் தன்மைகள் பலவற்றை இவை அப்படியே பின்பற்றியுள்ளன. வீரர்களோடு சார்த்திக் கூறப் பெறும் வீரயுகச் செய்திகளையும், காதல் நிகழ்வுகளையும் இவை இறைவன் மீது ஏற்றிப் பாடின. வீரயுகப் பாடல்கள் தனியுடைமையின் (Private property) பெருக்கத்திற்கு மறைமுகமாகத் துணை செய்தன. அறநெறிப் பாடல்களும், இறைநெறிப் பாடல்களும் ஈட்டிய செல்வத்தைப் பிறர் கவராமல் பேணிப் பாதுகாப்பதற்குரிய வழிவகைகளை மறைமுகமாக எடுத்தியம்பின.

### இயக்க இலக்கியம்

மேற்கூறிய படைப்புக்களை ஒரு குறிப்பிட்ட சமயப் பிரிவினரின் இலக்கியம் அல்லது ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் இலக்கியம் என்று அழைப்பது மிகவும் பொருந்தும். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட இயக்கம் அல்லது பிரிவின் இலட்சியங்கள், தத்துவங்கள் ஆகியவற்றைப் பரப்பும்

குறிக்கோளுடன் இவை எழுந்துள்ளன. எனவே இப்படைப்புக்களில் பிரச்சார நோக்கம் மிகுந்து காணப்படுவது இயல்பே. தான் சார்ந்திருக்கும் குழுவின் அல்லது இயக்கத்தின் அல்லது சமயத்தின் இலட்சியங்களை ஆற்றலுடன் பரப்பி, அவ்வியக்கத்தின் கரங்களை வலுப்படுத்துவதே மேற்கூறிய இலக்கியங்களின் அடிப்படைக் கோட்பாடாகத் திகழ்கின்றது. எனவே சாதாரண மக்களை மனதிற் கொண்டு அவர்களைக் கவர்ந்து தன்வயப்படுத்தும் குறிக்கோளுடன் இப்படைப்புக்கள் அமைகின்றன. இதனால் சாதாரண மக்களிடையே பெருவழக்கில் நின்று நிலவும் நாட்டுப்புற இலக்கியக் கூறுகளை இறைநெறிப் பாடல்கள் இயன்ற அளவிற்குப் பயன்படுத்த முயல்வதைக் காண்கின்றோம்.

பரிபாடலின் 17வது பாடல் திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கும் முருகப் பெருமானின் முன்னிலையில் முருகக் கடவுளின் வழிபாடு இயற்றுபவனான வேலன் நிகழ்த்தும் வெறியாடலைப் பற்றிய நீண்ட வர்ணனையைத் தருகின்றது. இப்பகுதி சங்க அகப்பாடல்களில் இடம் பெறும் குறிஞ்சித்திணை பற்றிய பாடல்களில் அமையும் வெறியாடல் காட்சிகளை நம் மனக்கண்முன் கொண்டு நிறுத்துகின்றது. இதே கவிதையின் மற்றொரு பகுதி பரத்தை ஒருத்தியுடன் இரவுப் பொழுதைக் கழித்து விட்டுக் காலை வீடு திரும்பும் கணவன் மீது ஊடல் கொண்டு ஒரு மனைவி சண்டையிடும் காட்சியை அல்லது ஊடல் கொள்ளும் நிகழ்ச்சியை நம் மனக்கண்முன் கொண்டு நிறுத்துகின்றது. இவை போன்ற காட்சிகள் சங்க இலக்கியங்களில் அமைந்துள்ள மருதப் பாடல்களை நினைவூட்டுகின்றன. அழகிய இயற்கை வர்ணனைகள் மேற்கூறிய கவிதையை அணி செய்கின்றன. இறைவனின் மகத்துவத்தை மண்ணுலக மாந்தருக்கு வெளிப்படுத்திக் காட்டும் அருட்காட்சியாக இப்பாடலின் இயற்கைக் காட்சிகள் அமைகின்றன.

ஒரே பாடலில் அமையும் மேற்கூறியன போன்ற பல்வேறு வகைப்பட்ட காட்சிகள் பரிபாடலின் இறைநெறிப் பாடல்களுக்குப் பரந்த பின்னணியினை அமைத்துத் தரத் துணை செய்துள்ளன. அதோடு, இப்பாடல்களின் மைய உணர்வாக அமையும் இறைநெறி உணர்வைக் கலைநுட்பத்துடன் அழுத்தம் பெறச் சித்திரிக்க இவை பல நிலைகளிலும் துணை செய்வதைக் காண்கின்றோம். பல்வேறு வகைப்பட்ட காட்சிகளை ஒன்றாக இணைத்து, மரபு இலக்கியங்களின் சிறந்த கூறுகளையும்,

நாட்டுப்புறப்பாடல்களின் உயிரோட்டமுள்ள பகுதிகளையும் கலந்து ஒரு கலவை இலக்கியமாக இறைநெறிப் பாடல்களைப் படைத்துத் தருவதே இக்கவிஞர்களின் குறிக்கோளாக அமைவதைக் காணலாம்.

**இருவேறு மரபுகள்**

உலகெங்கிலும் தோன்றிய இறைநெறிப் பாடல்களை முழு நிலையில் பகுப்பாய்வு செய்து காணும்போது அவற்றை இருபெரும் மரபுகளுக்குள் அடக்க முடிகின்றது. இவற்றுள் முன்னைய மரபினைச் சார்ந்த படைப்புக்கள் (The affective tradition) சாதாரண மனிதர்களைக் கவரும் எளிமையான சொல்லாட்சி, எளிமையான மெட்டுக்கள், உணர்வுகளை நேரடியாக வெளிப்படுத்தும் தன்மை ஆகியவற்றைப் பெற்றுத் திகழும். இரண்டாவது வகையினைச் சார்ந்த இறைநெறிப் பாடல்கள் (The theological tradition) அதிகமாகத் தத்துவச் சிந்தனைகளுக்கும், ஆழ்ந்த தருக்கவியல் செய்திகளுக்கும் அதிகச் சிறப்பிடம் தருகின்றன. இவற்றைப் பாமர மக்கள் படித்துப் பயன் பெறுவது அரிது. முன்னைய மரபில் தோன்றிய இறைநெறிப் பாடல்கள் நாட்டுப்புற இலக்கியங்களின் கூறுகளையும், சாதாரண மனிதர்களின் எளிமையான இறைநெறி அனுபவங்களையும், உள்ளத்தைக் கவரும் உணர்ச்சி கலந்த சொல்லாட்சியினையும், இசைச் சிறப்புக்களையும் பெற்றுத் திகழும். பின்னைய மரபில் தோன்றிய படைப்புக்களில் இவ்வியல்புகள் குறைந்து, சொல்விளையாட்டும், ஆழ்ந்த உள்ளுறைப் பொருளும் மிகுந்து காணப்படும். பெரும்பாலும் கற்றுத் துறைபோகிய சான்றோர்களையும், உயர்குடி வர்க்கத்தினரையும் கவர்வனவாக இப்படைப்புக்கள் அமைகின்றன.

தமிழில் காணக்கிடக்கும் தோத்திர நூற்களை முன்னைய மரபிலும், சாத்திர நூற்களைப் பின்னைய மரபிலும் அடக்கிக் காண முடியும். தொடக்க நிலையில் தோன்றிய இறைநெறிப் பாடல்களான பரிபாடலின் கவிதைகளை மேற்கூறியவாறு இரு கூறுகளாகப் பிரித்துக் காண்பது அரிதாக உள்ளது. இப்பாடல்கள் மேற்கூறிய இரு மரபுகளும் இணைந்த கலவைப் பாடல்களாக அமைகின்றன. இந்நிலையில் முன்னர் சுட்டிய இரு பிரிவுகளும் தோன்றுவதற்கு முன்னர் எழுந்த தொடக்க கால இறைநெறிப் பாடல்களாகப் பரிபாடலின் கவிதைகள் அமைகின்றன எனலாம்.

**வளர்ச்சி இலக்கியம்**

எந்த ஓர் இலக்கிய வகையும் திடீரென்று வெற்றிடத்திலிருந்து தோன்றி விடுவது கிடையாது. எல்லா இலக்கியப் படைப்புக்களும் ஒரு குறிப்பிட்ட சமுதாயப் பொருளாதாரப் பண்பாட்டுப் பின்புலன்களுக்குக் கட்டுப்பட்டே தோன்றி வளர்கின்றன. எனவே எந்தக் கலைஞனையும், எந்தக் கலைப் படைப்பையும் சமுதாயப் பண்பாட்டுப் பின்புலன்களை விட்டுப் பிரித்தெடுத்துத் தனித்துக் காண்பது பயனற்ற செயலாக அமைந்து விடுகின்றது. ஒரு குறிப்பிட்ட கலைஞன் அல்லது கலைப் படைப்பைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், அக்கலைப் படைப்பிற்கு முன்னர் இருந்த கலை மரபுகள், அக்கலைஞனுக்கு முன்னர் வாழ்ந்து மறைந்துபோன கலைஞர்கள், அவர்கள் ஏற்படுத்திய சாதனைகள் ஆகிய அனைத்தையும் இணைத்து ஆராய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஏனெனில் எல்லாக் கலைகளும் பழைய மரபுகளில் தம் கால் சுவடுகளை அழுத்தமாக ஊன்றி நின்றே புதுமைகளையும், புதிய சாதனைகளையும் படைக்கின்றன. இந்நிலையில் பழமையை அப்படியே பிரதிபலிப்பதில் எந்தக் கலையும் வெற்றி பெறுவது கிடையாது. படைப்பு ரீதியில் பழமையைச் சிந்தித்துப் பழைய மரபுகளை அழுத்தமாகப் புரிந்துகொண்டு, அவற்றின் இயல்புகளைத் தன் வயப்படுத்திக்கொண்டு, படைப்புக் கண்ணோட்டத்துடனும், புதிய வேகத்துடனும் அவற்றைக் கலைப்படுத்துவதில் மட்டுமே உண்மைக் கலைஞனின் வெற்றி அமைந்து கிடக்கின்றது. பழமையை அப்படியே சுவீகாரம் செய்வதினால் மட்டுமே எந்தக் கலைஞனும் கலைத்துறையில் வெற்றி பெற்றுவிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு கவிஞன் பழமையை அப்படியே பிரதிபலிக்கவோ அல்லது மீட்டுருவாக்கம் செய்யவோ முயலும்போது அவனால் எதையும் புதுமையாகப் படைக்க முடியாது. ஆனால் பழமையைப் படைப்பு உள்ளத்துடன் சிந்தித்துத் தன் வயப்படுத்திக் கொள்ளும்போது அவனால் பழமையை அடித்தளமாகக் கொண்டு அரிய பல புதிய சாதனைகளைக் கொண்டுவர முடியும்.

பரிபாடலில் அமையும் இறைநெறிப் பாடல்களை இவற்றிற்கு முந்திய இலக்கியங்களோடு இணைத்து அவற்றின் தொடர்ச்சி இலக்கியமாகக்

காணும்போது இப்பாடல்களைப் பாடிய கவிஞர்கள் மரபுக் கவிஞர்களாக நமக்குக் காட்சி தருகின்றனர். தம் முன்னோர்களின் மரபுகளைப் படைப்பு உள்ளத்துடன் தம்முடைய சொந்த மரபாகத் தன்வயப்படுத்திக் கொண்டு தம் சமகாலச் சமுதாயப் பின்புலன்களுக்கேற்ப அவற்றிற்குப் புது மெருகு தந்து படைப்பவரே சிறந்த மரபுக் கவிஞராக அமைய முடியும். பரிபாடலின் கவிஞர்கள் பழைய மரபுகளையும், உத்திகளையும் தம் வயப்படுத்திக்கொண்டு புதிய வகையான படைப்புக்களைத் தோற்றுவிக்க முயல்கின்றனர். பழைய இலக்கியங்களின் உயிரோட்டமுள்ள பகுதிகளைத் தம் வயப்படுத்திக் கொண்டு அவற்றைப் புதிதாகத் தோன்றிய இறையுணர்வுடன் இணைத்துப் புதுவகையான இறைநெறிப் பாடல்களை அவர்கள் படைத்துள்ளனர் எனலாம்.

எனவே தனியொரு கவிதையில் கூட பல்வேறு வகைப்பட்ட உணர்வுகளையும் காட்சிகளையும் நம்மால் காணமுடிகின்றது. சான்றாகப் பரிபாடலின் 17வது கவிதையில் படிப்பவரின் கண் முன்னர் திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள முருகப் பெருமானின் கோயிலைக் கொண்டு நிறுத்தி, அங்கு நடைபெறும் வழிபாட்டு முறைகளை முதற் பகுதியில் அக்கவிஞர் விளக்கிச் செல்கின்றார். இக்கவிதையின் இரண்டாவது பகுதியில் அக்கவிஞர் இயற்கையும், இசைக் கருவிகளும் எழுப்புகின்ற பல்வேறு வகைப்பட்ட இசைகளைப் படிப்பவர்கள் அல்லது கேட்பவர்கள் தம் செவிப்புலனால் உணருமாறு செய்கின்றார். இக் கவிதையின் மூன்றாவது பகுதியில் பல காதற்காட்சிகள் இடம் பெறுகின்றன. நான்காவது பகுதியில் படிப்பவர்கள் அல்லது கேட்பவர்கள் தம் க்ற்பனை உணர்வால் சில இயற்கை இகந்த நிகழ்ச்சிகளைக் கண்டு அனுபவிக்க முடிகின்றது. பாடலின் ஐந்தாவது பகுதி மருதப்பாடல்களில் அமையும் ஊடல் காட்சியை அமைத்துத் தருகின்றது. ஆறாவது பகுதியில் மலையிலிருந்து மாலை போன்று விழும் அழகிய அருவிக் காட்சி இடம் பெறுகின்றது. இறுதிப் பகுதியில் தன் சமயப் பிரிவினர்களுக்காகக் கவிஞர் மேற்கொள்ளும் மன்றாட்டில் (Prayer) படிப்பவர்களும் கலந்து கொள்வது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. இதே அமைப்பு சில மாறுதல்களுடன் அடுத்த கவிதையிலும் இடம் பெறுவதைக் காண்கின்றோம்.

### இசையும் இசைச் சிறப்பும்

பொதுவாக இறைநெறிப் பாடல்கள் இசையோடு பாடப்படுவதற்காக எழுதப்படுகின்றன. எனவே தமிழ் இறைநெறிப் பாடல்களின் மரபில் இசை இணைபிரியாத கூறாக அமைகின்றது. தமிழில் தோன்றிய இறைநெறிப் பாடல்கள் இசைக்கு அதிகச் சிறப்புத் தந்துள்ளன. இதுவே காலப்போக்கில் இறைவனை இசையாகக் காணும் மனப்போக்கினைத் தோற்றுவித்துள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் இசையமைதி தருவது இறைநெறிப் பாடல்களின் தனித்த சிறப்புப் பண்பாக அமைகின்றது. இப்போக்கினை ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடிய பக்திப் பனுவல்களில் அதிகமாகக் காண்கின்றோம். பாடல்களுக்கு இசையமைக்கும் போக்கினைப் பரிபாடலிலும் காணமுடிகின்றது. அடிக்குறிப்பு எழுதியோர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இரு பாடல்களுக்கும் நல்லச்சுதனார் என்பவர் இசையமைத்ததாகவும், முதற்பாடல் நோதிறம் என்னும் பண்ணைத் தழுவியும், அடுத்தபாடல் காந்தாரம் என்னும் பண்ணைத் தழுவியும் அமைவதாகக் குறிப்பிட்டுள்ளனர். பரிபாடலின் அனைத்துப் பாடல்களும் இவ்வாறு பண் அமைப்பினைப் பெற்றுத்திகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இது பண் சுமந்த பாடல்களாக இக்கவிதைகள் அமைய அடித்தளம் அமைத்தும் கொடுத்துள்ளது.

இசைச் சிறப்பைப் பொறுத்த வரையில் பரிபாடலின் கவிதைகளைத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் என்ற வகையில் அடக்கிக் காண முடிகின்றது. எனினும் மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் குறிப்பிடும் தன்னுணர்ச்சிப் பாடல்களை முழுமையாகப் பின்பற்றி இவை அமைகின்றன என்று கூறமுடியவில்லை. மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் குறிப்பிடும் தன்னுணர்ச்சிக் கவிதைகளைப் போன்று தனிப்பட்ட கவிஞனின் சொந்த உணர்வுகளும், சிந்தனைகளும் இப்பாடல்களில் தங்கு தடையின்றிப் பொங்கி வழிகின்றன என்று கூற முடியவில்லை. மேலோட்டமாகப் பார்க்கும் போது கவிஞர்களின் சொந்த உணர்வுகளும், அனுபவங்களும் குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்த அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படும் பொது உணர்வுகளாகவும், அனுபவங்களாகவும் இப்பாடல்களில் கலைவடிவம் பெற்றுள்ளன. எனவே இப்பாடல்கள் வெளிப்படுத்தும்

உணர்வுகளைத் தனிப்பட்ட உணர்வுகளாகவும், அனுபவங்களாகவும் கொள்வதை விட பொதுமைப்படுத்தப்பட்ட உணர்வுகளாகவும், அனுபவங்களாகவும் கொள்வதே பொருந்தும். உணர்வுகள் பொதுவானவையாகவும், இலட்சியங்களும், அனுபவங்களும் ஒரு குழுவைச் சார்ந்த மக்கள் அனைவருக்கும் உரியனவாகவும் இருப்பதால் சாதாரணத் தன்னுணர்ச்சிக் கவிதைகள்ளை விடவும் நிலைத்த வாழ்வினையும், பரந்த நோக்கினையும் இப்படைப்புக்கள் பெற்றுவிடுகின்றன. மேற்கூறிய உணர்வுகளும், அனுபவங்களும் தனிப்பட்ட கவிஞர்களின் வாயிலாக வெளிப்பட்ட போதிலும் இவற்றைப் பாடுபவர்களும் கேட்பவர்களும், தங்கள் சொந்த உணர்வுகளும், அனுபவங்களும் இவற்றுள் எதிரொலிப்பதாக உணர்கின்றனர். தம் சொந்த இலட்சியங்களும், அனுபவங்களும் இப்படைப்புக்களில் பிரதிபலிப் பதாகவும், கலை வடிவம் பெறுவதாகவும் இவற்றைப் படிப்போரால் அல்லது கேட்போரால் தெளிவுற உணரமுடியும் வண்ணம் இப்பாடல்களை இக்கவிஞர்கள் அமைத்துள்ளனர்.

வீறுணர்ச்சிக் கவிதைகள், புறநானூற்றின் சில பாடல்கள் ஆகியவற்றைப் போல் அல்லாமல் இறைநெறிப் பாடல்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளை ஒரே சிந்தனையை அல்லது குறிக்கோளை ஏற்றுக் கொண்ட பலரால் பொது நிலையில் பகிர்ந்து கொள்ள முடிகின்றது. சாதாரணத் தன்னுணர்ச்சிப் பாடல்களைப் போன்று இக்கவிதைகளில் கவிஞன் தன்னைப் பற்றியோ தனக்காகவோ அதிகம் பேசுவதைக் காண முடியவில்லை. தன் குழுவைச் சார்ந்த அனைவரும் கடவுளைப் பற்றியோ அல்லது கடவுளிடமோ பேசுவதாக இப்படைப்புக்களைக் கவிஞன் அமைக்கின்றான். எனவே, இப்பாடல்களில் வெளிப்படுத்தப்படும் குரல் தனிமனிதக் குரலாக அமைந்தபோதிலும் அது ஒரு குழுவின் குரலாக அமைகின்றது. இப்பாடல்கள் வெளிப்படுத்தும் அனுபவங்களும், உணர்வுகளும் தனிமனித அனுபவங்களாகவும், உணர்வுகளாகவும் அமையாமல், ஒரு குழுவின் அனுபவங்களாகவும், உணர்வுகளாகவும் அமைகின்றன.

இப்படைப்புக்களில் கவிஞன் தனி மனிதனாகச் செயல்படாமல் ஒரு குழுவின் பிரதிநிதியாகச் செயல்படுகின்றான். நான் என்று தன்மை ஒருமையில் அவன் வெளிப்படுத்தும் ஆளுமை ஒரு குழுவின்

ஆளுமையாகவே அமைகின்றது. ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இரு பாடல்களும் குழுவாக இணைந்து பாடுவதற்கென்று (Group Singing) அமைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவு. இப்பாடல்களில் அடிக்கடி 'யாம்' என்னும் தன்மைப் பன்மை மூவிடப் பெயர் இடம் பெறுவதைக் காண்கின்றோம். மேலும் தன்னுணர்ச்சிப் பாடல்களைப் போன்று உணர்வுகளை நேரடியாக வெளிப்படுத்தும் இயல்பினை இப்பாடல்களைப் பாடிய கவிஞர்கள் மேற்கொள்ளவில்லை. அவ்வாறே நாடகப் போக்கிலோ, காப்பியப் போக்கிலோ உணர்வினை வெளிப்படுத்தும் முயற்சியிலும் இவர்கள் ஈடுபடவில்லை.

தன்னுணர்ச்சிப் பாடல்களின் உணர்த்தும் முறை, நாடகப் பாடல்களின் உணர்த்தும் முறை, காப்பியப் பாடல்களின் உணர்த்தும் முறை ஆகிய மூன்று வகையான உணர்த்தும் முறைகளையும் ஒருங்கே இணைத்து ஒரு புது வகையான உணர்த்து முறையை இவர்கள் தம் படைப்புக்களில் பின்பற்றுவதைக் காண்கின்றோம். எனவே இவ் இறைநெறிப் பாடல்கள் தன்னுணர்ச்சிப் பாடல்கள், தற்சாராப் பாடல்கள் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட ஒருவிதப் பாடல் வகையாக அமையக் காண்கின்றோம். இத்தகைய அமைப்பு கலை நிலையில் கவிஞனுக்கு ஓரளவிற்குச் சுதந்திரத்தை அளித்துள்ளதோடு வாசகர்களுக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒரே கவிதையில் ஒருங்கே காணும் வாய்ப்பினை நல்கியுள்ளது எனலாம். இந்நிலையில் இந்நீண்ட கவிதைகள் ஓரளவிற்குக் கதைப் பாடல்களின் தன்மைகளைப் பெற்றுத் திகழ்கின்றன. கதைப் பாடல்களைப் போன்று உணர்த்தும் முறை (narration), பாத்திரப் படைப்பு, பாடு பொருள் (theme) ஆகிய அனைத்தும் இவற்றில் சிறப்புற அமைந்துள்ளன.

### மன்றாட்டுப் பாடல்கள்

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட இவ்விரு பாடல்களையும் மன்றாட்டுப் பாடல்கள் (Prayer Songs) என்றும் அழைக்கலாம். கடவுளை அழைத்துப் பேசும் கவிஞன் இப்பாடலின் இறுதிப் பகுதியினை உணர்ச்சி மிகுந்த மன்றாடுதலாக அமைப்பது குறிப்பிடத்தக்கது. பரிபாடலின் 17வது கவிதையில் நீண்ட வாழ்நாளினையும் அமைதியான வாழ்க்கையினையும் தரும்படிக் கவிஞன் கடவுளிடம் வேண்டுதல் செய்கின்றான். இதன்

அடுத்த கவிதையில் திருப்பரங்குன்றத்தில் அமர்ந்திருக்கும் கடவுளின் தூய பாதங்களில் தன் உறவினர்களோடு நீண்ட காலம் வாழத் தனக்கு அனுமதி தருமாறு கடவுளை வேண்டுகின்றான்.

மன்றாட்டுப் பாடல்களில் ஒரு விதப் பொதுவான அமைப்பினை நாம் காணமுடிகின்றது. முன்னர் கடவுளைத் தான் வேண்டிப் பெற்ற சலுகைகள் அனைத்தையும் நிரல்படக் கூறி அவற்றிற்கு நன்றி தெரிவித்து, அவற்றைப் போன்று தற்போதும் இறைவன் தனக்கு அருள் செய்ய வேண்டுமென்று கவிஞன் கடவுளிடம் முறையிடுவதாக இப்பாடல்களின் புறவடிவம் அமையும். இவ்வமைப்பினை மன்றாட்டுப்பாடல்களில் மட்டுமன்றிச் சாதாரண வேண்டுதல்களிலும் காணமுடிகின்றது. இது போன்ற அமைப்பினை உலக மொழிகள் அனைத்திலும் தோன்றிய மன்றாட்டுப் பாடல்களில் நாம் காண்கின்றோம். இது போன்ற அமைப்பினை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இரு பாடல்களிலும் அதிகமாகக் காணமுடியாத போதிலும் பரிபாடலின் ஏனைய பாடல்களில் இவை அதிக அளவில் அமையக் காணலாம். ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பாடல்களில் மேற்கூறிய நினைவூட்டுப் பகுதிகளுக்குப் பதிலாகப் பல்வேறு காட்சிகளை ஆசிரியர் அமைத்த போதிலும் குறிக்கோள் நிலையிலும் பயன்பாட்டளவிலும் அவை ஒன்றாகவே அமைகின்றன. புராதனக் கவிதைகளில் (Primitive Poetry) அமையும் இவை போன்ற அமைப்பினை ஆராய்ந்த பேராசிரியர் ஜார்ஜ் தாம்சன் என்னும் திறனாய்வாளர் இவ்வமைப்பு புராதன மந்திரச் சடங்குகளில் (Primitive magic) அமைவதாகவும், அதன் தொடர்ச்சியாக இவ்வுத்தி முறை இறைநெறிப் பாடல்களில் தொடர்வதாகவும் எழுதிச் செல்கின்றார்.

### கவிதைக் கோட்பாடு

பரிபாடலைப் பாடிய கவிஞர்கள் கவிதையைப் பாடல் என்னும் சொல்லால் சுட்டுகின்றனர். அதோடு கவிதை படைப்பதை ஒரு தெய்வீகச் செயலாக அவர்கள் கருதுகின்றனர். இதற்குச் சான்றாகப் பரிபாடலின் 17வது பாடல் அமைகின்றது. இப்பாடல், கவிதையை,

"பாடல் சான்று பல்புகழ் முற்றிய
கூடலொடு பரங்குன் றினிடை" (பரி. 17: 20-22)

என்று விளக்குகின்றது.

இக்கவிஞர்கள் கவிதையால் எந்த இடத்தினையும் அமரத்துவம் வாய்ந்ததாக, சாகாப்புகழ் பெற்ற இடமாகச் செய்ய முடியுமென்று நம்பினர். இவ்வாறு குறிப்பிட்ட இடங்களைத் தெய்வீகத் தன்மை வாய்ந்ததாகக் குறிப்பிடும் போக்கு பிற்காலத்தில் இறைவன் வீற்றிருக்கும் திருத்தலங்களை மையமாகக் கொண்டு எண்ணற்ற தல புராணங்கள் தோன்றுவதற்குத் துணை செய்தது.

இசைக்குச் சிறப்பளிக்கும் இக்கவிஞர்கள் கவிதையை இசையோடு இணைத்தே காண்கின்றனர்.

"நைவளம் பூத்த நரம்பியியைசீர்ப் பொய்வளம்
பூத்தன பாணாநின் பாட்டு" (பரி. 18:20-21)

என்ற வரிகள் கவிதை இசையோடு பாடப்பட வேண்டியது என்பதனையும், இசைக் கருவிகளின் துணையோடு அது இசைக்கப்பட வேண்டும் என்பதனையும் தெளிவுபடுத்துகின்றன.

இலக்கியம் வாசகர்களின் மனத்தினையும், கலையுணர்வினையும், கற்பனை ஆற்றலினையும், அனுபவங்களையும் விரிவுபடுத்தும் தன்மை வாய்ந்தது. இதற்குச் சற்று மாறுபட்ட நிலையில் இறைநெறி இலக்கியங்கள் செயல்படுவதைக் காண்கின்றோம். உலகப் பிரச்சினைகளிலிருந்தும், சிக்கல்களிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் விடுதலை தருவதைப் போன்ற உணர்வைப் படிப்பவர்களின் உள்ளங்களில் இறைநெறிப் பாடல்கள் ஏற்படுத்துகின்றன. உலகப் பற்றுக்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு, உலகத் துயரங்களை எல்லாம் துறந்து பற்றற்ற இறைவனின் தூய பாதங்களில் வந்து சேருமாறு இறைநெறிப் பாடல்கள் படிப்போரைத் தூண்டுகின்றன. திருப்பரங்குன்றம் பற்றிய அழகிய வர்ணனையைத் தருவதின் மூலமும், திருப்பரங்குன்றத்தின் உயர் தனிச் சிறப்பினை விரித்தோதுவதின் மூலமும் மக்களை இத்தலத்தில் வந்து கவலைகளை மறந்து வாழுமாறு கவிஞன் வேண்டுவதைக் காண்கின்றோம். மனிதத் துன்பங்களிலிருந்தும், உலகத் துயரங்களி லிருந்தும் தன்னையும், தன்னுடைய உறவினர்களையும் விடுவித்துத் திருப்பரங்குன்றத்திலுள்ள தன் சந்நிதானத்தில் வாழ அனுமதி நல்குமாறு இறைவனிடம் இப்பாடலில் கவிஞன் முறையிடுவதைக் காண்கின்றோம்.

இறைநெறிக் கவிஞர்கள் அனைவருமே இவ்வாறு உலகத் துன்பங்களிலிருந்தும், பிரச்சினைகளிலிருந்தும் விடுபட்டு இறைவனின் பாதங்களைப் பற்றுமாறு மக்களைத் தூண்டுவதைக் காணலாம். எனவே, வீடுபேற்றை நல்குவதே கவிதையின் குறிக்கோள் என்று இவர்கள் கருதினர் என்பதை உணரமுடிகின்றது. இந்தியத் திறனாய்வாளர்கள் பொதுநிலையில் வீட்டின்பத்தைத் தருவதுதான் இலக்கியத்தின் முடிவான குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என குறிப்பிடுவது இங்கு இணைத்து நோக்குவதற்குரியது. சமுதாய நிலையில் நோக்கும்போது தம் சமயப் பிரிவைச் சார்ந்த மக்கள் உள்ளங்களில் பேரின்ப உணர்வைத் தோற்றுவிப்பது, தம் சமயக் கோட்பாடுகளை அவர்கள் உள்ளத்தில் ஆழமாக விதைப்பது, உயர்குடி மக்கள் வற்புறுத்திய இலட்சியங்களைத் தெய்வீக இலட்சியங்களாகச் சுட்டி மக்கள் மனதில் அக்காலத்திற்கேற்ற அறவுணர்வுகளைப் புகட்டுவது ஆகிய குறிக்கோள்களை மையமாகக் கொண்டு இப்பாடல்களை இக்கவிஞர்கள் பாடியுள்ளனர் எனலாம்.

**கவிஞன்**

முன்னர்க் குறிப்பிட்டதைப் போன்று கற்றுத் துறைபோகிய அறிஞர்களாக வாழ்ந்த கவிஞர்களால் இக்கவிதைகள் எழுதப்பட்டன என்பது தெளிவு. இசைக் கருவிகளை மீட்டிப் பாடும் பாணர்கள் சமயத் திருவிழாக்களின் போதும், ஏனைய நிகழ்ச்சிகளின் போதும், இப்பாடல்களைப் பாடித் திரிந்தனர் என்று அறிகின்றோம். ஒரு கவிதையின் தன்மை எவ்வாறு அமைகின்றது என்பதைச் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் அக்கவிதையை எந்தக் குறிக்கோளோடு கவிஞன் பாடினான், யாருக்காகப் பாடினான், எந்த வர்க்கத்தின் இலட்சியங்களை அவன் தழுவிக் கொண்டான் என்பனவற்றை எல்லாம் அறிவது இன்றியமையாதது. ஒரு கவிஞனின் இலட்சியம் என்ன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றால் சமுதாயத்தில் அவனது நிலை என்ன என்பதனையும், மக்களோடு அவன் கொண்டிருந்த தொடர்பு என்ன என்பதனையும் அறிவது மிகவும் தேவை.

தொடக்கக் காலத்தில் இலக்கியத் துறையில் உயரிய இடத்தை வகித்து வந்த யாழ் ஏந்தித் திரிந்த பாணர்கள் (wandering ministrels) காலப் போக்கில் சமுதாயத்தில் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். கற்றுத்

துறை போகிய அறிவு சான்ற புலவர்கள் இவர்களின் இடத்தைப் படிப்படியாகக் கவர்ந்து கொண்டனர். இதன் விளைவாகச் சமுதாயத்தின் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்ட பாணர்கள் பொருளாதார நிலையிலும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். இக்காலக் கட்டத்தில் காதலர்களுக்குத் தூது செல்பவர்களாகவும், செல்வந்தர்களின் பொருட்டாகப் பரத்தையர்களிடம் தூது செல்பவர்களாகவும், தலைவனின் ஒழுக்கமற்ற நடத்தைக்காக அவனிடம் ஊடல் கொள்ளும் தலைவியை அமைதிப்படுத்தும் தூது முயற்சியை மேற்கொள்பவர்களாகவும் இவர்கள் தமிழ்ச் சமுதாயத்தில் பணியாற்றத் தொடங்கினர். சில இடங்களில் தூண்டில் போட்டு மீன்களைப் பிடிக்கும் வேலையினையும் இவர்கள் செய்வதைக் காண்கின்றோம்.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பரிபாடலின் 18வது பாடலில் சண்டையிடும் செல்வந்தனின் மனைவியின் முன்னர் அவளை அமைதிப்படுத்தும் குறிக்கோளுடன் தனக்குப் பொருள் கொடுத்த அச் செல்வந்தக் கணவனின் புகழைப் பாணன் பாடுவதைக் காண்கின்றோம். பரிபாடலின் ஆறாவது கவிதை கவிஞர்களை 'மாசில் பனுவல் புலவர்' என்று குறிப்பிடுகின்றது. மேற்கூறிய தொடர், கவிஞர்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென்று அச்சமுதாயம் எதிர்பார்த்தது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. குறையற்ற நூல்களைக் கற்றுத் துறைபோகியவர்களாகக் கவிஞர்கள் இருக்க வேண்டும் அல்லது குறையற்ற நூல்களைப் படைக்கும் திறமையை அவர்கள் பெற்றிருக்க வேண்டுமென்பதை மேற்கூறிய தொடர் உணர்த்தி நிற்கின்றது. மாசில் பனுவல் என்ற தொடரால் உயர்தரமான நூற்களைக் கவிஞன் படைக்க வேண்டும் அல்லது படிக்க வேண்டும் என்பதை அறிகின்றோம். இத்தகைய உயர்தரமான நூல் என்பது உயர்குடி மக்களின் ஒழுக்கக் கோட்பாடுகளை வற்புறுத்தும் நூலாகவே அமையும். பாமரமக்களின் நாட்டுப்புறப் பாடல்கள் 'மாசில் பனுவல்' என்ற தொடரால், உயர்குடி மக்களின் இலக்கியங்களில் சுட்டப்படவில்லை என்பது தெளிவு.

மேற்கூறிய இதே கவிதையில் கவிஞனுடைய நாவினைச் சிறப்பிக்கும் ஆசிரியர் 'புல நா' என்று சுட்டுவதைக் காண்கின்றோம். இத்தொடர் அறிவு சான்ற நாவு என்ற பொருளைத் தருகின்றது. இத் தொடரால் புலமையும், கவிதைமரபு பற்றிய அறிவும் சிறந்த கவிஞர்களுக்கு

இன்றியமையாது அமைய வேண்டும் என்ற கருத்தை இக்கவிஞர்கள் கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

தொன்மையான புராதனக் கவிதைகளைப் (Primitive Poetry) பொறுத்த வரையில் கவிதையும் தீர்க்கதரிசனமும் (Prophecy) வேறுபடுத்தப் படவில்லை என்று தெரிகின்றது. புராதனக் கவிதைகளில் கவிஞனும், தீர்க்கதரிசியும் ஒருவராகவே திகழ்ந்தனர். எனினும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பரிபாடலின் கவிதைகளில் இந்நிலையைக் காணமுடியவில்லை. இக்கவிதைகளில் எந்தக் கவிஞனும் தன்னைத் தீர்க்கதரிசியாகப் பாவித்துக் கொள்ளவில்லை. தனக்கு மட்டுமன்றித் தன் சமயப் பிரிவைத் தழுவிய அனைத்து மக்களுக்காகவும் இறைவனிடத்தில் மன்றாடும் அருட் தொண்டர்களாகவே பரிபாடலின் இறைநெறிப் பாடல்களில் கவிஞர்கள் செயல்படுகின்றனர்.

பரிபாடலின் ஆறாவது பாடல் கவிஞர்களின் செயலாகப் புகழ் பாடுதலைக் குறிப்பிடுகின்றது. எனவே வாழ்த்துப் பாடல்களையும், வாழ்த்துப் பாடல்களோடு இணைந்த மன்றாட்டுக் கவிதைக்ளையும் அமைப்பதுவே இக்கவிஞர்களின் குறிக்கோளாக அமைகின்றது. இக் கவிதைகள் பெரும்பாலும் நாவினைக் கருவியாகக் கொண்டு பாடுவதற்காக எழுந்தன. எனவே கவிதையின் பயன்பாட்டிலும், கவிதையின் படைப்பிலும் நாவிற்கே அதிகச் சிறப்பிடம் தரப்பட்டது. 'நாவாற் புனைந்த நன்கவிதை' என்ற பரிபாடலின் தொடர் மேற்கூறிய கருத்திற்குச் சான்றாக அமைகின்றது. இத்தொடரில் இடம்பெறும் புனைதல் என்னும் சொல் கவிதை இயற்றும் செயலைச் சுட்டி நிற்கின்றது. புனைதல் என்பது அழகுபடுத்துதல் என்னும் பொருளையும் தரவல்லது. இது கவிதையை ஓர் அழகுக் கலையாக (Decorative Art) இக்கவிஞர்கள் கருதியதைத் தெரிவிக்கும். புனை என்னும் சொல் கற்பனையால் இல்லாத ஒன்றைப் புனைதல் என்ற பொருளையும் தரவல்லது. புராணச் செய்திகளை இறையுணர்வோடு எடுத்தியம்பும் இவ்விறைநெறிப் பாடல்களில் கற்பனை பெறும் இடத்தையும் மேற்கூறிய சொல் சிறப்பாகச் சுட்டி நிற்கின்றது. மேற்கூறிய தொடரில் இறைநெறிப் பாடலைச் சுட்டுவதற்குக் கவிதை என்னும் சொல்லை அக்கவிஞன் கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனினும் கவிதை, செய்யுள் ஆகிய

இரண்டையும் தனித்தனியாக இக்கவிஞர்கள் வேறுபடுத்திக் கண்டனரா என்பதைப் பாடல் தரும் சான்றுகளிலிருந்து தெளிவாக அறிய முடியவில்லை.

**படிப்போர் அல்லது கேட்போர்**

இலக்கியங்களைப் படிப்போர் அல்லது கேட்போரின் இலக்கிய நுகர்வில் ஏற்படும் மாற்றங்கள், புதிதாகத் தோன்ற இருக்கும் இலக்கியப் படைப்புக்களின் தன்மைகளை வரையறுப்பதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பாடல்கள் இலக்கியத்தை நுகர்வோர் பற்றி இக்கவிஞர்கள் கொண்டிருந்த இலட்சியக் கோட்பாடுகள் என்ன என்பதை அறிவதற்குரிய சான்றுகளை அதிகமாகத் தரவில்லை. எனினும், இப்பாடல்களின் தன்மைகளையும், அவை தோன்றிய சமுதாயத்தின் இயல்புகளையும் இணைத்து வைத்து நோக்கும்போது, வீரயுகக் காலத்தில் வாழ்ந்த இலக்கிய நுகர்வோரிலிருந்து மாறுபட்ட இலக்கியச் சுவைஞர்கள் பரிபாடலின் காலத்தில் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகின்றது. வீரச் செயல்களை விரும்பிக் கேட்கும் வீரயுக இலக்கிய நுகர்வோர்களைப் போல் அன்றி, உலகத் துன்பங்களிலிருந்து தப்பிச் செல்லத் துணை புரிவது போன்ற மனவுணர்வைத் தோற்றுவிக்கும் இறையுணர்வுப் பாடல்களையே இவர்கள் சுவைத்தனர் என்பது தெளிவு. எனவே, இப்பாடல்களின் அனைத்து நிகழ்ச்சிகளும், மனிதர்களைச் சுற்றிச் சுழல்வதாக அமையாது மனிதர்களிலிருந்து இலட்சியப்படுத்தப்பட்டுப் படைக்கப்பட்ட இயற்கை இகந்த கற்பனை மாந்தர்களான புராண வீரர்களைச் சுற்றியே சுழல்வனவாக அமைகின்றன.

மண்ணுலக வீரர்களின் மீது நம்பிக்கை இழந்து அவர்களின் குறைபாடுகளில் மக்கள் வெறுப்புக் கொள்ளும்போது தத்தம் கற்பனை ஆற்றலால் முருகன் போன்ற இயற்கை இகந்த தெய்வீக வீரர்களை அவர்கள் படைப்பது இயல்பே. இத்தகைய தெய்வீகப் புராண வீரர்கள் வீரயுகத்தில் வாழ்ந்த மனித வீரர்களின் இலட்சியப்படுத்தப்பட்ட வடிவங்களாகவே அமைகின்றனர் எனலாம். இத்தகைய புராண வீரர்கள் பற்றிக் குறிப்பிடும் மாக்சிம் கார்க்கி (Maxim Gorky) கீழ்க்கண்டவாறு எழுதிச் செல்கின்றார். அவர் கருத்துப்படி, ஓர் ஆண் அல்லது பெண்ணுடைய மிக உயர்வான பண்புகள் உண்மை வாழ்வில் சிறப்பாக

வெளிப்படுத்தப்படாதபோது மனித வாழ்க்கையிலிருந்து உயர்ந்த வாழ்க்கையை வாழும் கடவுளர்கள் படைக்கப்படுகின்றனர்.

### முருகியல் உணர்வு

இறைநெறிப் பாடல்கள் தரும் முருகியல் அனுபவத்தினை (Aesthetic Experience) ஒருவித மகிழ்வுணர்வாகவும் (State of bliss), ஒருவிதத் தன்னுணர்வு நிலையாகவும் (State of Self-Realization), ஒருவிதச் சுயநிறைவு உணர்வாகவும் (Self-fulfilment) சுட்டுவது மரபு. பரிபாடலின் கவிதைகள் முருகியல் உணர்வு பற்றிய தம் கோட்பாட்டினைத் தெளிவாக உணர்த்தவில்லை. எனினும் இப்பாடல்கள் பெருமளவிற்கு ஒருவித மகிழ்வுணர்வினையும் நிறைவுணர்வினையும் தருவதற்காகப் பாடப்பட்டன. இயன்றவரைக்கும் இக்கவிஞர்கள் தங்களின் சுயவுணர்வுகளைக் கலை உணர்வாக, தற்சாராத கவிதைகளாக மாற்றுவதற்கு முயல்வதைக் காண்கின்றோம். இத்தகைய போக்கு ஓரளவிற்குக் காலங்கடந்து வாழும் தன்மையை இக்கவிதைகளுக்கு நல்கியுள்ளது எனலாம்.

### மொழி நடை

மொழிக்கும் இலக்கியத்திற்குமிடையே உள்ள உறவு இணைபிரியாத உறவாக அமைகின்றது. கவிதையின் பாடுபொருள், அதன் குறிக்கோள் ஆகியவற்றிற்கேற்பக் கவிதையின் மொழிநடையும் மாறுபடக் காண்கின்றோம். கவிதையின் பாடுபொருள் விழுமிய தன்மையுடையதாக அமையும் பொழுது கவிஞர்கள் விழுமிய மொழிநடையினையும் (grand style), அணியலங்காரங்கள் மிகுந்த சொல்லாட்சிகளையும் பயன்படுத்துவதைக் காண்கின்றோம். கவிதையில் அமையும் செய்திகளை, கவிதையின் மொழிநடை தேர்ந்தெடுத்த சொற்களால், இறுக்கமாகத் தருவதால் அது சாதாரண மனிதர்கள் பயன்படுத்தும் மொழி நடையிலிருந்து வேறுபடுவது இயல்பே.

அரண்மனைகளில் தோன்றிய ஏனைய அரசவைக் கவிஞர்களின் மொழிநடையைப் போன்று பரிபாடலில் இடம்பெறும் கவிதைகளின் மொழிநடையும் சொல்லணிகளால் சிறப்புப்பெறும் அலங்கார மொழிநடையாக (figurative language) அமைகின்றது. இவ்வலங்கார

மொழிநடை உலகியல் தொடர்பான செய்திகளை அக்கால மனிதர்கள் அணுகிய ஒரு விதத் தனிப்போக்கைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. இவ்வலங்கார மொழிநடை எளிதில் மனித உள்ளத்தைக் கவர்வதாக அமைகின்றது. ஏனெனில் ஒவ்வொரு மனிதனின் அடிமனத்திலும் கவித்துவத் தன்மை இயல்பாகவே அமைந்து கிடக்கின்றது. இத்தகைய அலங்கார மொழிநடையைக் கற்கும்போது அல்லது கேட்கும்போது மனத்தில் அமைந்துள்ள கவித்துவத் தன்மை தூண்டப்படுகின்றது. இதுவே மனிதச் சமுதாயம் அலங்காரப்படுத்தப்பட்ட மொழி நடையை அதிக ஆர்வத்துடன் வரவேற்பதற்குரிய உளவியல் காரணமாக அமைகின்றது.

தாம் கையாளும் அலங்கார நடைக்கு உணர்த்தும் ஆற்றலை அதிகமாகத் தரவேண்டிய தேவை ஏற்படும்போது, இக்கவிஞர்கள் இம்மொழி நடையோடு ஆற்றல்மிக்க சொல்லாட்சியினையும், எதுகை, மோனை போன்ற இலக்கிய உத்திகளையும் அதிக அளவிற்குப் பயன்படுத்துவதைக் காண்கின்றோம். மன்னர்களின் அரண்மனை வாழ்விலும், மன்னர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்ட கோயில்களிலும் இடம் பெற்ற ஆடம்பரப் புனைவுகளும், அரண்மனைகளிலும், கோயில்களிலும் தோன்றிய கவிதைகளிலும் சிறப்பாக இடம் பெறத் தொடங்கின. நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தின் உயர்குடி மக்களின் ஆடம்பர வாழ்வு, புறப்புனைவுகள் ஆகியவற்றின் பிரதிபலிப்பாகவே நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தின் இலட்சிய வாழ்வைச் சித்திரிக்கும் இக்கவிதைகளின் மொழிநடை அமைந்துள்ளது எனலாம்.

முரண் அணி

ஒரு குறிப்பிட்ட கருத்தை உணர்த்துவதற்கு மாறுபட்ட சொல்லாட்சி அல்லது செய்திகளை அமைத்து இலக்கிய நடையினை அமைப்பதை முரண் என்று அழைக்கின்றோம். ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பரிபாடலின் கவிதைகளில், இவ்வணி, பாடுபொருள் என்னும் நிலையிலும், மொழிநடை என்னும் நிலையிலும் பயன்படுத்தப்படுவதைக் காண்கின்றோம். அடி, மேல்; கீழோர், மேலோர்; மெய்வளம், பொய்வளம் என்று முரண்படும்படியாகச் சொற்களை அமைப்பதோடு மட்டுமன்றி, பரிபாடலின் 17வது கவிதை மலையில் ஒலிக்கும் இயற்கையின் ஒலி

களோடு இசைக்கருவிகளின் இன்னிசையை முரண்படுத்திக் காட்டுகின்றது. இப்பகுதியின் இசைச் சிறப்பை உயர்த்திக் காட்டுவதற்காக 'ஒரு திறம்' என்ற சொற்றொடரைப் பத்து இடங்களில் ஆசிரியர் கையாள்கின்றார். இது இப்பாடலில் பல்லவி போன்று அமைந்து பாடலுக்குச் சிறந்த இசைச் சிறப்பினை நல்கியுள்ளது.

திருப்பரங்குன்றத்தின் மலையில் யாழ்மீட்டி வேறுபட்ட பல இசைகளைப் பாணர்கள் எழுப்புகின்றனர். இசைக்கருவிகளால் எழுப்பப்படும் இச் செயற்கை இசைக்கு மாறாகக் காட்டில் வாழும் வண்டுகள் இயற்கையான இசையை எழுப்புகின்றன. இசை வல்லுநர்கள் குழலை ஊதும் பொழுது தும்பி என்னும் வண்டு அதற்கு இயைந்த மற்றொரு' இசையை எழுப்புகின்றது. முழவுகள் கோயிலில் இசையை எழுப்பும்பொழுது அதனோடு இயைந்து வருகின்ற மற்றொரு இசையை மலையிலிருந்து விழும் அருவிகள் எழுப்புகின்றன. கொடி போன்ற இடையினையுடைய நடனப் பெண்கள் கோயிலில் நடனமாடும் பொழுது அதற்கு இயைந்து மற்றொரு நடனத்தைக் காட்டில் வாழும் கொடிகள் காற்றில் அசைந்து ஆடிக் காட்டுகின்றன. இவ்வாறு இயற்கைக் காட்சிகளையும், கோயிலில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் ஒருங்கே இணைத்துக் காட்டுவதன் மூலம் முருகப் பெருமான் வீற்றிருக்கும் திருத்தலமான திருப்பரங்குன்றம் பற்றிய அழகிய சொல்லோவியத்தைக் கவிஞனால் சிறப்புடன் அமைக்க முடிகின்றது. இறைத்தலம் பற்றிய ஆற்றல் மிக்க சொல்லோவியத்தைத் தீட்டுவது இவ்விறை நெறிப் பாடல்களின் குறிக்கோள்களுள் ஒன்றாக அமைகின்றது.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இப்பாடல்கள் முழுவதிலும் இக் கவிஞர்கள் ஓவியர்களைப் போன்று காண்கின்ற பொருள்களையெல்லாம் ஆழமாக அணுகி அழகிய காட்சிப்படிமங்களின் மூலம் அவற்றைக் கலைப்படுத்துகின்றனர். ஆழ்ந்த கற்பனையாற்றலின் மூலமாக இயற்கைக் காட்சிகள் அனைத்தையும் மனிதப்படுத்தி மனிதவுணர்வுகளையும், குறிக்கோள்களையும் அவற்றில் அமைத்துத் தருகின்றனர். இறையுணர்வை ஆற்றலுடன் கலைப்படுத்த ஆங்காங்கே கவிதைப் பட்டியல்களையும் (Catalogues) இக்கவிஞர்கள் அமைத்துச் செல்கின்றனர்.

அறநெறிக் கவிதைகளில் இடம்பெறும் கவிதைப் பட்டியல்கள் பொதுவாக மனித நம்பிக்கைகள், ஒழுக்கக் கோட்பாடுகள் ஆகியவற்றை நிரல்படுத்திக் காட்டும். ஆனால் பரிபாடலின் இறைநெறிப் பாடல்களில் இடம் பெறும் பட்டியல்கள் வழிபாட்டின் பொழுது நடைபெறும் நிகழ்ச்சிகள், கோயிலில் எழும் பல்வேறு இசைகள், இறை வழிபாட்டில் பங்கேற்கும் பல்வேறு இயற்கைப் பொருள்கள் ஆகியவற்றை நிரல்படுத்திப் பட்டியலாகத் தருகின்றன. இப்பட்டியலில் இசைச் சிறப்போடு அமைக்கப்படும் ஆர் ததும்பு, சூர் ததும்பு, கார் ததும்பு, ஏர் ததும்பு போன்ற சொல்லாட்சிகள் இசைச் சிறப்பினைக் கவிதைக்கு நல்கியுள்ளன.

இக்கவிஞர்கள் அறிமுகப்படுத்திய வர்ணனைகளும், நிகழ்ச்சிகளும் சில மாற்றங்களுடன் பிற கவிஞர்களாலும் பயன்படுத்தப்படுவதைக் காண்கின்றோம். பரிபாடலின் 17வது பாடலில் அமையும் நடனக் காட்சியும், இயற்கை எழுப்பும் இசையும் சிலப்பதிகாரத்தில் அமையும் கானல் வரியிலும் இடம்பெறுகின்றன. 'பூவார் சோலை மயிலால' என்று தொடங்கும் சிலப்பதிகார வரிகள் பரிபாடலின் மேற்கூறிய பகுதியை நினைவுபடுத்துகின்றன. பரிபாடலில் இடம்பெறும்,

" . . . . . கோதையர் கூந்தல் குஞ்சியிற்
சோர்ந்த விழிதழி னியங்குமா றின்று" (பரி. 19: 26-27)

என்ற பகுதி சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் "தாரும் மாலையும் முயங்கின" என்ற பகுதியை நினைவுபடுத்துகின்றது. பரிபாடலின் 18வது பாடலில் தனது சாயலை மயிலோடு ஒப்பிட்டதற்காகத் தன் கணவனிடத்தில் ஒரு பெண் ஊடல் கொள்கிறாள். இப்பகுதி 'ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன்' என்று தொடங்கும் கம்பராமாயணப் பாடலை நினைவுபடுத்துகின்றது. மேற்கூறிய பரிபாடலின் எல்லாப் பகுதிகளிலும் திருப்பரங்குன்றத்தின் இயற்கை வர்ணனை அழகிய உவமைகளாலும் உருவகங்களாலும் அழகுபடுத்தப்படுகின்றது. இவ்வுவமைகள் பாடுபொருள் என்ற நிலையிலும், மொழிநடை என்ற நிலையிலும் இக்கவிதைகளுக்குப் பல நிலைகளில் சிறப்பளித்து நிற்கின்றன.

**வடிவம்**

இலக்கிய உத்திகளைப் பயன்படுத்துவதில் மட்டுமன்றிக் கலை நுட்பம் பொருந்திய வடிவத்தினை இப்பாடல்களுக்கு அமைத்துத்

தருவதிலும் இக்கவிஞர்கள் அதிக ஆர்வம் காட்டினர். கலை நுட்பத்துடன் சிந்தித்துக் கலைத்திறனுடன் இப்பாடல்களின் முதற் பகுதி, இறுதிப் பகுதி ஆகியவற்றை இக்கவிஞர்கள் அழகுடன் அமைத்துள்ளனர். வையை பற்றிய பரிபாடலின் கவிதைகள் பொதுவாக மழை பற்றிய வர்ணனையுடன் தொடங்கிச் சண்டையிடுகின்ற பரத்தையர்கள் மனவுடன்பாடு பெறுவதாக முடிவடைகின்றன. செவ்வேள் பற்றிய கவிதைகள் வீரச் செயல் அல்லது வழிபாடு பற்றிய நிகழ்ச்சியுடன் தொடங்கி உருக்கமான மன்றாட்டுப் பகுதியோடு (prayer) நிறைவு பெறுகின்றன. இத்தகைய வடிவ அமைப்பு மொழி நிலையிலும், பாடுபொருளின் நிலையிலும் இக்கவிதைகளுக்கு ஒருவித முழுமைத் தன்மையினை நல்கியுள்ளன எனலாம்.

# 3. இருபத்தொன்றாம் நூற்றாண்டில் தமிழ் ஆய்வு

## உலக இலக்கியம்

ஐரோப்பியர்களின் வருகையும், ஐரோப்பிய முறையில் அமைந்த மேலைநாட்டுக் கல்வியின் அறிமுகமும், அச்சுப்பொறியின் நுழைவும், இரயில்வே போன்ற போக்குவரத்துத் தொடர்பான அறிவியல் கண்டுபிடிப்புக்களின் அறிமுகமும், பழைய பயிர்த்தொழிலை அடிப்படையாகக் கொண்ட தன்னிறைவு பெற்ற இந்திய நாட்டுக் கிராமியப் பொருளாதாரத்தைத் தகர்த்தன. தொழிற்புரட்சியின் விளைவாக மலர்ந்த புதிய அறிவியல் கண்டுபிடிப்புக்களின் அறிமுகத்தால் இந்திய நாட்டின் பொருளாதாரக் கட்டுமானத்தில் (Economic Structure) மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. நாடுகளும், பிரதேசங்களும் ஒன்றை ஒன்று பொருளாதார நிலையில் சார்ந்திருக்க வேண்டிய இந்த நிர்பந்தத்தை இந்தப் புதிய சூழ்நிலை உருவாக்கியது. உலகப் பொருளாதாரத்தின் (International Economic Order) ஓர் அங்கமாக இந்தியப் பொருளாதாரம் அமைந்ததால் உலக நாடுகளின் பொருளாதார நிலைகளில் ஏற்படும் மாறுபாடுகள் இந்தியாவையும் பாதித்தன. இந்தப் பின்னணியில் உலகச் சந்தை (World Market) என்ற வர்த்தக ரீதியான ஒரு பொது நிலை மலர ஆரம்பித்தது. இதன் தொடர்ச்சியாக உற்பத்திப் பொருட்களில் உலகெங்கிலும் ஒருவித பொதுத்தன்மை தோன்றத் தொடங்கியது. சமுதாயத்தின் அடிக்கட்டுமானத்தில் ஏற்பட்ட இந்தப் பொதுத்தன்மை சமுதாயத்தின் மேற்கட்டுமானத்தின் (Super Structure) ஒரு பகுதியான கலை, இலக்கியம் ஆகியவற்றிலும் மலரத் தொடங்கியது. இந்தப்

பின்னணியில் உலக இலக்கியம் என்னும் பொதுமைப் பண்புகள் தழுவிய ஒரு பொது இலக்கியக் கோட்பாடு மெல்ல மெல்ல உருப்பெறத் தொடங்கியது.

உலக இலக்கியம் என்னும் தொடரை முதன்முதலில் ஆட்சிக்குக் கொண்டு வந்த ஜெர்மன் நாட்டுக் கவிஞரான காதே (Goethe) என்பவர் உற்பத்திப் பொருட்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள பொதுமைப் பண்பிற்கும் கலை, இலக்கியத்தில் மலர்ந்துள்ள பொதுமைக் கூறுகளுக்குமிடையே ஒப்புமைப் பண்புகள் நிலவுவதை மேலோட்டமாகக் காட்டிச் சென்றார். எனினும், 1848இல் கம்யூனிஸ்டு கட்சியின் அறிக்கையை வெளியிட்ட கார்ல் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோர் உலக இலக்கியம் என்னும் பொது இலக்கிய மரபு மலர்வதற்குரிய சமுதாய, பொருளாதாரப் பின்புலன்களை மிக விளக்கமாக எடுத்தியம்பினர். இவ்வாறு அரும்பிய உலக இலக்கியத்தினை 'விஸ்வ சாகித்யம்' என்று குறிப்பிட்டுள்ளார் வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர்.

உலக இலக்கியம் என்னும் பொது இலக்கியம் மலர்ந்ததன் விளைவாகத் தேசிய இலக்கியங்களும், பிரதேச இலக்கியங்களும் உலக இலக்கியத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படவேண்டிய இன்றியமையாத சூழ்நிலை தோன்றியது. இந்தப் பின்னணியில், தமிழ் இலக்கியமும் இந்திய இலக்கியமும் உலக இலக்கியத்தின் ஒரு கூறாக 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே மலரத் தொடங்கின. இந்த நூற்றாண்டில் அச்சுப்பொறியின் வருகையினால் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள், காகித யுகத்திற்குள் படிப்படியாக நுழைந்து நூல்களாக, ஜனரஞ்சகப் படைப்புக்களாக, விற்பனைப் பொருட்களாக மாறின. இதன் விளைவாக 19ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் நிலவி வந்த கலை, இலக்கியப் பராமரிப்பு அமைப்புக்களின் (Patronage systems of Arts and Literature) வலுவான பிடியிலிருந்து தமிழிலக்கியங்கள் தங்களை விடுவித்துக் கொண்டு அச்சு வடிவிலமைந்த நூற்களாக, விற்பனைப் பொருட்களாக மாறி நுகர்வோரை வந்தடைந்தன. ஆடம்பரப் பொருட்களாகவும், அலங்காரப் பொருட்களாகவும் நிலவுடைமைச் சமுதாயத்தில் கருதப்பட்ட கலை, இலக்கியச் செல்வங்கள் மேற்கூறிய சமுதாய மாற்றங்களால் விற்பனைப் பொருட்களாக (Commodities) மாறின.

கோயில்களையும், மன்னர்களையும் சார்ந்து அவர்களின் ஆதரவில் வாழ்ந்து கொண்டிருந்த கவிஞன் பொருளாதார நிலையில் ஓரளவிற்கு தற்சார்பு நிலையைப் பெறத் தொடங்கினான். நூல் வெளியீட்டாளர்களின் பெருக்கமும், வாசகர்களின் பெருக்கமும் இந்த நிலையை மேலும் ஊக்குவித்தன. இலக்கியப் படைப்புக்களை நுகர்வோரும், இலக்கியங்களைப் படைக்கும் எழுத்தாளர்களும் பெரும்பாலும் மேலைநாட்டு முறையிலமைந்த ஆங்கிலக் கல்வி கற்ற நடுத்தர வர்க்கத்தினர்களாகவே அமைந்தனர்.

## தமிழாய்வு

இத்தகைய சமுதாயப் பின்புலத்தில் தமிழிலக்கியப் படைப்புக்கள், இலக்கிய ஆய்வுகள் ஆகியவற்றின் பரிமாணங்கள் மேலும் விரிவுபடத் தொடங்கின. பிரதேச இலக்கியங்களாக இருந்த தமிழிலக்கியமும் பிரதேச நிலையில் மலர்ந்த தமிழாய்வும் தேசிய நிலைக்கும் சர்வதேச நிலைக்கும் விரிவடையத் தொடங்கின. இத்தகைய நிலை தோன்றுவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர்கள் ஐரோப்பியப் பாதிரிமார்களே எனலாம். கிறிஸ்தவத்தைப் பரப்ப வந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள் தமிழ் மொழியைக் கற்று கிறிஸ்தவச் சமயச் சிந்தனைகளோடு ஓரளவிற்கு இணைந்தும் முரண்பட்டும் செல்லும் தமிழ் அறநெறி இலக்கியங்களையும், பக்தி இலக்கியங்களையும் கற்கத் தொடங்கினர். இவற்றுள் பலவற்றை அவர்கள் விளக்கமாக ஆராயவும், கிறிஸ்தவச் சிந்தனைகளோடு ஒப்பிட்டு நோக்கவும், மொழிபெயர்க்கவும் தொடங்கினர். இவற்றின் காரணமாகப் படிப்படியாக உலகின் பல நாடுகளிலுள்ள அறிஞர்களைத் தமிழிலக்கியம் வேகமாகச் சென்று சேரத் தொடங்கியது. பாதிரிமார்களைத் தொடர்ந்து வந்த மேலைநாட்டு அறிஞர்களும், மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களும் தமிழிலக்கியங்களை நடுவுநிலையில் ஆராயத் தொடங்கவே தமிழாய்வு தமிழ்நாட்டைச் சார்ந்த தமிழ் அறிஞர்களின் முயற்சி இல்லாமலே சர்வதேசத் தரத்திற்கு உயரத்தொடங்கியது. போக்குவரத்துச் சாதனங்களில் புரட்சி ஏற்படுத்திய (Transport Revolution) கடந்த நூற்றாண்டில் மேற்கூறிய போக்கு சற்று மெதுவாகவே பரவியது. தகவல் தொடர்பில் சாதனைகள் புரிந்த (Communication Revolution) இந்த நூற்றாண்டில் இது மேலும் தீவிரமடைந்துள்ளது.

வியத்தகு அறிவியல் கண்டுபிடிப்புக்களின் துணையோடு மனித நாகரிகம் 21ஆம் நூற்றாண்டில் தன் காலை வைப்பதற்கு இப்போது தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு வருகின்றது. உலக நாடுகள் அனைத்தும் 21ஆம் நூற்றாண்டிற்குள் நுழையத் தயாராக நிற்கும் நிலையில் கல்வியைப் பொறுத்தவரையிலும்-தமிழாய்வைப் பொறுத்தவரையிலும் நாம் காலத்தைப் பின்னோக்கிப் பார்த்துக் கொண்டே முன்னேறத் தயங்கி நிற்பது வருந்துவதற்குரியது. கல்வியிலும், உயர்மட்டக் கல்வியிலும் அதன் ஒரு கூறான தமிழாய்விலும் நாம் உலக நாடுகளோடு இணைந்து 21ஆம் நூற்றாண்டிற்குள் கால் வைப்பதற்குத் தயங்கிக் கொண்டிருக்கும் நிலை மிகத் தெளிவாகவே புலப்படுகின்றது.

கணிப்பொறியின் வரவாலும், தகவல் தொடர்பில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களாலும் கல்வி, ஆராய்ச்சி ஆகியன பற்றிய உலகின் பார்வை முழு நிலையில் தற்போது மாற்றம் கண்டுள்ளது. பயிர்த்தொழிலை அடித்தளமாகக் கொண்ட பழைய சமுதாயத்தில் ஆன்மீக உயர்வுக்கும் பண்பாட்டிற்கும் துணை புரிவதே கல்வி என்று கருதப்பட்டது.

"கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் "

என்ற வள்ளுவரின் கூற்று கல்வி பற்றிய கடந்தகாலக் கண்ணோட்டத்தினை நமக்கு நன்றாகவே காட்டுகின்றது. ஆன்மீக வளர்ச்சிக்காகவே கல்வி என்ற நிலைமையை 'அறிவியல் யுகம்' முற்றிலும் மாற்றியது. அரசாங்க வேலை பெறுவதற்கே கல்வி என்ற புதிய நிலையினை மேலைநாட்டு மரபிலமைந்த கல்வி முறை (Western Type of Education) ஏற்படுத்தியது. இந்தப் பின்னணியில் கல்வி என்பது நம்மை அறிந்தோ அறியாமலோ விற்பனைப் பொருளாக மாறிவிட்டது. இந்த நிலையை நாம் எதிர்த்து இலட்சியக் குரல் எழுப்புவதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. கல்வியையும், கல்வியின் ஒரு பகுதியான ஆய்வையும் நாம் இன்றும் ஒரு சேவை என்றே தவறாகக் கருதிக் கொண்டிருக்கின்றோம். கல்வியும், ஆய்வுகளின் வெளியீடான நூல்களும் விற்பனைப் பொருட்களாக மாறியதால் ஏராளமான சுயநிதிக் கல்வி நிறுவனங்கள், நூல் வெளியீட்டு அமைப்புக்கள் ஆகியன காலத்தின்

தேவைக்கேற்பத் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. சேவைக்காகக் கல்வி கற்றுத் தருகின்ற அரசு அமைப்புக்களுக்குச் சென்று கல்வி பெறுவதை விடவும் விற்பனை நிறுவனங்களாகத் தோன்றியுள்ள அமைப்புக்களுக்குச் சென்று தரமான கல்வி பயில்வதையே அனைவரும் விரும்புகின்றனர். கல்வி என்பதை மக்கள் ஒரு முதலீடாகவே கருதுகின்றனர் என்பது நமக்குத் தெளிவாகின்றது. குழந்தைகளின் எதிர்காலத்திற்குப் பெற்றோர் பயன்கருதிச் செய்யும் முதலீடாகவே கல்வி உருப்பெற்றுள்ளது.

இந்த முதலீட்டினால் ஒருவன் பெற்ற கல்வி அதன் தரத்திற்கேற்ப நுகர்வோரால் ஊதியம் என்ற பெயரால் அதிகப்பணம் தரப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. எந்தச் சந்தையிலும் விற்பனை செய்யவியலாத தரத்தில் குறைந்த கல்வி பிரதேசச் சந்தையிலும், தரத்தில் சற்று உயர்ந்த கல்வி தேசியச் சந்தையிலும், தரமிக்க கல்வி சர்வதேசச் சந்தையிலும் விற்பனை செய்யப்படுகின்றது. கல்வியின் ஒரு பிரிவான ஆய்வும் இவ்வாறே அமைகின்றது. உயர்ந்த ஆய்வுத்திறன் படைத்தோரை, வளர்ந்த நாடுகள் ஏராளமான ஊதியம் கொடுத்து நம்மிடம் இருந்து வாங்கிச் சென்று விடுகின்றன. சிறப்பில்லாத அல்லது தரமில்லாத ஆய்வாளர்கள் இங்கேயே தங்கிவிடுகின்றனர்.

## மூன்று நிலைகள்

கல்வியில் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய நிலை நமது தமிழாய்விலும் காணப்படுகிறது. தகவல் தொடர்பு மூலமாகப் புரட்சிகரமான சமுதாய மாற்றங்களும், புதிய தேவைகளும் ஏற்பட்ட நிலையில் ஒரு நாடு பற்றிய அல்லது ஒரு நாட்டு மக்கள் பற்றிய தகவல் மற்றொரு நாட்டிற்கு மிகவும் தேவைப்படுகின்றது. இந்நிலையில் தகவல்கள் முழுக்க முழுக்க விற்பனைப் பொருளாகவே மாறிவிட்டன. கலை, பண்பாடு பற்றிய ஆய்வுகள் சிறந்த தகவல்களாக இருப்பதால் சர்வதேசச் சந்தையில் அவை அதிக விலை மதிப்புடைய விற்பனைப் பொருட்களாக அமைகின்றன. எனவே அந்தந்த நாடுகளின் தேவைக்கேற்ப கலை, பண்பாடு பற்றிய ஆய்வுகள் அந்தந்த நாட்டு மக்களால் வாங்கிப் படிக்கப்பெறுகின்றன. இந்நிலையில் தமிழாய்வு பற்றிய நூல்களின் விற்பனை இடங்களை அல்லது நூல்களின் நுகர்வோரை மூன்று பிரிவுகளாகக் கொள்ளலாம்.

1. தமிழ்நாட்டில், தமிழில், தமிழக மக்களின் தேவைகளுக்கு ஏற்பப் பிரதேசச் சந்தைகளுக்காகத் தயாரிக்கப்படுகின்ற தமிழாய்வு நூல்கள்.

2. இந்திய நாட்டின் பிற மொழி பேசும் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப ஆங்கிலத்திலோ அல்லது ஆட்சி மொழியான இந்தியிலோ தேசியச் சந்தைகளுக்காகத் தயாராகும் தமிழாய்வு நூல்கள்.

3. ஆங்கிலத்தில் உலகம் தழுவிய நிலையில் சர்வதேச நிலையிலுள்ள நுகர்வோர்கள் அதாவது சர்வதேசச் சந்தைக்காகத் (World Market) தயாரிக்கப் பெறும் தமிழ் நூல்கள்.

தமிழாராய்ச்சி நூல்களின் நுகர்வோர்கள் மேற்கூறியவாறு அமைவதால் அவற்றைப் பல நிலைகளில் தயாரித்துத் தரவேண்டியது நமது கடமையாகின்றது. 20ஆம் நூற்றாண்டில் நாம் நமது மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய ஆய்வுகளை நமது மொழியில் மட்டும் பெரும்பாலும் தயாரித்து நம் மக்கள் மத்தியில் அதாவது பிரதேசச் சந்தையில் விற்று வந்தோம். தேசிய நிலையிலும், சர்வதேச நிலையிலும் காணப்படுகின்ற நுகர்வோர்களை நாம் ஓரளவு புறக்கணித்து வந்துள்ளோம். ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்ட ஒருசில மொழிபெயர்ப்பு முயற்சிகளால் நமது இலக்கியம், பண்பாடு, கலைப் படைப்புக்கள் ஆகியன இந்திய நாட்டின் பிற மொழி பேசும் மக்களைச் சென்றடைந்து தேசியநிலையில் கலை இலக்கியம் பற்றிய ஆய்வுகள் தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்துள்ளன. எனினும் இத்தகைய முயற்சிகளில் நாம் போதிய அளவிற்கு 20ஆம் நூற்றாண்டில் கவனம் செலுத்தத் தவறி விட்டது மிகப்பெரிய குறையாகவே அமைந்துவிட்டது.

## மொழி பெயர்ப்பு

தமிழிலக்கியங்கள் அனைத்தும் பிற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இதன் மூலமாக மட்டுமே சமஸ்கிருதத்தைப் போன்று தமிழும் இந்தியச் செம்மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படும் நிலையினை எய்த முடியும். இந்திய நாட்டின் பிற மொழிகளில் தமிழ் பற்றிய ஆய்வு தேசிய நிலையில் மேற்கொள்ளப்படுவதற்குரிய சூழலை நாம் ஏற்படுத்த வேண்டும். இது

ஏற்படாத காரணத்தால் இணையில்லாத பெரிய வரலாற்றுப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை நாம் பெற்றிருந்த போதிலும், தேசிய அளவில் கூட இந்தியச் செம்மொழிகளுள் ஒன்று என்ற அங்கீகாரம் இதுவரையிலும் தமிழுக்குக் கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் ஆட்சிமொழியான இந்தியிலாவது தமிழிலக்கியங்கள் அனைத்தும் மொழி பெயர்க்கப் படவேண்டும். இந்தக் குறையை நிறைவுசெய்ய டாக்டர் நா. மகாலிங்கம் போன்றோர் ஆற்றிவரும் பணி குறிப்பிடத்தக்கது. டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களின் முயற்சியால் பல தமிழிலக்கியங்கள் இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இப்பணி மேலும் தீவிரமடைந்து விரைவாகத் தொடரவேண்டும்.

தமிழைத் தவிர, வேறு எந்த மொழிகளிலும் தமிழிலக்கியங்கள் போதுமான அளவிற்குக் கிடைக்காத குறையோடு நாம் புதிய நூற்றாண்டிற்குள் நுழையவிருக்கின்றோம். இந்த நிலை தொடர்ந்தால் நிச்சயமாகவே தேசிய நிலையில் தமிழாய்வு புறக்கணிக்கப்பட்டுவிடும். எனவே, தமிழாய்வு பிரதேச எல்லையைத் தாண்டி தேசிய எல்லைக்கு வளர அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்ளவேண்டும். மொழி பற்றிய நமது குறுகிய பார்வையும், குறுகிய மனப்பான்மையும் தேசிய நிலையில் நாம் வளரும் வாய்ப்பையும், தேசிய நிலையில் நமது கலை, இலக்கியப் பாரம்பரியத்திற்குக் கிடைக்கவேண்டிய அங்கீகாரத்தையும் சிதைத்துவிடும்.

## உலகந்தழுவிய தமிழாய்வு

இன்றைய நிலையில் தமிழாய்வுக்கு சர்வதேச நிலையில் மிகப்பெரிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்பதை யாரும் புறக்கணிக்க முடியாது. சர்வதேச நிலையில் ஏற்பட்டுள்ள இந்த வாய்ப்புக்களுக்கும் தமிழ் நாட்டிலுள்ள தமிழ் அறிஞர்களுக்கும் இடையேயுள்ள உறவு மிகக் குறைவு என்பது வருந்துவதற்குரியது. தமிழ் நாட்டிலுள்ள தமிழ் அறிஞர்களோடு எந்தத் தொடர்புமில்லாமல் சர்வதேச நிலையில் தமிழாய்வு வளர்ந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாடுகளில் நடைபெறும் இத்தகைய சர்வதேசத் தமிழாய்விலிருந்து நமது நாட்டுத் தமிழறிஞர்கள் முற்றிலும் அன்னியமாகி நிற்கின்றனர் என்பது முற்றிலும் உண்மை. சர்வதேச நிலையில் மேற்கொள்ளப்படும் தமிழாய்வில் தமிழ் நாட்டுத்

தமிழறிஞர்களின் பங்களிப்பு மிகக் குறைவு என்பதும் ஒரு கசப்பான உண்மையே. இந்த நிலை மாறாவிடில் தமிழர்களைப் புறக்கணித்துத் தமிழாய்வு சர்வதேச நிலையில் மலரும் என்பது திண்ணம்.

கல்கத்தாவில் ஆசியக் கல்விச் சங்கம் (Asiatic Society) தொடங்கப்பட்டு வில்லியம் ஜோன்ஸ், மாக்ஸ்முல்லர், கோல்புருக் போன்ற பேரறிஞர்களால் சமஸ்கிருத இலக்கியங்கள் ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்த்து அறிமுகப்படுத்தப்பட்டபோது இந்தியப் பண்பாடு ஐரோப்பியர்களின் கவனத்தை அதிகமாக ஈர்க்கத் தொடங்கியது. இதன் விளைவாக காலரிட்ஜ், ஷெல்லி, வாட்ஸ்வர்த், எமர்சன், வால்ட்விட்மன், டி.எஸ். எலியட், எஸ்ராபவுண்ட் போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்களில் இந்தியச் சிந்தனைகள் பேராதிக்கம் செலுத்தின. இந்தியப் பண்பாட்டை உலகெங்கும் எடுத்துச் செல்வதற்குச் சமஸ்கிருத மொழியிலுள்ள இலக்கியங்கள் வடிகாலாக இருந்தன. இம்மொழியில் எழுதப்பட்ட வேதங்களும், உபநிடதங்களும், காளிதாசனின் கருத்தாழமிக்க படைப்புக்களும், இடைக்கால இறைநெறிக் கவிதைகளும், காவியங்களும், நாடகங்களும் மொழிபெயர்ப்பு வாயிலாக உலக நாடுகளைச் சென்று சேர்ந்ததால் பிறநாட்டு அறிஞர்களுக்கு இந்தியப் பண்பாடுபற்றி ஆய்வு செய்யும் வேட்கை மிகுந்தது. இந்து சமயம் போன்ற கடவுள் கோட்பாட்டை ஏற்கும் சமயங்களும், பௌத்த சமயம் போன்ற கடவுள் மறுப்புக் கொள்கையை உள்ளடக்கிய சமயங்களும் (Heterodox Religion) பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களாலும், அறிஞர்களாலும் ஆழமான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. இதன் விளைவாக இந்தியவியல் பற்றிய ஆய்வு என்றால் சமஸ்கிருதவியல் பற்றிய ஆய்வே என்று தொடக்கத்தில் வெளிநாட்டினர் தவறாக மதிப்பீடு செய்துவந்தனர்.

இந்நிலையில் தென்னாடு பற்றிய செய்திகளும், திராவிட மொழிகள் பற்றிய தகவல்களும், தமிழிலக்கியம் பற்றிய செய்திகளும் கொஞ்சம் கொஞ்சமாக மேலைநாட்டுப் பாதிரிமார்களால் வெளி உலகுக்கு அறிமுகமாகத் தொடங்கின. வில்லியம் கேம்பல், கால்டுவெல் ஆகியோர் திராவிட மொழிகளைப் பற்றிச் சிறப்பாக அறிமுகப்படுத்தியதோடு மட்டும் இல்லாமல் இந்தியப் பண்பாட்டைத் தெளிவாக அறிந்துகொள்ள திராவிடப் பண்பாடு பற்றிய அறிவு மிகவும் தேவை என்பதை

வெளிநாட்டினருக்குப் புரிய வைத்தனர். அதே சமயம் ஜூலியன்வின்சன், ஜி.யு.போப், சீகன்பால்க், பெஸ்கி போன்றோர் வாயிலாகத் தமிழ் இலக்கியத்தின் பல பகுதிகள் மொழிபெயர்ப்பு வாயிலாகப் பிற நாட்டினருக்கு அறிமுகமாயின. இவற்றின் விளைவாகச் சர்வதேச நிலையில் சமஸ்கிருத ஆய்வுக்கு இணையாக ஓரளவிற்குத் தமிழியல் அல்லது திராவிடவியல் பற்றிய ஆய்வும் சிறப்படையத் தொடங்கியது. மேற்கூறிய பாதிரிமார்கள், அரசு அலுவலர்கள் (Civil Servants) ஆகியோரைத் தொடர்ந்து பிற நாட்டுப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் தென்னிந்தியவியல் ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டவே, சர்வதேச நூல் விற்பனைச் சந்தையில் தமிழாய்விற்கும், திராவிடவியல் ஆய்விற்கும் வரவேற்பு பெருகத் தொடங்கியது. இந்த நிலைமை சர்வதேச அரங்கில் மேலும் தீவிரமடையக் காரணமாயிருந்த பெருமை டாக்டர் கமில் சுவலபில், டாக்டர் ஹார்ட், டாக்டர் ஆலன் டண்டஸ், டாக்டர் டென்னிஸ் ஹட்சன் போன்ற எண்ணற்ற மேலைநாட்டு அறிஞர்களைச் சாரும். ஜப்பான் போன்ற ஆசிய நாடுகளில் தமிழாய்வு சர்வதேசக் கண்ணோட்டத்துடன் மலரப் பணியாற்றிய அறிஞர்களுள் டாக்டர் நொபுருகராஷிமா, டாக்டர் சுசுமோ ஓனோ போன்றோர் குறிப்பிடத்தகுந்தோர் ஆவர்.

## இருவேறு உலகம்

இந்நிலையில் தமிழாய்வு இரண்டு விதமான போக்கில் வளரத்தொடங்கியது. இதன் விளைவாகத் தமிழ் பற்றிய நூல்களின் தயாரிப்பும் இருவித நிலையில் மேற்கொள்ளப்படும் நிலை தோன்றியது. தமிழ்நாட்டில், பெரும்பாலும் தமிழை மட்டும் கற்றுத் தமிழில் ஆய்வு செய்கின்ற தமிழ் அறிஞர்களின் ஆராய்ச்சி சர்வதேசப் புத்தகச் சந்தையை அதிகமாகச் சென்றடையாமல் வெறும் பிரதேச முயற்சிகளாக, பிரதேசச் சந்தைக்குத் தயாராகும் உற்பத்திப் பொருளாகவே நின்றுவிட்டது. டாக்டர் கமில் சுவலபில் போன்ற பிறநாட்டு அறிஞர்களால், பெரும்பாலும் பிறநாட்டு அறிஞர்கள் ஆய்வு செய்வதற்காகத் தயாரிக்கப்படும் படைப்புக்கள், சர்வதேசச் சந்தைக்குத் தயாராகும் விற்பனைப் பொருட்களாக அமைந்துவிட்டன. சுருங்கச் சொன்னால் தமிழாராய்ச்சி உலகம் இருவேறு உலகத்து இயற்கையாக 20ஆம் நூற்றாண்டில் பிரிந்து வளர்ந்துள்ளது.

இந்த இரு உலகங்களையும் இணைப்பதற்குரிய முயற்சி நம்மால் போதுமான அளவிற்கு மேற்கொள்ளப்படவில்லை. மேற்கொள்ளப்பட்ட ஓரிரு முயற்சிகளும் பரிதாபமாகத் தோல்வி அடைந்தன. ஆக்கரீதியான திட்டங்களோடு திறமை பெற்ற அறிஞர்கள் ஆர்வத்தோடு பலமுறை முயன்றபோது அவர்களின் முயற்சி போதிய முதலீடான நிதியின்றித் தோற்கடிக்கப்பட்டன. ஆர்வங்கள் தோன்றும்போது அவை ஆதரிக்கப்பட வேண்டும். தக்க சமயத்தில் ஆதரிக்கப்படாத ஆர்வங்கள் ஆதரவுக்காகக் காத்து நிற்காமல் அழிந்துவிடும் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இவ்வாறு ஆதரவில்லாமல் அழிந்த ஆர்வங்கள் ஏராளம் என்பதற்கு நாம் எண்ணற்ற சான்றுகளைக் காட்டமுடியும்.

சர்வதேச நிலையில் தமிழாராய்ச்சியை வளரச் செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட *Tamilian Antiquary, Tamil Culture* போன்ற சர்வதேசத் தரம் வாய்ந்த ஏராளமான இதழ்கள் ஆதரவின்றி அழிந்து போயின. உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ள முயற்சிகள் அனைத்திலும் அரசியல் புகுந்து அவற்றைப் பாழ்படச் செய்துவிட்டது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்ற பெயரில் தொடங்கப்பட்ட முயற்சி பிரதேசச் சந்தைக்காக நூல்களைத் தயாரிக்கும் பல்வேறு தமிழ்நூல் வெளியீட்டாளர்களின் அல்லது பதிப்பகங்களின் பட்டியலில் சென்று பதுங்கித் தனித்தன்மையைத் துறந்து மறைந்துவிட்டது. சர்வதேச அளவில் நடைபெறுகின்ற தமிழாய்வில் தமிழகத்தின் பங்கேற்பு அதிகமாக இல்லை என்பது வருந்துவதற்குரியது. இந்த நிலைக்கு நமது சமூக அரசியல் அமைப்புக்களும், தாய்மொழி பற்றிய நமது அணுகு முறைகளுந்தான் காரணம் என்பதை உணர வேண்டும். இதற்குப் பிற நாட்டினரைக் குறை சொல்லி எந்தப் பயனும் இல்லை. மொழி பற்றிய நமது குறுகிய பார்வையும், கோணலான கண்ணோட்டங்களும் சர்வதேச நிலையில் மேற்கொள்ளப்படும் தமிழாய்வுகளை நமக்குச் சொந்தமில்லாமல் செய்துவிட்டன என்பது வருந்துவதற்குரியது.

தமிழ் மொழி பற்றிச் சர்வதேச நிலையில் தெரியும் அளவிற்குத் தமிழர்களைப் பற்றியும், தமிழ்நாட்டைப் பற்றியும் தெரியவில்லை. இம்மொழி இலங்கையில் மட்டும் பேசப்படும் மொழியென்றுதான் பிறநாட்டினருக்குத் தெரிந்திருக்கின்றது. இங்கு போலந்து நாட்டின் தலைநகரான வார்சா நகரில் எனக்கு ஏற்பட்ட ஒரு கசப்பான

அனுபவத்தைக் கூறுவதும் பொருந்தும் என எண்ணுகிறேன். வார்சாவில் நடைபெற்ற யுனெஸ்கோ அமைப்பின் உலகின் நினைவுச் சின்னங்கள் என்ற ஆய்வுத்திட்ட வல்லுநர்குழுவில் தமிழ் ஓலைச்சுவடிகளைச் சர்வதேச நிலையில் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வது பற்றி நான் ஆங்கிலத்தில் விவாதித்து முடித்ததும் ஒரு சில வெளிநாட்டு அறிஞர்கள் தமிழ் என்பது இலங்கையில் பேசப்படும் ஒரு மொழிதானே என்று என்னைக் கேட்டபோது நான் வியப்படைந்தேன். நான் இந்திய நாட்டைச் சேர்ந்தவன் என்றும், இந்திய நாட்டில் தமிழ் மொழி பேசப்படுகின்றது என்றும் அவர்களுக்குத் தெளிவுபடுத்த, நான் அதிகச் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே, உலக அரங்கில் நாம் எங்கிருக்கின்றோம் என்பதை நாம் மீண்டும் மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலையிலுள்ளோம்.

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தமிழ் பற்றிய சர்வதேச ஆய்வுகளிலும், சர்வதேச நூல் விற்பனைச் சந்தையிலும் நமக்கு அதிக இடமில்லாமல் போய்விட்டது. இந்த நிலையை நாம் உணராமலேயே தமிழ் மொழி, இலக்கியம் ஆகியன பற்றிய நமது பாடத்திட்டங்களை அமைத்துவிடுகின்றோம். தமிழில் முதுகலைப் பட்டம் பெற்ற அல்லது முனைவர் பட்டம் பெற்ற நமக்கு நமது மொழி பற்றியோ, இலக்கியங்கள் பற்றியோ சர்வதேச நிலையில் பிற நாட்டு அறிஞர்களோடு விவாதிக்கவோ அல்லது சர்வதேச நிலையில் மேற்கொள்ளப்படும் தமிழாய்வில் பங்கேற்கவோ முடிவதில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் ஆங்கிலம் போன்ற சர்வதேச மொழிகளைக் கற்பதற்கு நாம் தயாராக இல்லை என்பதுவேயாகும். இத்தகைய தயக்கம் தொடரும் என்றால் நமது தாய்மொழி பற்றிய சர்வதேச ஆய்வில் நமக்கு இடமில்லாத நிலை ஏற்படுவது மட்டுமன்றி உலகளாவிய நிலையில் நடைபெறும் தமிழாய்வில் நாம் நிச்சயமாகத் தனிமைப்பட்டு நிற்கும் நிலை ஏற்பட்டுவிடும்.

## வரும் நூற்றாண்டில் தமிழாய்வு

வரப்போகின்ற இருபத்தொன்றாவது நூற்றாண்டில் தமிழாராய்ச்சி சர்வதேச நிலையில் மிகப் பற்றற்ற நோக்கில் நடுவுநிலையில் பெருமளவிற்கு மேற்கொள்ளப்பட இருக்கின்றது என்பதை நாம் மறந்து

விடக்கூடாது. தமிழில் முதுகலை, முனைவர் பட்டம் பெறுபவர்களுக்குக் குறைந்த பட்சம் ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் நல்ல புலமை ஏற்படுமாறு நமது பாடத்திட்டங்களை மாற்றி அமைக்கவேண்டும். பிறமொழிப் புலமை நமது மொழிபற்றிய நமது கண்ணோட்டத்தை மேலும் விரிவுபடுத்தும்; தெளிவுபடுத்தும். உலக அரங்கிலும், தேசிய அரங்கிலும் படைப்பிலக்கிய முயற்சியிலும், பண்பாட்டு நிலையிலும் நமது நிலை என்ன என்பதை ஆய்வு ரீதியாக அறிந்து தெளியவும், அறிவியல் பூர்வமாக நிலைநாட்டவும் பன்மொழிக்கல்வி துணைசெய்யும். பிற நாடுகளில் சர்வதேச நிலையில் தமிழாய்வு செய்யும் அனைத்து அறிஞர்களும் ஒரு சில உலக மொழிகளிலும், சமஸ்கிருதம், பாலி போன்ற ஒரு சில இந்திய மொழிகளிலும் நல்ல புலமை பெற்ற பின்னரே தமிழாய்வில் ஆழமாகத் தம் கால்களைப் பதிக்கின்றனர் என்பது உண்மை.

இதுவே அவர்களின் ஆய்வு முடிவுகள் நடுவுநிலையில், அறிவியல் பூர்வமாகவும் மிகச்சிறப்பாகவும் அமைய அடித்தளம் அமைத்துக் கொடுக்கின்றது எனலாம். சர்வதேச நிலையில் தமிழை ஆராய்ச்சி செய்கின்ற அறிஞர்கள் மேலை நாடுகளிலும், கீழை நாடுகளிலும் ஏராளமாகத் தோன்றியிருக்கின்றார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. வரும் நூற்றாண்டில் சர்வதேச நூல் விற்பனைச் சந்தையில் தமிழ் பற்றிய நூல்களின் விற்பனையில் அதிக அளவில் பல்வேறுநாட்டு அறிஞர்களின் ஆய்வுப்படைப்புக்களும் போட்டியிடத் தயாராக இருக்கும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் பிரதேச நிலையில் உற்பத்தி செய்கின்ற முதுகலைப் பட்டதாரிகளும், முனைவர் பட்டம் பெற்றவர்களும் என்ன செய்யப் போகின்றனர் என்பதைச் சிந்தித்துப் பார்த்துச் செயல்படவில்லை என்றால் நமக்கும் எதிர்காலத் தமிழாய்வுக்கும் எந்தத் தொடர்புமில்லாமல் போய்விடும். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் பிரதேச அளவில் மேற்கொள்ளப்படும் தமிழாய்வுக்கு வாய்ப்புக்கள் குறைந்தும், சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் தமிழாய்வுக்கு வாய்ப்புக்கள் மிக அதிகமாகவும் இருக்குமென்று தோன்றுகின்றது.

இருவேறு உலகங்களாகப் பிரிந்து கிடக்கின்ற தமிழாய்வை இணைக்கும் ஒரு பெரிய முயற்சி ஜப்பானியக் கூட்டுறவோடு

சென்னையில் அமைக்கப்பட்டுள்ள ஆசியவியல் நிறுவனத்தின் மூலம் சிறப்பாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருபத்தொன்றாம் நூற்றாண்டை எதிர்நோக்கிய சர்வதேச நிலையில் தமிழாய்வை மலரச் செய்வதற்குரிய அனைத்து முயற்சிகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நிகழவிருக்கின்ற சர்வதேசத் தமிழாராய்ச்சியில் இந்த நிறுவனத்தின் பங்களிப்பு மிகப்பெரிய அளவில் இருக்கும் என்பதில் ஐயமில்லை. நமது மொழி, பண்பாடு, கலைகள் பற்றிய ஏராளமான தரவு நூல்கள் ஆங்கில மொழிபெயர்ப்போடு சர்வதேசத் தரம் வாய்ந்தனவாக இந்நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனத்தின் தமிழியல் தொடர்பான பணிகள் மிகச் சிறந்த அளவில் விரிவுபடுத்தப்பட வேண்டும். இதற்குரிய நிதியுதவி என்னும் முதலீட்டினை நமது அரசு ஏராளமாக வழங்கி இந்த ஆர்வத்தை ஊக்கப்படுத்த வேண்டும். ஜப்பான் போன்ற பிற ஆசிய நாடுகள் இதற்குக் கொடுத்துள்ள நிதியுதவி அல்லது முதலீடு கணிசமானது. நமது தாய்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு நாம் இதில் செய்துள்ள முதலீடு மிகவும் குறைவே. நமது அரசு ஓரளவு உதவியபோதிலும் பிற நாட்டினர் நல்கும் உதவித் தொகையோடு ஒப்பிடும்போது இது மிகவும் குறைவாகவே உள்ளது. நிதியுதவி வழங்குவதில் ஏற்படும் நமது தயக்கம் உருப்பெற்றுவரும் நல்லஆர்வத்தைச் சிதைத்து விடுமென்பதை உணரவேண்டும். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இத்தகைய பெரிய நிறுவனம் விடுத்துள்ள கோரிக்கைகளும், தந்துள்ள அரிய பல ஆய்வுத்திட்டங்களும் முற்றிலும் நிறைவு பெறாமலிருப்பது வருந்துவதற்குரியது. நவீன ஆய்வு வசதிகளும், சர்வதேசத் தொடர்புகளும் கொண்ட இது போன்ற தன்னாட்சி அமைப்புக்களின் முயற்சிகளுக்கு அரசு தாராளமாக உதவி செய்ய முன்வரவேண்டும்.

ஆசியவியல் நிறுவனத்தைப் போன்று இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நடைபெறப் போகின்ற தமிழாய்வுப் புரட்சி என்னும் களத்தில் இறங்குவதற்குப் பிறநாட்டுப் பல்கலைக்கழகங்கள் நம்மை விடவும் மிக வேகமாகத் தங்களைத் தயார்செய்து கொண்டு வருகின்றன. ஜெர்மன் நாட்டில் தாமஸ் மால்டன் போன்றோர் இம்முயற்சியில் வியக்கத்தக்க அளவிற்கு ஈடுபட்டுள்ளனர். அதைப் போன்று டாக்டர் ஹார்ட் போன்றோரால் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இந்த முயற்சி

விரைவாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. கணிப்பொறியும், இணையம் (இண்டர்நெட்) போன்ற வசதிகளும் இந்த முயற்சிகளுக்கு மிகுந்த அளவிற்குத் துணைசெய்து வருகின்றன. காகிதங்களில் அமையும் நூல்களின் எண்ணிக்கை குறைந்து நூல்களெல்லாம் கணிப்பொறியின் மென்தகடுகளில் (Floppies) கிடைக்கும் நிலை தற்போது மலர்ந்துள்ளது.

அறிவியல் கண்டுபிடிப்புக்களின் துணையைத் தவிர்த்தோ, கணிப்பொறி யுகத்தில் ஏற்பட்ட புரட்சியைப் புறக்கணித்தோ தமிழாய்வு வளர முடியாது என்பதை நாம் உணரவேண்டும். பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழாராய்ச்சித் துறைகளை உடனடியாக நாம் தோற்றுவிக்க வேண்டும். நமது இலக்கியச் செல்வங்களைப் பிறநாட்டு மொழிகளிலும், பிற இந்திய மொழிகளிலும் நாம் மொழி பெயர்த்தாகவேண்டும். குறைந்த பட்சம் ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளிலாவது தமிழிலக்கியங்கள் அனைத்தும் மொழிபெயர்க்கப்பட வேண்டும். ஆசியவியல் நிறுவனம் சங்க இலக்கியங்கள், நாலாயிர திவ்யபிரபந்தம், பன்னிரு திருமுறைகள் போன்றவற்றைத் திட்டமிட்டு ஆங்கிலத்திலும், இந்தியிலும் மொழிபெயர்த்து வருகின்றது. தமிழிலக்கியக் களஞ்சியம், தமிழ் ஓலைச்சுவடிகளின் விளக்க அட்டவணை போன்ற ஏராளமான தரவு நூல்களையும், தமிழர் சமூக வரலாறு, தமிழ் நாட்டுப்புறவியல் களஞ்சியம் போன்ற பல அடிப்படை நூல்களையும் ஆங்கிலத்தில் தயாரித்து வெளியிட்டு வருகின்றது.

தமிழ் நூல்களை ஆங்கில மொழியில் மொழிபெயர்க்க வாய்ப்பாக 20 தொகுதிகளைக் கொண்ட தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றும் கணிப்பொறியின் துணையோடு இந்நிறுவனத்தால் தயாரிக்கப் பெறுகின்றது. சர்வதேச நிலையில் தமிழாய்வு வளரவும், இருபத்தொன்றாம் நூற்றாண்டில் மிகவேகமாக நடைபெறப் போகின்ற சர்வதேச நிலைத் தமிழாய்வில் நாம் பங்குகொள்ளவும் தக்க வகையில் மேற்கொள்ளப்படும் இவை போன்ற முயற்சிகளை அரசு அதிகமாக ஊக்குவிக்க வேண்டும். உலகெங்கிலும் வாழும் தமிழர்களைத் தாய்த் தமிழகத்தில் நடைபெற இருக்கின்ற சர்வதேசத் தரம் வாய்ந்த ஆய்வு முயற்சிகளில் இணைந்து பங்கேற்கச் செய்யவேண்டும். இவ்வாறு காலத்தின் தேவையை உணர்ந்து புதிய கண்ணோட்டத்தில் சிந்தித்து அதற்குப் போதிய நிதியுதவியினைத்

தயக்கமின்றி ஒதுக்கீடு செய்து, திட்டமிட்டுச் செயல்படத் தவறக்கூடாது. தவறினால் நம் தாய்மொழிக்கும், இருப்பத்தொன்றாம் நூற்றாண்டில் நடைபெற இருக்கின்ற நமது தாய்மொழி பற்றிய சர்வதேச ஆராய்ச்சிகளுக்கும் நாமும் நம் நாட்டுத் தமிழறிஞர்களும் அந்நியப்பட்டு விடுவோம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அது மட்டுமன்றி நமது ஆய்வுப் படைப்புக்கள் சர்வதேச நூல் விற்பனைச் சந்தையில் புறக்கணிக்கப்பட்டுவிடும் என்பதையும், சர்வதேச அரங்கில் நடைபெறும் தமிழ் ஆராய்ச்சியிலும், நமது தமிழறிஞர்கள் புறக்கணிக்கப் பட்டுவிடுவார்கள் என்பதையும் காலம் நமக்குத் தரும் எச்சரிக்கையாகக் கொண்டு நாம் செயல்படவேண்டும்.

# 4. ஆசியவியல் நிறுவனமும் தமிழ்ப் பணிகளும்

## நிறுவனத் தோற்றம்

தமிழர்தம் கலை இலக்கியப் பண்பாட்டுச் செல்வங்களை அழிவிலிருந்து பாதுகாத்துப் பராமரித்தல், அவற்றின் சிறப்பினை உலகெங்கிலும் பரப்புதல், அவை பற்றி சர்வதேச நிலையில் பிற நாட்டு நல்லறிஞர்களின் துணைகொண்டு ஒப்பீட்டு நோக்கில் ஆய்வு மேற்கொள்ளுதல் ஆகிய மூன்று அடிப்படைக் காரணங்களுக்காக ஜப்பானிய இந்திய அறிஞர்களின் கூட்டு முயற்சியாக 17 ஆண்டுகளுக்கு முன் தாய்த் தமிழகத்தின் தலைநகரான சென்னையில் பிறப்பெடுத்துள்ள ஆசியவியல் நிறுவனத்தில் மிகப் பெரிய அளவில் தமிழியல் ஆய்வுப் புலம் நிறுவப்பட்டுள்ளது.

மொழிகள், இலக்கியச் செல்வங்கள், கலைப்பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றிற்கிடையில் மிக நெருங்கிய குடும்ப ஒப்புமைகள் (family resemblance or genetic relationship) இருப்பதைக் கடந்த பல ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பாய்வுகள் நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளன. இந்நிலையில் ஆசிய நாடுகளின் மொழிகள், இலக்கியங்கள், பண்பாடுகள் ஆகியவற்றிற்கிடையே நின்று நிலவுகின்ற ஒப்புமைப் பண்புகள் அல்லது குடும்ப உறவுகள் கடந்த இரு நூற்றாண்டுகளில் பரந்த நோக்கோடு இத்துறையில் ஆய்வு மேற்கொண்ட பல அறிஞர்களையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளன. இதன் விளைவாக இந்தியப் பண்பாட்டுக்கூறுகளை ஆசியப் பின்னணியில் ஆயும் முயற்சி வலுப்பெறத் தொடங்கியது. இத்தகைய எண்ணம் 200 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவன ரீதியாக

முதன்முதலில் இந்தியநாட்டில் வடிவு பெற்றதன் விளைவாகக் கல்கத்தாவில் Asiatic Society என்று அழைக்கப்பெறும் ஆசியக் கல்விச் சங்கம் தோன்றியது. இத்தகைய கருத்தோட்டம் தமிழகத்தில் 17 ஆண்டுகளுக்கு முன்னர் வடிவு கொண்டபோது சென்னையில் ஆசியவியல் நிறுவனம் தோன்றியது.

கல்கத்தாவில் தோன்றிய ஆசியக் கல்விச் சங்கம் ஆசியப் பண்பாட்டுப் பின்னணியில் சமஸ்கிருத மொழியையும் வேதகாலப் பண்பாட்டுக் கூறுகளையும் கண்டு உலகுக்குக் காட்டத் தொடங்கியதன் விளைவாக உலகச் செம்மொழிகளுள் ஒன்று என்று கருதப்படும் உன்னத நிலை சமஸ்கிருதத்துக்குக் கிடைத்தது. இந்த அமைப்பினைத் தோற்றுவித்து நீர்பாய்ச்சி, உரமிட்டு வளர்த்த சர் வில்லியம் ஜோன்ஸ், மாக்ஸ்முல்லர், கோல்புருக் போன்ற பிறநாட்டினரின், குறிப்பாக ஐரோப்பியர்களின், இடையறாத மொழிபெயர்ப்பு முயற்சிகளால் சமஸ்கிருதப் படைப்புக்கள் உலக நாடுகள் அனைத்திலும் உலா வந்து அந்நாடுகளின் கலை இலக்கியப் பண்பாட்டுப் பாரம்பரியங்களில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின. இந்தியவியல் என்றால் சமஸ்கிருதவியல் மட்டுமே என்ற தவறான கணிப்பு உலகநாடுகளிடையே தோன்றும் அளவிற்கு இந்த ஆதிக்கம் பரந்தது.

## திராவிடவியல்

இந்திய நாட்டின் மற்றொரு பெரிய மொழிக்குடும்பமான திராவிடமொழிகளின் தனித்தன்மையும், இந்திய நாட்டின் மற்றொரு செம்மொழியான தமிழின் சிறப்பும் இதன்விளைவாக இருட்டடிப்புச் செய்யப்பட்டன. தொடக்க நிலையில் ஜி. யு. போப், கால்டுவெல் போன்ற பல அருட் தொண்டர்களும், தற்காலத்தில் கமில் சுவலபில் போன்ற எண்ணற்ற பிறநாட்டு அறிஞர்களும் அன்று கல்கத்தாவின் ஆசியச் சங்க அறிஞர்கள் மேற்கொண்டது போன்ற பல முயற்சிகளைத் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு போன்றவற்றின் பரவலுக்காக மேற்கொண்ட போதிலும் இவை நிறுவன ரீதியாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்படாததால் சிதறுண்ட உதிரிமுயற்சிகளாகவே அமைந்துவிட்டன. உலகத் தமிழாராய்ச்சி மன்றம் (IATR) போன்ற சில அமைப்புக்கள் 30 ஆண்டுகளுக்கு முன்னர் மலர்ந்தும் அவை விரைந்து திட்டமிட்டு செயலாற்றவியலாமல் தம் குறிக்கோளை நிறைவேற்றாமல் நின்றுவிட்டன.

இந்நிலையில் ஐரோப்பியர்களின் முயற்சியால் கல்கத்தாவில் பிறப்பெடுத்த ஆசியக் கல்விச் சங்கத்திற்கு நிகராக ஆசியப் பண்பாட்டுப் பின்னணியில் சர்வதேச நிலையில் தமிழாய்வை மேற்கொள்ளவும், தேமதுரத் தமிழோசை உலகெங்கிலும் பரவவும் துணைசெய்யும் வகையில் ஆசிய நாட்டு அறிஞர்களின் இணைந்த முயற்சியாக ஆசியவியல் நிறுவனம் தோன்றி தமிழாய்வில் சர்வதேச அறிஞர்கள் வியந்து போற்றும் அளப்பரிய பல சாதனைகளைக் கடந்த 17 ஆண்டுகளாக நிகழ்த்தி வருகின்றது.

## வளர்ச்சிநிலை

1982இல் சிறு முயற்சியாகத் தோற்றம் பெற்ற இவ் அமைப்பு அதன் செயல்திறத்தால் படிப்படியாக வளர்ச்சிபெற்று இன்று 125 முழுநேர ஆய்வாளர்களும், பணியாளர்களும் பணிபுரிகின்ற பெரிய அமைப்பாகப் பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற ஒரு சர்வதேச ஆய்வு நிறுவனமாக மலர்ந்துள்ளது. இந்திய நாட்டு அறிஞர்களுடன் அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற பிறநாட்டு அறிஞர்களும் இணைந்து தமிழாய்வு மேற்கொள்ளும் இந்நிறுவனம் பெரிய நூலகத்தினையும், கணிப்பொறி மையத்தினையும், எழில்மிக்க கட்டிடங்களையும், அருமையான ஆய்வுச் சூழலையும், வனப்புமிக்க வளாகத்தினையும், அனைத்து நவீன ஆய்வு வசதிகளையும் பெற்றுத் திகழ்கின்றது.

தமிழோடு கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஜப்பானியம் போன்ற பல்வேறு ஆசிய மொழிகளுக்கும் ஆய்வுத்துறைகள் கண்ட இந்நிறுவனம் மொழிபெயர்ப்பு, சுவடியியல், நாட்டுப்புறவியல், பௌத்தவியல் போன்ற தமிழோடு தொடர்புடைய பல்வேறு அறிவுத் துறைகளுக்கும் இடமளித்து ஆல்போல் தழைத்து வளர்ந்துள்ளது.

## சுவடியியல்

இந்நிறுவனத்தின் தலைமைசான்ற பணியாகத் தமிழர்களின் அறிவுச் செல்வங்களை அழிவிலிருந்து பாதுகாக்கும் பணி அமைகின்றது. யுனெஸ்கோ நிறுவனத்தின் உலகின் நினைவுச் சின்னங்கள் (Memory of the

World ) என்னும் அரியதிட்டத்தோடு இணைந்து செயல்படும் இத்திட்டத்திற்குத் தமிழகத்தின் நினைவுச் சின்னங்கள் (Memory of Tamil Nadu) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ் ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்தல், தமிழக நாட்டுப்புறக் கலைச்செல்வங்களைப் பராமரித்தல் என்பன போன்ற பல ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அறிவுவளர்ச்சியின் எல்லையைத் தொட்டு விட்டதாகப் பெருமிதம் கொள்ளும் இந்தக் கணிப்பொறி யுகத்தில் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் தமிழர்தம் அறிவுச் செல்வங்களையும், அனுபவப் பிழிவையும் ஏந்தி நிற்கும் பழைய ஓலைச்சுவடிகளில் 21 விழுக்காடு மட்டுமே அச்சு வடிவு பெற்று நூல்களாக வெளிவந்துள்ளன. எஞ்சிய 79 விழுக்காடு ஓலைச்சுவடிகள் கறையானின் கொடிய வாய்க்கும், இயற்கையின் கோரத்தாண்டவத்திற்கும் இடையில் சிக்கி அழிந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு காலனின் கையில் சிக்கி ஓலமிடும் இந்தக் கலைக் கருவூலங்களைக் காக்கும் முயற்சி தமிழகத்தில் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம் பிள்ளை போன்ற முன்னோடிகளின் அரிய முயற்சியால் பார்புகழும் சங்க இலக்கியங்களும், அரிய பல காப்பியங்களும், பக்திப் பனுவல்களும், சிற்றிலக்கியச் செல்வங்களும் அழிவிலிருந்து பிழைத்துக் கொண்டன. இவ்வாறு பிழைத்துக் கொ்ண்டவை வெறும் 21 விழுக்காடு மட்டுமே.

தாம் வாழ்ந்த காலம் முழுவதையும் சுவடிப் பாதுகாப்புக்காகச் செலவிட்ட தமிழ்த் தாத்தாவால் கூட 74 நூல்களை மட்டுமே பதிப்பித்து வெளியிட முடிந்தது. இது மிகப்பெரிய தனிமனித சாதனையாக அமைந்தபோதிலும் அழிந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சுவடிகளின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டு நோக்கும் போது இந்த 74 சுவடிகளின் பாதுகாப்பு ஒரு சிறு முயற்சியாகவே தோற்றம் தருகின்றது. இன்று அழிந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சுவடிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேல் என்பது எங்கள் சுவடித்துறையின் கணிப்பு. இந்தியத் தட்ப வெப்பநிலைகளில் வெறும் 350 ஆண்டுகள் மட்டுமே உயிர்வாழக் கூடிய இச்சுவடிகளில் பல ஏற்கெனவே மடிந்துவிட்டன; பல 350 வயதைத் தொட்டுக் கொண்டிருக்கின்றன; சில 300, 250, 200 வயதுகளுடன் வாழ்க்கைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன.

பொங்கல் பண்டிகையின் போது தீயிலிட்டுக் கொளுத்தப்பட்ட தமிழ்ச் சுவடிகள்தான் எத்தனை எத்தனை. ஆற்றில் புதுப்புனல் பொங்கிவந்த போது நீரில் தூக்கி எறியப்பட்டு அழிந்த தமிழ்ப் படைப்புக்கள்தான் எத்தனை எத்தனை. சமயப் பூசலின்போது செந்தழலில் வெந்து கருகிய இலக்கிய மதலைகள்தான் எத்தனை எத்தனை. போராலும், இயற்கையின் சீற்றத்தாலும் அழிந்த இலக்கியங்கள்தான் எத்தனை எத்தனை. மனிதனின் மூட நம்பிக் கையாலும், காலத்தின் கோரத் தாண்டவத்தாலும் அழிந்த ஓலைச்சுவடிகளைத் தவிர இன்று வாழ்க்கைக்குப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ்ச் சுவடிகள் ஏறத்தாழ ஒரு இலட்சம் என்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

தமிழர்தம் நினைவுச் சின்னமான இவற்றைப் பாதுகாக்க இந்நிறுவனத்தில் சுவடித்துறை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சுவடிப்பதிப்பில் இளைஞர்களுக்குப் பயிற்சிதருதல், சுவடிகளை நுண்படச் சுருள்களாகப் படமெடுத்தல், கணிப்பொறியின் மென்தகடுகளில் அவற்றைப் பதிவு செய்தல், 50 தொகுதிகளில் தமிழ்ச் சுவடிகளுக்கு ஆங்கிலத்தில் விளக்க அட்டவணை தயாரித்தல், அரிய நூல்களை ஆங்கில மொழிபெயர்ப்புடன் பதிப்பித்து வெளியிடுதல் போன்ற ஏராளமான பணிகளில் இந்தத்துறை தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தமிழ் ஓலைச்சுவடிகளின் பாதுகாப்பு முயற்சியில் அயராது ஈடுபட்டுள்ளது.

## நாட்டுப்புறவியல்

எழுத்துவடிவில் அமைந்துள்ள ஓலைச்சுவடிகள் என்னும் பழைய நினைவுச் சின்னங்களோடு வாய்மொழியாகத் தொடர்ந்துவரும் நமது அரிய நாட்டுப்புற இலக்கியச் செல்வங்களும் வேகமாக அழிந்து கொண்டிருக்கின்றன. மலையருவியாகவும், காற்றில் மிதந்துவரும் கவிதையாகவும் உலா வந்த இந்தச் செல்வங்களெல்லாம் தொழில் நுட்ப நாகரிகத்தின் வருகையால் விரைந்து மறைந்து கொண்டிருக்கின்றன. ஓலைச்சுவடிகளைப் போன்று இவையும் நமது அரியகலைச் செல்வங்கள் அல்லவா. தமிழினத்தின் உணர்வுகளை, அனுபவங்களை, பட்டறிவினைக் காலங்காலமாகத் தலைமுறை தலைமுறையாகச் சுமந்துவரும் நாட்டுப்புறக் கலைகள், இலக்கியங்கள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள்,

மருத்துவ முறைகள், மரபுவழிப்பட்ட அறிவியல், அறவியல் சிந்தனைகள் ஆகியவற்றைக் காக்கும் நோக்குடன் செயல்படும் இந் நிறுவனத்தின் நாட்டுப்புறவியல் துறை ஏட்டில் எழுதாத இந்த நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் வகையில் பல திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது.

1. ஆறு தொகுதிகளைக் கொண்ட தமிழக நாட்டுப்புறவியல் களஞ்சியம்.
2. மூன்று தொகுதிகளைக் கொண்ட நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் தொகுதி.
3. தமிழக மலைவாழ் மக்களின் வாய்மொழி வழக்காறுகள்.
4. சுற்றுப்புறச் சூழல்களுக்கும், தமிழக நாட்டுப்புறவியல் வழக்காறுகளுக்கும் இடையேயுள்ள உறவுகள்.
5. தமிழ் நாட்டுக் கடலோர மீனவர்களின் வாழ்வியலும் அவர்தம் சுற்றுப்புறச் சூழலும்

என்பன போன்ற பல ஆய்வுத்திட்டங்கள் இத்துறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆண்டொன்றிற்கு இரு மாவட்டங்கள் வீதம் 12 ஆண்டுகளில் தமிழகத்தின் அனைத்து மாவட்ட நாட்டுப்புற வழக்காறுகளையும் பதிவுசெய்து தமிழக நாட்டுப்புற வழக்காறுகள் பற்றிய 24 தொகுதிகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடும் முயற்சியினைத் தற்போது இத்துறை தொடங்கியுள்ளது. குமரி மாவட்டம் தொடர்பான களப்பணி ஆய்வு முடிவடைந்து நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இப்பணி தற்போது தொடங்கப்பட்டுள்ளது. சுவடித்துறையும், நாட்டுப்புறவியல் துறையும் முனைந்து பல்லாண்டுகள் பாடுபடும்போது தமிழர்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் பணி ஓரளவிற்கு நிறைவு பெறும் என்பது எங்கள் நம்பிக்கை. இவற்றுடன் கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கோயில்களின் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றின் பாதுகாப்பிலும் காலப்போக்கில் இந்நிறுவனம் முழுமுச்சுடன் ஈடுபடப் பல திட்டங்களைத் தீட்டிவருகின்றது.

அறிவுச் செல்வங்களை அழிவிலிருந்து பாதுகாப்பதன் முக்கியக் குறிக்கோளாக அவற்றை அனைவரும் பயன்படுத்தும்படி பரவச் செய்யும் இன்றியமையாத பணி அமைய வேண்டும். இந்நிலையில் நூல்கள் வழியாகவும், ஒளிப்பேழைகள், கணிப்பொறி மென்தகடுகள் (C.D. Rom) ஆகியவற்றின் மூலமாகவும் இவற்றைப் பலரும் பயன்பெறும்படி பரப்பும் பணியிலும் இந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது. உலக இலக்கியம் என்னும் பரந்த கோட்பாடு எழுந்துள்ள நிலையில் தமிழர்களின் பண்பாட்டுச் செல்வங்கள் அனைத்தும் உலக மக்களின் உடைமையாக மாற வேண்டும். மொழி என்னும் தடையைக் கடந்து மொழிபெயர்ப்பு வாயிலாகத் தமிழ் இலக்கியங்கள் பிற மொழி பேசுவோரிடையில் பாய்ந்து பரவ வேண்டும். எனவே, இவற்றைப் பரப்பும் முயற்சியின் ஒரு பகுதியான மொழிபெயர்ப்பு முயற்சி தேசிய நிலையிலும், சர்வதேச நிலையிலும் மேற்கொள்ளப் படவேண்டும்.

## மொழிபெயர்ப்பு

மறைவாக நமக்குள்ளே பழமை பேசிப் பெருமைகொள்ளும் நிலையை மாற்றித் தரமான தமிழ்ப் புலமையினைப் பிற நாட்டார் போற்றும் வண்ணம், தமிழிலக்கியங்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்க்கும் முயற்சியிலும் நாம் மிகவும் பின் தங்கியுள்ளோம். சங்க இலக்கியங்கள் கூட ஆங்கிலம் போன்ற சர்வதேச மொழிகளில் முழுமையாக மொழிபெயர்க்கப்படாத நிலையில் 21ஆம் நூற்றாண்டிற்குள் நாம் நுழைய இருக்கின்றோம். அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழிலக்கியங்களின் பல பகுதிகள் ஒரு சில மொழிகளில் மொழிபெயர்ப்பினைக் கண்டுள்ளனவேயன்றி முழுமையான மொழி பெயர்ப்புக்கள் இந்தி போன்ற தேசிய மொழிகளிலோ, ஆங்கிலம் போன்ற சர்வதேச மொழிகளிலோ தோன்றவில்லை. மொழி பெயர்த்துத் தமிழிலக்கியச் செல்வங்களைப் பிற மொழியினர் மத்தியில் உலவவிடும் குறிக்கோளோடு இந்நிறுவனம் எட்டு ஆண்டுகளுக்குமுன் மொழிபெயர்ப்புத் துறையைத் தோற்றுவித்தது. ஏராளமான தமிழ்ச் சுவடிகளை மொழிபெயர்த்து வெளியிட்டதுடன் முழுமையான சங்க இலக்கிய மொழிபெயர்ப்புத் திட்டத்தினைத் தற்போது தொடங்கியுள்ளது. சங்க இலக்கியங்களுள் ஒன்றான பரிபாடல் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டு தற்போது வெளியிடப்பட்டுள்ளது. கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றின் மொழிபெயர்ப்பு நிறைவுபெறும் நிலையில் உள்ளது.

அரிய இறைநெறிப் பாடல்களின் தொகுப்பான பன்னிரு திருமுறைகளை 20 தொகுதிகளில் ஆங்கிலத்திலும், 20 தொகுதிகளில் இந்தியிலும் மொழிபெயர்க்கும் பணி விரைந்து முன்னேறி வருகின்றது. ஆறு தொகுதிகளில் நாலாயிர திவ்வியபிரபந்தம் ஆங்கில மொழி பெயர்ப்பாக உருவாகி நிறைவுபெறும் நிலையில் உள்ளது. இரட்சண்ய யாத்திரீகமும் ஆறு தொகுதிகளாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்க் கவிதைகளின் மொழிபெயர்ப்பு சங்க இலக்கியம் தொடங்கிப் பாரதிதாசன் வரை 20 தொகுதிகளாகக் (*Tamil Poetry through the Ages*) காலந்தோறும் தமிழ்க் கவிதை என்ற பெயரில் தயாராகி வருகின்றது. இதன் முதல் தொகுதி கடந்த ஆண்டு வெளிவந்தது. இரண்டாவது தொகுதி அச்சில் உள்ளது.

## தரவுநூல்கள்

பிற நாட்டினரோடு இணைந்து தமிழாய்வு மேற்கொள்ள சர்வதேசத் தரம் வாய்ந்த தரவு நூல்கள் தேவைப்படுகின்றன. இத்தகைய அடிப்படைத்தரவு நூல்கள் பலவற்றை சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் இந்நிறுவனம் தயாரித்து வருகின்றது. உலக இலக்கியத்தின் ஒரு பகுதியாகத் தமிழிலக்கியங்கள் கருதப்படும் இக்காலக் கட்டத்தில் தமிழ்மொழி இலக்கியம் பற்றிய ஆய்வுகள் தேசிய நிலையிலும், சர்வதேச நிலையிலும் மலர்வதற்கு அடித்தளம் அமைத்துத்தர வேண்டியது தமிழ் மக்கள் அனைவரின் அடிப்படைக் கடமையாகும். இவற்றைச் செய்ய நாம் தவறிவிட்டோம் என்றால் அது நமது மொழி, பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கும், தமிழ் இனத்திற்கும் நாம் இழைக்கும் பெருந்துரோகமாக அமைந்துவிடும். வரும் 21ஆம் நூற்றாண்டில் தமிழ் பற்றிய ஆய்வு, உலகின் ப்ல்வேறு பகுதிகளில் சர்வதேச நிலையில் பிற நாட்டு அறிஞர்களால் பெருமளவிற்கு மேற்கொள்ளப்படும் வாய்ப்பு அரும்பியுள்ளது. இந்தச் சர்வதேச நீரோட்டத்தில் நாம் இணைந்து செல்லத் தவறும்போது தமிழாய்வில் தமிழனும், தமிழ்நாடும் புறக்கணிக்கப்படும் நிலை தோன்றினால் கூட நாம் வியப்படைவதற்கில்லை.

இவை போன்ற காலத்தின் தேவைகளை மனதிற்கொண்டு நீண்ட தொலைநோக்குடன் பாரெங்கும் பைந்தமிழ் ஆய்வு பரவும் வகையில் பல

அடிப்படைத்தரவு நூல்களை ஆங்கிலத்தில் இந்நிறுவனம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. அவற்றுள் தலையாய பணியாகப் பத்துத் தொகுதிகளைக் கொண்ட தமிழிலக்கியக் களஞ்சியப்பணி (Encyclopaedia of Tamil Literature) அமைகின்றது. இத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே ஆங்கிலத்தில் பிரிட்டிஷ் கலைக் களஞ்சிய அமைப்பில் தமிழிலக்கியக் களஞ்சியத்தின் மூன்று தொகுதிகள் வெளிவந்துள்ளன. நான்காவது தொகுதி அச்சில் உள்ளது. தமிழ் இலக்கியங்களைப் பிற திராவிட மொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆய்வதற்கு வாய்ப்புக்கள் பிறக்கும் வாயிலாகத் தெலுங்கு, கன்னடம் போன்றவற்றிற்குரிய இலக்கியக் களஞ்சியங்களையும் இந்நிறுவனம் ஆங்கிலத்தில் தயாரித்து வருகின்றது. தமிழக நாட்டுப்புறவியல் களஞ்சியம் ஆறு தொகுதிகளாக ஆங்கிலத்தில் வெளிவர இருக்கின்றது.

இவற்றோடு தமிழ் மக்களின் சமூக வரலாற்றை விளக்கியுரைக்கும் மூன்று தொகுதிகளை இந்நிறுவனம் ஆங்கிலத்தில் தயாரித்துள்ளது. இதன் முதல்தொகுதி ஏற்கெனவே வெளிவந்துள்ளது. இரண்டாவது தொகுதியும், மூன்றாவது தொகுதியும் அச்சில் உள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றை விளக்கியுரைக்கும் ஆறு தொகுதிகளைக் கொண்ட நூல் ஒன்று ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுவருகின்றது. தமிழர் அல்லாதோர் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழாய்வுக்கும் தந்துள்ள பங்களிப்பினைத் தொகுத்துரைக்கும் கையேடு (*A Directory on the Contribution of non-Tamils to Tamil Studies*) ஒன்றும் இந்நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

ஆய்வுக்கும், மொழி வளர்ச்சிக்கும் பயன்படும் பல்வேறு அகராதிகளைத் தயாரிக்கும் பணிகளும் இந்நிறுவனத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதிக்குப்பின் தரமான இரு மொழி அகராதிகள் தோன்றாத குறையைப் போக்கும் வண்ணம் 20 தொகுதிகளைக் கொண்ட தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதியின் தயாரிப்புப் பணி தொடங்கப்பட்டுள்ளது. அவ்வாறே 20 தொகுதிகளைக் கொண்ட ஆங்கில-தமிழ் அகராதித் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளைக் கொண்ட கன்னடம்-தமிழ்-ஜப்பானிய-ஆங்கிலப் பன்மொழி அகராதியின் முதல் தொகுதி வெளிவந்து இரண்டாவது தொகுதி அச்சில் உள்ளது. தமிழிலக்கியக் கலைச்சொல் அகராதியொன்றும் ஆங்கிலத்தில் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. தமிழிலக்கியக் குறியீடுகளின் (symbols)

அகராதியொன்றின் தயாரிப்பு வளர்ச்சி நிலையில் உள்ளது. அகராதிகளின் தயாரிப்பிற்குரிய தலைச் சொற்களைத் (Head words) திரட்ட கணிப்பொறியின் வாயிலாகத் தமிழிலக்கியங்கள் அனைத்திற்கும் சொல்லடைவு தயாரிக்கும் திட்டம் பொங்கல் **2000** என்ற பெயரில் ஜெர்மன் நாட்டின் கொலோன் பல்கலைக்கழகம், அமெரிக்க நாட்டின் கலிபோர்னியா பெர்க்லி பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியோடு இந்நிறுவனத்தில் செயல்பட்டு வருகின்றது.

இத்தரவுநூல்களின் தயாரிப்புப் பணிகள் நிறைவுபெறும் நிலையில் தமிழிலக்கியம், பண்பாடு, மொழி பற்றிய ஒப்பியல் ஆய்வுகள் பலவற்றை இந்நிறுவனம் மேற்கொள்ளும். தமிழ்ப் பண்பாடு பிற ஆசியப் பண்பாடுகளில் செலுத்தியுள்ள தாக்குரவுகள், அது பிறமொழி பேசுவோருடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள கொள்வினை கொடுப்பினைகள், ஆசியப் பண்பாட்டின் உருவாக்கத்திற்குத் தமிழ்ப் பண்பாட்டின் பங்களிப்பு போன்றன ஒப்பியல் நோக்கில் மிக விரிவாக இந்நிறுவனத்தால் ஆராயப்படும். இத்தகைய திட்டங்கள் பன்மொழி வல்லுநர்களால், பலதுறை வல்லுநர்களின் இணைந்த முயற்சியாக மேற்கொள்ளப்படும். இத்தகைய ஆய்வுகள் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினை ஆராய்ச்சிப் பூர்வமாக சர்வதேச அரங்கில் நிலைநாட்டத் துணைபுரியும்.

தமிழியல் ஆய்வில் ஈடுபடும் அறிஞர்களை ஒருங்கிணைக்கும் எண்ணத்துடன் பல கருத்தரங்குகளை இந்நிறுவனம் தேசிய நிலையிலும், சர்வதேச நிலையிலும் சிறப்புற நடத்தியுள்ளது. சுவீடன், ஜப்பான் ஆகிய நாடுகளோடு இணைந்து பௌத்தம் தமிழ்ப் பண்பாட்டிற்கு நல்கியுள்ள பங்களிப்பை ஆய்ந்து காணும் கருத்தரங்கினை 1992ஆம் ஆண்டில் நடத்திய இந்நிறுவனம், வருகின்ற டிசம்பர் மாத இறுதியில் முதல் சர்வதேசக் கந்தன்-முருகன் கருத்தரங்கினை நடத்தத் திட்டமிட்டுள்ளது. தமிழ்க் கடவுள் பற்றி நடத்தப்படும் இந்த மாநாடு ஒரு சர்வதேசத் தமிழ் மாநாடாகவே அமைய உள்ளது.

18 நாடுகளைச் சார்ந்த 85 அறிஞர்கள் இம் மாநாட்டில் தமிழ்க் கடவுளின் பல்வேறு பண்புகள் பற்றிய ஆய்வுரைகளை வழங்க உள்ளனர். ஏராளமான கலை நிகழ்ச்சிகளும், முருகன் பற்றிய நூல் வெளியீடுகளும் இம் மாநாட்டில்

இடம்பெற உள்ளன. உலகெங்கும் சிந்திச் சிதறிக் காணப்படும் தமிழர்களைத் தமிழ்க் கடவுளின் பெயரால் ஒருங்கிணையச் செய்து தமிழர் மேம்பாட்டுக்கும், தமிழ் மொழி மேம்பாட்டுக்கும் உறுதுணை புரியவல்ல வழிவகைகளைக் காணமுயலும் இந்தப் பணியிலும் உங்கள் பங்களிப்பு மகத்தானதாக இருக்க வேண்டும் என்பது எங்களின் எதிர்பார்ப்பு.

இந்நிறுவனத்தின் தமிழாய்வுக் கனவுகள் செயல் வடிவம் பெறும்போது தேமதுரத் தமிழோசை பாரெங்கும் பரவும்; உலகச் செம்மொழிகளின் வரிசையில் அன்னைத் தமிழும் இடம்பெறும். ஜப்பான் நாடு நல்கிய மூன்று கோடி ரூபாய் நன்கொடையில் இந் நிறுவனத்தின் வனப்புமிகு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. தமிழக அரசும், பிற அரசுகளும் பல நிலைகளில் இந் நிறுவனப் பணிகளுக்குத் தொடர்ந்து உதவிக் கரம் நீட்டிவருகின்றன. கடல் கடந்து வாழும் தமிழர்களும் தாய்த் தமிழகத்தில் நடைபெறும் இந்தத் தமிழ்ப் பணிகளில் இணைந்து செயல்பட முன்வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. நாம் அனைவரும் இணைந்து இப்பணிகளில் முழுமூச்சாக ஈடுபடும்போது 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்ற கவிஞனின் கற்பனை கலந்த வாக்கு செயல் வடிவம் பெறும். இப்பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு.

# 5. இங்கும் ஒரு தமிழ்த்தாத்தா

அது 1968ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அரசியலில் இருந்து மீட்சிபெற்றுத் தமிழ் இலக்கியங்களின் பக்கம் எனது உள்ளம் திரும்பிய காலக் கட்டம் அது. இலக்கியங்களை ஆர்வமாகக் கற்கத் தொடங்கிய அந்தக் காலக் கட்டத்தில் முழுமையாக எதையும் ஆய்வு நோக்கில் புரிந்து கொள்ளாது ஒரு சில மேலோட்டமான வரிகளை அடிப்படையாக வைத்து வாழ்வியல் இலட்சியங்களை உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அமைத்துக்கொள்ளும் போக்கு என்னிடம் அப்போது இருந்ததை எண்ணிப் பார்க்கிறேன். பழந்தமிழ்க் கவிதைகளைக் கற்கத் தொடங்கியபோது புறநானூற்றின் பலவரிகள், அப்போது நெஞ்சில் ஆழமாகப் பதிந்துவிட்டன. "பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகளை மனதில் வைத்துக்கொண்டு செயற்கரிய செயல்கள் செய்த எந்தப் பெரிய மனிதனையும் நாம் பாராட்ட வேண்டிய தேவை இல்லை என இறுமாந்து செருமாந்து திரிந்த காலமது. கணியன் பூங்குன்றன் எந்த நிலையாமைத் தத்துவத்தை வைத்துக்கொண்டு இந்த வரிகளைப் பாடினான் என்பதைச் சரிவர உணராத காலமது. யாரையும் மதிக்கத் தேவையில்லை என்ற அகம்பாவத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்த வரிகள் அப்போது எனக்குத் துணையாக அமைந்துவிட்டன.

இந்நிலையில் தமிழ் இலக்கியங்களில் அதிகப் பரிச்சயம் ஏற்பட ஏற்பட மேற்கூறிய மனப்போக்கு என்னிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடைபெற்றுக் கொண்டதை எண்ணிப் பார்க்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழை ஆழமாகப் பயின்றபோது ஏராளமான ஆன்று, அவிந்து, அடங்கிய கொள்கைச் சான்றோர்களைப் பற்றியெல்லாம் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களெல்லாம் அப்போது இமய மலையின் மிக உயரமான சிகரங்களைப் போன்று என் மனக்கண்முன் காட்சி தந்தனர்.

செயற்கரிய செய்யும் பெரியோர்கள் வியத்தலுக்கும், பாராட்டுதலுக்கும், வணக்கத்துக்கும் உரியவர்கள் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன். இவர்களைப் போன்று ஏராளமாகக் கற்று நானும் ஒரு சிறந்த தமிழ் அறிஞனாக மாற்றம் பெற வேண்டுமென்று விழைந்த அக்காலக் கட்டத்தில் டாக்டர் மு. சண்முகம் பிள்ளை என்னும் சிறந்த தமிழறிஞரின் பெயரை மட்டும் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

தமிழ் மொழி வரலாற்றை முதுகலை வகுப்பில் நடத்திக் கொண்டிருந்த டாக்டர் செ.வை. சண்முகம் அவர்கள் பாடம் நடத்தும் போது மீனவர்களின் வட்டார வழக்கு பற்றிய ஆய்வுகளைக் குறிப்பிடும் போது டாக்டர் மு. சண்முகம் பிள்ளையவர்களின் பெயரை முதன்முதலில் என் காதுகளில் விதைத்ததாக நினைவு. மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ் ஆசிரியனாகப் பணிபுரிந்தபோது இந்தப் பெயருக்குரிய தமிழ் அறிஞர் மதுரைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார் என்று அறிந்துகொண்டேன். நாகர்கோவில் இந்துக் கல்லூரியில் என்னோடு பயின்ற நண்பர் தி. நடராசன் அவர்களை மதுரையில் சந்தித்தபோது, அவர் மதுரைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் மு. சண்முகம் பிள்ளையிடம் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்வதாகவும், அவர் நாகர்கோவில்காரர் என்றும், மொழியியலை நன்றாகப் படித்தவர் எனவும் குறிப்பிட்டார். பல்கலைக்கழகத்திற்குச் செல்ல பேருந்துக்காக நாங்கள் இருவரும் ஒருநாள் காத்து நின்றபோது அதோ மு. சண்முகம் பிள்ளை வருகிறார் என்று அந்த நண்பர் கூற அவர் சுட்டிக்காட்டிய திசையில் நான் கூர்ந்து நோக்கினேன்.

மிதிவண்டியின் பின்புறத்தில் சில கோப்புக்களையும், சில நூல்களையும் இறுக்கமாகக் கட்டி வைத்துக்கொண்டு நீண்ட தலைமயிர் காற்றில் பறக்க அந்த அறிஞர் அசைந்து அசைந்து மிதிவண்டியை மிதித்துக்கொண்டு அழகர்கோவில் சாலையில் சென்று கொண்டிருந்ததைப் பார்த்தேன். இதுவே டாக்டர் மு. சண்முகம் பிள்ளையவர்களை நான் முதலில் தரிசித்த காட்சி.

அப்போது அப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த துரை அரங்கனார் ஓய்வு பெற்று விட்டதாகவும், அந்த இடத்தில் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் அமர்த்தப்பட்டதாகவும் நான் கேள்விப்பட்டேன். டாக்டர் மு. சண்முகம் பிள்ளை என்ன ஆனார் என்று நான் கேட்டபோது பதவி உயர்வு தரப்படாததால் சினங்கொண்டு மீண்டும்

அவர் அமெரிக்காவிற்கே சென்றுவிட்டார் என்று என் நண்பர்கள் கூறினர். எனவே மதுரையில் இருந்த காலத்தில் இந்தப் பேராசிரியரோடு எந்த விதமான பழக்கமோ, நெருக்கமோ எனக்கு ஏற்படவில்லை. எனது கல்லூரியின் தமிழ்த்துறையில் பணியாற்றிய டாக்டர் கு. பரமசிவம் அவர்கள் எம். லிட். பட்டத்திற்காகப் பேராசிரியரின் கீழ் ஆய்வு செய்ததைப் பலமுறை குறிப்பிட்டுள்ளதை நினைத்துப் பார்க்கிறேன். அப்போது, மதுரையில் வாழ்ந்த தமிழறிஞர்கள் அனைவருக்கும் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையிடம் ஓரளவு நல்ல மதிப்பிருந்ததை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எனினும், தற்கால இலக்கியங்களிலும், நாட்டுப்புற இலக்கியங்களிலும், மொழியியலிலும் அவர் காட்டிய அதிக ஆர்வத்தை மரபுவழிப்பட்ட தமிழறிஞர்கள் பலரும் கேலி செய்துகொண்டு இருந்தனர். மதுரைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை அப்போது மிகச்சிறிய துறையாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் நான் சென்னைக்கு வரவே மதுரையோடு உள்ள தொடர்பு எனக்கு அறவே அற்றுவிட்டது என்பேன்.

சென்னைக்கு வந்த சில மாதங்களில் மதுரைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக டாக்டர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். அவருடைய விசுவருபத்தை துறைத்தலைவராக அவர் பணியாற்றிய அப்போதுதான் நான் சரிவரப் புரிந்துகொள்ள முடிந்தது. மிகச்சிறிய தனது துறையை ஓரிரு வருடங்களில் மிகப்பெரிய ஆய்வு மையமாக அவர் மாற்றிக்காட்டியது ஒரு பெரிய மாயாஜால வித்தையாகவே பலருக்கும் தென்பட்டது. வயதில் இளைய மாணவர்களின் பெயரோடு தன் பெயரையும் இணைத்துக்கொண்டு அவர் நூல்கள் வெளியிட்டது எங்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்தியது. பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைத் தலைவர்களெல்லாம் வானத்திலிருந்து இறங்கி வந்த கடவுளர்களைப் போலத் தங்களைக் கருதிக்கொண்டு ஆராய்ச்சி மாணவர்களையும் இளைஞர்களையும் வதைத்துக் கொண்டிருந்த காலத்தில் ஒரு தலைமை சான்ற அறிஞர் மேலைநாட்டு ஆய்வு நெறிமுறைகளையெல்லாம் கற்றுத்தேர்ந்து புத்தம் புதிய துறைகளில் இளம் மாணவர்களோடு இணைந்து ஆய்வு நூல்கள் பல வெளியிட்டது ஒரு புதிய சாதனையாகவே எனக்குத் தென்பட்டது. துறைத் தலைவர்களின் அறிவுக் கொடுமைக்கும், அராஜகப் போக்குகளுக்கும் அடிமைப்பட்டு நொந்து கிடந்த ஆராய்ச்சி மாணவர்களுக்கு இது ஒரு புதுத் தெம்பினை நல்கியது.

'தமிழ்க் கல்வி என்றால் அண்ணாமலைக்குப் போ' என்றிருந்த நிலைமையை மாற்றி 'தமிழ் படிக்க மதுரைக்குச் செல்' என்ற திருப்புமுனையினை ஏற்படுத்தியது பேராசிரியர் முத்துச் சண்முகம் பிள்ளையின் மிகப்பெரிய சாதனையாக இன்றும் என் கண்களுக்குத் தென்படுகின்றது. தமிழ்கெழுகூடலாக மதுரை மீண்டும் பொலிவுபெற அவரும் ஒரு முக்கியக் காரணமாக இருந்ததை யாரும் மறுக்கமுடியாது. மிகக்குறுகிய காலத்தில் அவரைப் போன்று அவரது தமிழ்த் துறையும் பிரமாண்டமான வடிவினை எடுக்க ஆரம்பித்தது. அங்கு முனைவர் பட்ட ஆய்வுசெய்து கொண்டிருந்த மாணவர்கள் அனைவரும் மிக விரைவில் பட்டம் பெற்று இணைப் பேராசிரியர்களாகவும், துணைப் பேராசிரியர்களாகவும் மாறிப் பிற பல்கலைக்கழகங்களில் தமிழ் அறிஞர்களை எல்லாம் பொறாமை கொள்ளும்படிச் செய்துகொண்டிருந்தனர்.

மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் உறுப்பினர்கள் மொழியியல், ஒப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, தற்கால இலக்கியம், இலக்கணம், மொழியியல், நடையியல், சமூகவியல் என்றெல்லாம் பல புதிய துறை சார்ந்த வல்லுநர்களாக வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்தனர். இந்நிலையில் தமிழகத்தின் அனைத்துத் தமிழ் அறிஞர்களின் பார்வையும் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை தலைவராக இருந்த மதுரைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையின்மீது மிக அழுத்தமாகப் பதியத் தொடங்கியது. இக்காலக் கட்டத்தில் இந்த பெரிய மனிதரின் கல்விப் பணிகளையும், ஆய்வுச் சாதனைகளையும், தமிழ்த் தொண்டினையும் சென்னையிலிருந்து நான் கவனித்து ஓரளவு மதிப்பீடும் செய்து வந்தேன்.

டாக்டர் முத்துச் சண்முகம் பிள்ளை அவர்கள் எழுதிய ஆங்கில நூல் ஒன்றினை (The Collected Papers) மதிப்புரை எழுதுவதற்காகப் புலமை என்ற ஆராய்ச்சி இதழ் எனக்கு அனுப்பிவைத்தது. அந்த நூலில் அவர் மேற்கொண்ட ஆய்வு அணுகுமுறை, குறிப்பாக அவரது மொழியியல் அணுகுமுறை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மிக நீண்ட மதிப்புரை ஒன்றினை எழுதி புலமை வாயிலாகப் பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிட்டிருந்தேன்.

இக்காலக் கட்டங்களில் தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையில் யாழ்ப்பாணத் தமிழறிஞர் க. கைலாசபதி அவர்கள் பல திருப்புமுனைகளை

ஏற்படுத்தி இருந்தார். மார்க்சியக் கண்ணோட்டத்தில் தமிழ் இலக்கியத் திறனாய்வில் ஏராளமான சாதனைகளை அவர் படைத்திருந்தார். அவரது மார்க்சிய அணுகுமுறைகளை இளந்தலைமுறையினர் மிகவும் விரும்பிப் போற்றினர். முனைவர் க. கைலாசபதியின் கருத்துக்கள் பலவற்றை நான் ஏற்றுக்கொள்ளாத போதிலும் அவரது அணுகுமுறை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெற்றிருந்த இலக்கியவாதிகள் முனைவர் க. கைலாசபதியின் அணுகுமுறையினை எதிர்த்து வந்துள்ளனர்.

அடியும் முடியும் என்ற நூலில் புலைப்பாடியும் கோபுரவாசலும் என்ற அருமையான கட்டுரையின் வாயிலாகத் திருநாளைப்போவார் எனப்பெயரிய நந்தனாரின் வாழ்க்கையினை முனைவர் க. கைலாசபதி ஆராய்ந்திருந்த விதம் என்னை மிகவும் கவர்ந்தது. முனைவர் க. கைலாசபதியின் அணுகுமுறையினை எதிர்த்து அமெரிக்காவில் பலகாலம் பணியாற்றிய பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் கட்டுரை ஒன்றை எழுதியிருப்பதாக அறிந்தபோது அதைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. நான் தோற்றுவித்த ஆசியவியல் நிறுவனத்தின் நிர்வாகச் சுமை படிக்கும் நேரத்தை முழுமையாக ஆக்கிரமிப்பு செய்த நிலையில் எனது விருப்பம் நிறைவேறாமலே இருந்தது. ஒரு முறை தில்லிக்குச் செல்லும்போது பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்களின் தமிழிலக்கியக் கோட்பாடு என்னும் நூலை எடுத்துச் சென்று விமானத்தில் ஓய்வாக அமர்ந்து முழுமையாகப் படித்தேன். சமூகவியல் தொடர்பான எம்.என். சீனிவாஸ் அவர்களின் மேல்நிலையாக்கம் (Sanskritisation) என்னும் கருத்தை அடியொற்றி நந்தனார் சரித்திரத்திற்குப் பேராசிரியர் க. கைலாசபதியின் அணுகுமுறைக்கு மாறுபட்ட ஒரு புதிய விளக்கத்தை பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை தந்திருந்தார். முனைவர் க. கைலாசபதியின் கட்டுரையினைப் பலமுறை பயின்ற எனக்கு இந்த விளக்கம் நிறைவு தருவதாக இல்லை. அதிலிருந்து இவரது நூல்களோடு உள்ள தொடர்பு சற்று நின்று போனது.

டேவிட் லடன் என்னும் அமெரிக்க அறிஞரோடு இணைந்து பேராசிரியர் அவர்கள் குறுந்தொகை முழுவதையும் மிகச் சிறப்பாக மொழி பெயர்த்திருந்தார்கள். குறுந்தொகை பற்றிய ஆய்வு முன்னுரையும்,

பாடல்களுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கமும் அமெரிக்க நாட்டு அணுகுமுறைகளைப் பறைசாற்றி நின்ற போதிலும் இந்நூலில் மூலத்தின் கருத்து மிகைப்படுத்தப்படாமல் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது நெஞ்சத்திற்கு நிறைவு தந்தது.

இந்நிலையில் பேராசிரியர் அவர்கள் ஓய்வுபெற்று பாண்டிச்சேரியிலும், தஞ்சாவூரிலும் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். ஆசியவியல் நிறுவனத்தின் தமிழ் இலக்கியக் களஞ்சியத் திட்டம் மிகச் சிறப்பாக வளர்ச்சி கண்டபோது டாக்டர் மு. சண்முகம் பிள்ளை போன்ற பரந்து பட்ட அறிவும், பயிற்சியும் உடைய ஓர் அறிஞர் அதில் பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை நான் உணர்ந்தேன். இவரை அழைத்து இந்தத் திட்டத்தில் முழுமையாக ஈடுபடவைக்க வேண்டுமெனை விரும்பினேன். இக்களஞ்சியத்தின் முதல் தொகுதியைத் தயாரிக்கும்போது என்னால் அதற்காக மாலை நேரத்தில் மட்டும் ஓரளவு போதுமான நேரத்தை ஒதுக்க முடிந்தது. இரவு ஒன்பது மணி வரை டாக்டர் ஜெ. பார்த்தசாரதி, டாக்டர் வி. முருகன் ஆகியோருடன் இணைந்து பதிப்புப் பணிகளில் ஈடுபட்டது போன்று காலப்போக்கில் என்னால் அதிக நேரத்தை இந்த அரிய தமிழ்ப் பணிக்காகச் செலவு செய்ய முடியவில்லை. இந்நிலையில் டாக்டர் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பி அவரைச் சென்னைக்கு வரவழைத்தேன். இதுவே, அவரை நேருக்கு நேர் நான் சந்தித்த முதல் சந்திப்பாக அமைந்தது.

பதிப்பாசிரியர் பணியில் அவரை அமர்த்த நான் எடுத்த முடிவிற்குத் தமிழ் அறிஞர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இவரிடம் வேலை வாங்குவது அரிது என்றும், நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு இணைந்து போகும் மனப்போக்கு இவரிடம் கிடையாது என்றும், குறித்த நேரத்தில் கொடுக்கப்பட்ட பணிகளை முடித்துத் தரமாட்டார் என்றும் எனக்கு நெருக்கமான தமிழ் அறிஞர்கள் பலரும் அச்சுறுத்திக்கொண்டே இருந்தனர். எனினும், பேராசிரியரோடு நெருங்கிப் பழகாத போதிலும் அவர் மீதும், அவர் ஆய்வுத்திறன் மீதும் எனக்கு அளவுகடந்த நம்பிக்கை இருந்தது. தமிழ் அறிஞர்கள் எழுப்பிய எதிர்ப்புக் குரலைப் பொருட்படுத்தாது டாக்டர் மு. சண்முகம் பிள்ளை அவர்களைத் தமிழியல் ஆய்வுப்புலத்தின் தலைவராகவும், தமிழ் இலக்கியக் களஞ்சியத்தின் பதிப்பாசிரியராகவும் நியமனம் செய்தோம்.

இந்த நிறுவனத்தில் கடந்த எட்டு ஆண்டுகளாக, 78 வயதை எட்டிப் பிடிக்கின்ற இந்த இளைஞர் பணிபுரிந்து கொண்டிருக்கின்றார். தமிழ் அறிஞர்கள் எழுப்பிய ஐயக் குரல்கள் எல்லாம் முழுப்பொய் என்பதை அவர் இந்த எட்டு ஆண்டுகளில் நிருபித்துள்ளார்.

டாக்டர் மு. சண்முகம் பிள்ளை அவர்களிடம் எனக்குப் பிடித்த நற்குணங்கள் பல. ஓர் இலட்சியத் தமிழ் அறிஞராக, அறிவு ஜீவியாக, சுடர்மிகும் அறிவு படைத்தவராக அவர் வாழ்ந்து வருகின்றார் என்பது நெஞ்சிற்கு நிறைவு தருகின்றது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது இவரது இயல்புக்கு முற்றிலும் முரணானது. மனதில் தோன்றும் கருத்துக்கள், நெஞ்சப் பதிவுகள், உள்ளக் குமுறல்கள், வேதனைச் சுமைகள், மகிழ்ச்சிப் பெருக்குகள் அனைத்தையும் மனம் திறந்து பேசும் இயல்பு அவரிடம் உள்ளது.

பெரும்பாலான தமிழ் அறிஞர்களுக்கு உள்ள தாழ்மை உணர்ச்சி இவரிடம் ஒரு சிறிதளவு கூட இல்லாதது மற்றொரு சிறப்புத் தன்மையாகும். எந்த அறிஞர் கூட்டத்திலும், எத்தகைய விமர்சனங்களையும் பொருட்படுத்தாது தன் உள்ளம் ஏற்றதொரு கருத்தை எவர் வரினும் அஞ்சாது தமிழ் மொழி மூலமாகவோ, ஆங்கில மொழி மூலமாகவோ உரத்த குரலில் எடுத்துரைப்பதற்கு என்றுமே அவர் தயங்கியது கிடையாது.

ஓர் இலட்சியத் தமிழ் அறிஞன் அல்லது எழுத்தாளனுக்கு என்னென்ன சிறப்பியல்புகள் இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேனோ அந்தச் சிறப்பியல்புகள் அனைத்தும் வாய்க்கப்பெற்ற தன்னாற்றல் மிக்க ஒரு நல்ல தமிழறிஞராக இன்றும் அவர் வாழ்ந்து வருகின்றார். இத்தகைய தன்னம்பிக்கையும், கொள்கைப் பிடிப்பும், மனத்துணிவும் உள்ள தமிழ் அறிஞர்களை இப்போது காண்பது மிகவும் அரிது. எண்ணிக்கையில் குறைந்துவரும் இத்தகைய அபூர்வப் பிறவிகள் காலப்போக்கில் கண்ணுக்குத் தட்டுப்படாமல் மறைந்து போய்விடுவரோ என்று நான் பலமுறை வேதனையோடு எண்ணிப் பார்த்ததுண்டு. அடுத்த தலைமுறை இது போன்ற மனிதர்களைப் பிற கிரகங்களிலிருந்து பூமியில் இறங்கிய விந்தை மனிதர்கள் என்று வியக்கப்போகின்றனர் என்று கூட நான் நினைத்ததுண்டு.

டாக்டர் மு. சண்முகம் பிள்ளை அவர்களிடம் நான் கண்ட மற்றொரு வியப்புப் பண்பு அவரது சுறுசுறுப்பும் உழைப்பாற்றலுமேயாகும். 78

வயதிலும் வயது வேறுபாடுடைய பல இளம் அறிஞர்களை அரவணைத்துக்கொண்டு முழுமுச்சுடன் அவர் சோர்வின்றி ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருப்பது என்னைப் பலமுறை வியப்பில் ஆழ்த்தியதுண்டு. இந்த அரிய பண்புதான் அவரது உடல் நலனையும் ஓரளவிற்கு இன்றும் நல்ல நிலையில் வைத்துள்ளது என்று நான் கருதுகிறேன்.

அவர் ஆராய்ச்சியினையும், தமிழ்த் தொண்டினையும் வாழ்க்கையாகக் கொண்டவர். மற்ற அறிஞர்களைப் போன்று அவருக்கு ஆராய்ச்சியும் சொந்த வாழ்க்கையும் என்றுமே வேறு வேறாக இருந்தது கிடையாது. அவரைப் பொறுத்தவரையில் இவ்விரண்டும் ஒன்றையொன்று பிரிக்க முடியாத அளவிற்கு இணைந்து, இரண்டறக் கலந்து ஒன்றாக அவரிடம் சங்கமம் ஆகியுள்ளன எனலாம். தமிழ் ஆய்வே வாழ்வாகவும், வாழ்வே தமிழ் ஆய்வாகவும் அவருக்கு அமைந்துவிட்டது.

ஆசியவியல் நிறுவனத்தில் மூன்று தலைமுறைகளைச் சார்ந்த ஆய்வாளர்கள் இருப்பதை எண்ணி எண்ணி நாங்கள் மகிழ்வதுண்டு. டாக்டர் மு. சண்முகம் பிள்ளை அவர்களைத் தேடிவரும் ஓர் அமெரிக்க நாட்டு அறிஞர் 'தாத்தா இருக்கிறாரா' என்று உரிமையோடு கேட்டு அவரது துறைக்குள் நுழைவதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். தமிழ் அறிஞர்களுக்கெல்லாம் அவர் ஒரு தாத்தாவாக, டாக்டர் உ.வே. சாமிநாதை யருக்கு அடுத்த இரண்டாவது தமிழ்த் தாத்தாவாகத் திகழ்கின்றார் என்பதில் சற்றும் ஐயமில்லை.

எனக்குத் தமிழ் கற்றுக் கொடுத்த எல்லா ஆசிரியர்களுக்கும் அவர் ஆசிரியராக இருப்பதை எண்ணிப் பார்த்து நான் மகிழ்வதுண்டு. எனது தமிழ் ஆசிரியர்கள் என்னைப் பார்க்க வரும்போதெல்லாம் நாங்கள் முதலில் எங்கள் ஆசிரியரான பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்களைப் பார்த்துவிட்டு எங்கள் மாணவனான உங்களைப் பார்க்க வருகின்றோம் என்று மிக வேடிக்கையாகக் கூறுவதுண்டு. ஆசியவியல் நிறுவனத்தின் ஒரு பகுதியான தமிழியல் ஆய்வுப்புலத்தில் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்களின் தலைமையில் எனது ஆசிரியர் ஒருவர் கூடப் பணிபுரிகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனக்கும் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளையவர்களுக்கும் இடையே உள்ள வயது வேறுபாடு மிகப் பெரியது. எனினும், அவ்வப்போது நிறுவன

வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகியன தொடர்பான பல புதிய சிந்தனைகள் உள்ளத்தில் தோன்றும் போதெல்லாம் ஒரு குழந்தையைப் போன்று புன்சிரிப்புடன் மிக ஆர்வத்தோடு காத்து நின்று என்னைப் பார்த்துத் தனது கருத்துக்களை என்னோடு பகிர்ந்துகொள்வதில் அவர் அடையும் மகிழ்ச்சியைப் பலமுறை எண்ணிப்பார்த்து நான் பெருமிதம் அடைந்ததுண்டு. நான் வெளிநாடுகளுக்குப் பல்முறை சென்றுவந்த போதெல்லாம் இந்த முதறிஞர் விமான நிலையத்திற்குத் தவறாமல் வந்து வழியனுப்பி வரவேற்ற காட்சிகளெல்லாம் இன்றும் என் கண்முன் நிற்கின்றன. தமிழ் உணர்வு அவர் உள்ளம் முழுவதும், உடம்பு முழுவதும் இழையோடுவதை எப்பொழுதும் காணமுடியும். தமிழின் பெருமைகளைப் பற்றிப் பேசும்போது தமிழ் இலக்கியச் சோலையில் தேன் உண்ணும் ஒரு தும்பியைப் போன்றும், தமிழுக்காக வாதாடும் இடங்களில் ஒரு தமிழ் மறவனைப் போன்றும் அவர் செயல்படுவதைக் காணலாம். இந்தத் தமிழ்த் தாத்தா, இந்தத் தமிழ்த் தும்பி, இந்தத் தமிழ் மறவர் நீண்ட காலம் வாழ்ந்து எண்ணற்ற தமிழ்ப் பணிகளைச் செய்து பல இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையவேண்டும் என்பது என் அடிமனத்தின் ஆசைக் கனவுகளில் ஒன்று.

♦ ♦ ♦

# சொல்லடைவு


அக்கினி 7
அகச் சான்றுகள் 19
அகத்தியர் 16
அகநானூறு 2,3,71
அகப்பாடல் 12
அகப்பாடல்களின் தன்மைகள் 26
அகப்பாடல் மரபு 12,15
அகவற்பா 28,29
அச்சுப்பொறி 50
அடிப்படைத் தரவு நூல்கள் 73
அடியும் முடியும் 80
அண்ணாமலை 79
அண்ணாமலைப் பல்கலைக்
கழகம் 76
அண்ணாமலை ரெட்டியார் 16
அணங்கு 8
அமெரிக்க நாட்டு அணுகு
முறைகள் 81
அமெரிக்கப் பல்கலைக்கழகம் 80
அமெரிக்கா 18,62,67,74,78,80
அருணகிரிநாதர் 16
அலங்கார மொழிநடை 45,46
அலெக்சாண்டர் 8
அழகர்கோவில் சாலை 77
அறநெறிக் கவிதைகள் 48
அறநெறிக் கால கட்டம் 27
அறநெறிக் காலம் 21,29
அறநெறிப் பாடல்கள் 21,22,28,31
அறவியல் சிந்தனைகள் 70
அறவுணர்வுகள் 41
அறிவியல் யுகம் 53
அறுபடைவீடுகள் 9
அனைத்திந்திய வழிபாட்டு மரபு 1
ஆகமநெறி 5
ஆங்கிலக் கல்வி 52
ஆங்கிலம் 55,60,61,63,70,71,73,82
ஆசியக் கல்விச் சங்கம் 57,66,67
ஆசிய நாட்டு அறிஞர்கள் 67
ஆசிய நாடுகள் 62,65
ஆசியப் பண்பாட்டுப் பின்னணி
66,67
ஆசியப் பண்பாடு 74
ஆசியப் பின்னணி 65
ஆசிய மொழிகள் 67
ஆசியவியல் நிறுவனம் 62,63
65-67,80,81,83
ஆரியத் தாக்கம் 12
ஆரிய திராவிடப் பண்பாட்டு
மோதல் 13
ஆலன் டண்டஸ் 58
ஆழ்வார்கள் 36
ஆற்றல் இலக்கியம் 25
ஆறுமுகக் கடவுள் 5
ஆன்மீகம் தொடர்பான வாழ்வு 25
ஆன்மீக வளர்ச்சி 53
ஆன்மீக வாழ்வு 23
ஆன்மீக வாழ்வு பற்றிய
இலக்கியங் கள் 24
ஆஸ்திரேலியா 18
இங்கிலாந்து 18,67
இசை வல்லுநர்கள் 47
இடைக்கால இறைநெறிக்
கவிதைகள் 57
இணையம் 63
இந்தி 55,56,63,71,72
இந்திய இலக்கியம் 51
இந்தியச் சமயப் பொது மரபு 13
இந்தியச் சிந்தனைகள் 57
இந்தியச் செம்மொழிகள் 55,56
இந்தியத் திறனாய்வாளர்கள் 41
இந்திய நாட்டுக் கிராமியப்
பொருளாதாரம் 50
இந்தியப் பண்பாட்டுக் கூறுகள் 65
இந்தியப் பண்பாடு 57
இந்தியப் பொருளாதாரம் 50
இந்திய மொழிகள் 55,61
இந்தியவியல் பற்றிய ஆய்வு 57
இந்தியா 2,8,18,50,55,60,66
இந்திரன் 15

இமயு மலை 76
இயற்கை இகந்த கற்பனை மாந்தர்கள் 44
இயற்கை இகந்த செய்திகள் 24
இயற்கை இகந்த தெய்வீக வீரர்கள் 44
இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் 35
இயற்கைக் காட்சிகள் 47
இயற்கைப் பாடல்களின் கூறுகள் 26
இரட்சண்ய யாத்திரீகம் 72
இரவீந்திரநாத் தாகூர் 51
இராமலிங்க சுவாமிகள் 16
இராமலிங்கம், ந. 16
இராமாயணம் 22
இலக்கிய ஆய்வுகள் 52
இலக்கிய உணர்வு 25
இலக்கிய உத்திகள் 46,49
இலக்கியக் களஞ்சியம் 73
இலக்கியக் கோட்பாடுகள் 19,44
இலக்கியச் சுவை 15
இலக்கியச் செல்வங்கள் 65
இலக்கியத் திறனாய்வு 79
இலக்கியத் துறை 41
இலக்கிய நடை 46
இலக்கிய நுகர்வு 44
இலக்கியப் படைப்பு உலகு 27
இலக்கியப் படைப்புக்கள் 34,44,52
இலக்கிய மதலைகள் 9
இலக்கிய வகை 34
இலங்கை 7,17,58,60
இலங்கை மக்களின் வழிபாட்டு மரபு 7
இறைநெறி அனுபவங்கள் 28,33
இறைநெறி இலக்கியங்கள் 16,31,40
இறைநெறி உணர்வு 32
இறைநெறிக் கவிஞர்கள் 41
இறைநெறிக் கவிதைகள் 29
இறைநெறிக் கால கட்டம் 26,27
இறைநெறிப் பாடல்கள் 24,27, 30-39,43,45,47,48,72
இறையனார் களவியல் 16
இறையனார் களவியல் உரை 17
இறையனுபவங்கள் 30
இறையுணர்வு 29,31,47
இறையுணர்வு இலக்கியங்கள் 30
இறையுணர்வுப் பாடல்கள் 26,44
இனக்குழுக் கடவுள் 4
இனக்குழு வேடர் மரபு 4
உத்தர கயிலாயம் 17
உபதேச காண்டங்கள் 15
உபநிடதங்கள் 57
உயர்குடி மக்களின் இலக்கியங்கள் 42
உயர்குடி மக்களின் கடவுள் 4
உருத்திரசன்மன் 16
உருத்திரன் 7
உரையாசிரியர்கள் 21
உலக இலக்கியம் 51,71,72
உலகச் சந்தை 50
உலகச் செம்மொழி 66,75
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 59,66
உலகத் தமிழ் மாநாடு 59
உலக நாடுகள் 53
உலகப் பொருளாதாரம் 50
உலக மொழிகள் 39,61
உலகியல் தொடர்பான வாழ்வு 25
உலகியல் வாழ்வு 22
உலகியல் வாழ்வு பற்றிய இலக்கியங்கள் 24
உலகின் நினைவுச் சின்னங்கள் 60,67
உள்ளுறைப் பொருள் 33
உற்பத்திப் பொருட்கள் 51
எங்கெல்ஸ் 51
எட்டுத் தொகை 10
எபிரேயச் சமுதாயம் 31
எமர்சன் 57
எலியட், டி.எஸ். 57
எஸ்ராபவுண்ட் 57
ஐரோப்பிய மொழி 57
ஒப்பியல் ஆய்வுகள் 74
ஒப்பிலக்கியம் 79
ஒப்பீட்டு நோக்கு 65
ஒழுக்கக் கோட்பாடுகள் 23
ஒளிப்பேழைகள் 71
ஓலைச்சுவடிகள் 51,69
கச்சியப்பர் 11,14-16
கடப்பம் பூ 2,6
கடம்பர்கள் 2
கடம்பு 6
கடவுள் கோட்பாடு 57
கடவுள் மறுப்புக் கொள்கை 57
கண்ணகி 6
கண்ணன் 14
கணிப்பொறி 53,63,74
கணிப்பொறி மென்தகடுகள் 71
கணிப்பொறி யுகம் 63,68

கணியன் பூங்குன்றன் 76
கதிர்காம மலை 7
கதிர்காம முருகக் கடவுள் 7
கதிர்மலை 17
கதைப் பாடல்கள் 38
கந்தக் கடவுள் 3
கந்தபுராணம் 14-17
கந்தன் 7,8,10,12,13,15
கந்தன்-சுப்பிரமணியன் 4
கந்தன்-தெய்வயானைத் திருமணம் 12
கந்தியார் 20
கம்பராமாயணம் 48
கம்யூனிஸ்டு கட்சி 51
கமில் சுவலபில் 58,66
கயவாகு 11
கயிலாய மலை 17
கல்கத்தா 57,66,67
கல்லாடம் 16
கலவை இலக்கியம் 33
கலவைப் பாடல்கள் 33
கலித்தொகை 71
கலிபோர்னியா பெர்க்லி பல்கலைக்கழகம் 74
கலை இலக்கியப் பராமரிப்பு அமைப்பு 29,51
கலை இலக்கியப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் 66
கலைப்பண்பாட்டுக் கூறுகள் 65
கலை, பண்பாடு பற்றிய ஆய்வுகள் 54
கவிதையின் மொழிநடை 45
கவிதையின் வடிவம் 27
களப்பணி ஆய்வு 70
களவுக் காதல் 12
களவு மணம் 3,4
கற்பனைச் சுதந்திரம் 30
கற்பு மணம் 6
கன்னடம் 67,73
கன்னடம்-தமிழ்-ஜப்பானிய-ஆங்கிலப் பன்மொழி அகராதி 73
காஞ்சிபுரம் 14
காஞ்சிமரப் பூக்கள் 6
காதே 51
காந்தாரம் 36
காப்பியப் பாடல்கள் 38
காப்பியப் போக்கு 38
காமசூத்திரம் 15
கார்த்திகேயன் 1,12,13
கார்ல் மார்க்ஸ் 51
கால்டுவெல் 57,66
காலரிட்ஜ் 57
காளி 14
காளிதாசன் 57
கானடா 18
கானல் வரி 48
கிரவுஞ்ச மலை 2,10
கிரேக்கக் குமரக் கடவுள் 7
கிரேக்க நாடு 19
கிரேக்க மன்னன் 8
கிரேக்க வாழ்த்துப் பாடல்கள் 19
கிறிஸ்தவச் சமயச் சிந்தனைகள் 52
கிறிஸ்தவச் சிந்தனைகள் 52
கிறிஸ்தவத் திருமறை 11
கிறிஸ்தவம் 52
கீழை நாடுகள் 61
குடும்ப ஒப்புமைகள் 65
குமரகுருபரர் 16
குமரக் கோட்டம் 14
குமரன் 13
குமரி மாவட்டம் 70
குலக் கடவுள் 7
குறப்பெண்கள் 6
குறிசொல்லல் 12
குறிஞ்சி 2
குறிஞ்சித்திணை 32
குறுந்தொகை 3,80
குன்றம் எரிந்த குமரவேள் 17
குன்றம் பூதனார் 26
கேரளம் 11
கைலாசபதி,க. 79,80
கொலோன் பல்கலைக்கழகம் 74
கொற்றவை 6
கோல்புருக் 57,66
கோனேரியப்பர் 15
கௌரி 14
சங்க அகப்பாடல்கள் 32
சங்க இலக்கியத் தொகுப்பு 22
சங்க இலக்கியங்கள் 3,22,32,63,68
சங்க இலக்கியம் 72
சங்க இலக்கிய மொழிபெயர்ப்புத் திட்டம் 71
சங்கத் தொகை நூல்கள் 26
சங்க நூல்கள் 4,6
சங்கப் பாடல்கள் 2,24
சங்க மரபு 5

சண்முகம், செ.வை. 77
சண்முகம் பிள்ளை, மு. 77-83
சமகாலச் சமுதாயப் பின்புலன்கள் 35
சமணம் 21
சமய இலக்கியங்கள் 25
சமய இலக்கிய மரபுகள் 11
சமயக் கோட்பாடுகள் 23,41
சமயச் சார்பற்ற கவிதைகள் 22
சமயச் சார்புடைய கவிதைகள் 22
சமயச் சார்பு குறைந்த அறப்பாடல்கள் 27
சமயச் சிந்தனைகள் 26
சமயச் செய்திகள் 19
சமயப் புராண மரபுகள் 15
சமய, புராண, வழிபாட்டு மரபுகள் 1
சமயப் பூசல் 69
சமயம் சார்ந்த உணர்வுகள் 25
சமயம் சாராத உணர்வுகள் 25
சமய மரபுகளின் ஆய்வு 2
சமஸ்கிருத ஆய்வு 58
சமஸ்கிருத இலக்கியங்கள் 57
சமஸ்கிருதப் படைப்புக்கள் 66
சமஸ்கிருதம் 55,61
சமஸ்கிருத மொழி 57,66
சமஸ்கிருதவியல் 66
சமஸ்கிருதவியல் பற்றிய ஆய்வு 57
சமுதாய அமைப்பு 27
சமுதாயப் பின்புலம் 52
சமுதாயப் போக்குகள் 27
சமுகவியல் 79
சமுகவியல் ஆய்வு 2
சமுகவியல் திறனாய்வாளர்கள் 27
சர்வதேச ஆய்வுகள் 60
சர்வதேச ஆய்வு நிறுவனம் 67
சர்வதேச ஆராய்ச்சிகள் 64
சர்வதேசச் சந்தை 54,55,58
சர்வதேசத் தமிழ் மாநாடு 74
சர்வதேசத் தமிழாய்வு 56
சர்வதேசத் தமிழாராய்ச்சி 62
சர்வதேசத் தரம் வாய்ந்த தரவு நூல்கள் 72
சர்வதேசத் தொடர்புகள் 62
சர்வதேச நிலை 18,52,56,57,62, 67,72,74
சர்வதேச நிலைத் தமிழாய்வு 63
சர்வதேச நூல் விற்பனைச் சந்தை 58,60,61,64
சர்வதேச மரபு 1
சர்வதேச வழிபாட்டு மரபு 18
சாத்திர நூற்கள் 33
சாதாரண மக்கள் மரபு 5
சாமிநாதையர், உ.வே. 68,83
சான்றோர் மரபு 5
சிங்கப்பூர் 18
சிங்களப் புராண மரபு 11
சிந்துவெளி நாகரிகம் 2
சிலப்பதிகாரம் 5,9,11,48
சிவரகசிய காண்டம் 14
சிவன் 7,9,17
சிற்றிலக்கியச் செல்வங்கள் 68
சீகன்பால்க் 58
சீதை 14
சீனிவாச அய்யங்கார், பி.டி. 21
சீனிவாஸ், எம்.என். 80
சுசுமோ ஒனோ 58
சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் 53
சுயநிறைவு உணர்வு 45
சுவடித்துறை 68-70
சுவடிப் பதிப்பு 69
சுவடிப் பாதுகாப்பு 68
சுவடியியல் 67
சுவீடன் 74
சூர் 8,10
சூரபத்மன் 8
சூரன் 3,10,11
சூரன்வதை 11
செந்நெறிப் படைப்புக்கள் 31
செம்மொழி 66
செவ்வேள் 2-4,49
சென்னை 62,65,66,78,81
சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி 73
சேயோன் 2,4
சேவல் 11
சையம் 21
சைவ மரபு 16
சொல்லடைவு 74
சொல்லியல் 106
சோமஸ்கந்தக் கலைவடிவங்கள் 9
ஞானசம்பந்தர் 16
ஞானசம்பந்தன், அ.ச. 77
ஞானப்பழம் 17
ஞானவரோதயர் 15
டயோனிசஸ் 1,7,8
டென்னிஸ் ஹட்சன் 58

டேவிட் சுல்மன் 11
டேவிட் லடன் 80
தக்கணக் கயிலாயம் 7,17
தத்துவச் சிந்தனைகள் 33
தமிழ் 1,15,20,33,36,55,56,58,60,61, 66,67,70,75,76,79
தமிழ் அறநெறி இலக்கியங்கள் 52
தமிழ் அறநெறிப் பாடல்கள் 21
தமிழ் ஆய்வு 83
தமிழ் ஆராய்ச்சி 64
தமிழ் இலக்கணம் 16
தமிழ் இலக்கிய உலகு 28
தமிழ் இலக்கியக் களஞ்சியத் திட்டம் 81
தமிழ் இலக்கியங்கள் 51,71,76
தமிழ் இலக்கியச் சோலை 84
தமிழ் இலக்கியத் திறனாய்வு 80
தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறை 79
தமிழ் இலக்கியம் 28,51
தமிழ் இலக்கிய வரலாறு 16,22,27, 29,73
தமிழ் இறைநெறிப் பாடல்கள் 31
தமிழ் இறைநெறிப் பாடல்களின் மரபு 36
தமிழ் இனத்தின் குறியீடு 18
தமிழ் இனம் 72
தமிழ் உணர்வு 84
தமிழ் ஓலைச்சுவடிகள் 60,68
தமிழ் ஓலைச்சுவடிகளின் பாதுகாப்பு முயற்சி 69
தமிழ் ஓலைச்சுவடிகளின் விளக்க அட்டவணை 63
தமிழ்க் கடவுள் 16-18,74
தமிழ்க் கல்வி 79
தமிழ்க் கவிதை 72
தமிழ்கெழுகூடல் 79
தமிழ்ச் சங்கம் 17
தமிழ்ச் சமுதாய அமைப்பு 23
தமிழ்ச் சமுதாயம் 1,13,23,25,28,42
தமிழ்ச் சுவடி 71
தமிழ்ச் சுவடிகள் 68,69
தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி 63,73
தமிழ்த் தாத்தா 68,83,84
தமிழ்த் தும்பி 84
தமிழ்த்துறை 74
தமிழ்நாடு 52
தமிழ்ப் படைப்புக்கள் 69
தமிழ்ப் பண்பாட்டின் தோற்ற வளர்ச்சி நிலைகள் 1
தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சி நிலை பற்றிய ஆய்வு 2
தமிழ்ப் பண்பாட்டுத் தலைவன் 18
தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சி 15
தமிழ்ப் பண்பாடு 2,74
தமிழ்ப் புராணங்கள் 3
தமிழ்ப் புலமை 71
தமிழ்நாட்டு இனக்குழுக் கடவுள் 4
தமிழ்நாட்டுச் சமய மரபு 7
தமிழ்நாட்டுப் பிரதேச மரபு 1
தமிழ்நாட்டுப் புராண மரபுகள் 14
தமிழ் நாட்டுப்புறவியல் களஞ்சியம் 63
தமிழ்நாட்டுப் பௌராணிகர்கள் 7
தமிழ்நாடு 27,55
தமிழ்நூல் வெளியீட்டாளர்கள் 59
தமிழ் நெறி 3
தமிழ் மரபு 6,10,12,13,17
தமிழ் மறவன் 84
தமிழ் முருகன் 13
தமிழ் மொழி 4,52,59,82
தமிழ் மொழி மேம்பாடு 75
தமிழ் மொழி வரலாறு 77
தமிழ் மொழி வளர்ச்சி 73
தமிழ் வளர்ச்சி 84
தமிழகத்தின் நினைவுச் சின்னங்கள் 68
தமிழக நாட்டுப்புறக் கலைச் செல்வங்கள் 68
தமிழக நாட்டுப்புறவியல் களஞ்சியம் 70,73
தமிழக நாட்டுப்புறவியல் வழக்காறுகள் 70
தமிழகம் 59
தமிழக மக்கள் 55
தமிழக மலைவாழ் மக்கள் 70
தமிழர் சமூக வரலாறு 63
தமிழர் மேம்பாடு 75
தமிழாய்வு 52-58,61-63,67,72,73
தமிழாய்வுக் கனவுகள் 75
தமிழாய்வுகள் 59
தமிழாய்வு நூல்கள் 55
தமிழாய்வுப் புரட்சி 62
தமிழாராய்ச்சி 59,60
தமிழாராய்ச்சி உலகம் 58
தமிழாராய்ச்சி நூல்கள் 55

தமிழியல் 58
தமிழியல் ஆய்வு 74
தமிழியல் ஆய்வுப்புலம் 65,83
தமிழிலக்கியக் கலைச்சொல்
அகராதி 73
தமிழிலக்கியக் களஞ்சியப்பணி 73
தமிழிலக்கியக் களஞ்சியம் 63,73
தமிழிலக்கியக் குறியீடுகளின்
அகராதி 73
தமிழிலக்கியக் கோட்பாடு 80
தமிழிலக்கியப் படைப்புக்கள் 52
தமிழிலக்கியம் 8,12,52,55-57,63,72-74
தமிழோசை 67
தருக்கவியல் செய்திகள் 33
தல புராணங்கள் 40
தற்கால இலக்கியம் 78,79
தற்சார்பு நிலை 52
தன்மைப் பன்மை முவிடப்பெயர் 38
தன்னாட்சி அமைப்புக்கள் 62
தன்னுணர்வு நிலை 45
தன்னுணர்ச்சிக் கவிதைகள் 37
தன்னுணர்ச்சிப் பாடல்கள் 19,36,38
தாமோதரம் பிள்ளை, சி.வை. 68
தாய்மொழி 64
தாரகன் 3
தாரகாசுரன் 10
தாமஸ் மால்டன் 62
திகடச்சக்கரம் 17
திராவிடப் பண்பாடு 57
திராவிட மொழி இலக்கியம் 73
திராவிட மொழிகள் 57,66
திராவிடவியல் 58
திராவிடவியல் ஆய்வு 58
திராவிடி 23
திரிபுரம் எரித்த விரிசடைக்
கடவுள் 17
திருநாளைப்போவார் 80
திருப்பரங்குன்றம் 9,26,27,32,
35,39,40,47,48
திருப்புகழ் 16
திருமால் 13,22,23
திருமுருகாற்றுப்படை 3-6,9,13
திரு.வி.க. 4
தில்லி 80
திறனாய்வு உலகு 27
தும்பி 47
துரை அரங்கனார் 77
துறவு வாழ்க்கை 22
தூத்துக்குடி 70
தூய இறைநெறிப் பாடல்கள் 29
தெய்வயானை 3,13,17
தெய்வயானை-வள்ளி இணைவு 13
தெய்வீக இலட்சியங்கள் 41
தெய்வீகப் புராண வீரர்கள் 44
தெலுங்கு 67,73
தேசிய இலக்கியங்கள் 51
தேசியக் கடவுள் 2,4
தேசியச் சந்தை 54,55
தேசிய நிலை 18,52,55,56,72,74
தேசிய மரபு 1
தேசிய வழிபாட்டுக் கூறுகள் 18
தேவசேனை 12
தேவாரம் 16
தென்நாடு 14
தென்னாப்பிரிக்கா 18
தென்னிந்தியா 18
தென்னிந்தியவியல் ஆராய்ச்சி 58
தொண்டை நாடு 14
தொல்காப்பியம் 1
தொல்காப்பியர் 29
தொழிற்புரட்சி 50
தொன்மையான புராதனக்
கவிதைகள் 43
தோத்திர நூல்கள் 33
நக்கீரர் 4
நச்சினார்க்கினியர் 20
நடையியல் 79
நந்தனார் 80
நந்தனார் சரித்திரம் 80,
நப்பின்னை 14
நல்லச்சுதனார் 36
நல்லழிசியார் 26
நவீன ஆய்வு வசதிகள் 62
நற்றிணை 3
நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் 32
நாட்டுப்புற இலக்கியங்கள் 33
நாட்டுப்புற இலக்கியச்
செல்வங்கள் 69
நாட்டுப்புற இலக்கியம் 78
நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் 70
நாட்டுப்புறக் கலைகள் 69
நாட்டுப்புறப் பாடல்கள் 33,42
நாட்டுப்புற வழக்காறு 70
நாட்டுப்புறவியல் 67
நாட்டுப்புறவியல் துறை 70
நாடகப் பாடல்கள் 38

நாடகப் போக்கு 38
நாயன்மார்கள் 36
நாலாயிர திவ்வியப் பிரபந்தம் 63,72
நியுசிலாந்து 18
நிலந்தருதிருவின் பாண்டியன் 11
நிலப்பிரபுத்துவ அமைப்பு 23,30
நிலப்பிரபுத்துவச் சமுதாயம் 46
நிலவுடைமைச் சமுதாயம் 51
நீலக்கடல் 9
நூல் வெளியீட்டாளர்கள் 52
நூல் வெளியீட்டு அமைப்புக்கள் 53
நெடுவேள் 2
நெல்லை 70
நொபுருகராஷிமா 58
நோதிறம் 36
பஃறுளி ஆறு 11
பக்தி இலக்கியம் 29,52
பக்திப் பனுவல்கள் 36,68
பக்திப் பாடல்கள் 26,28,29
பக்தியுணர்வு 26,27
பட்டினப்பாலை 3
படைவீடு 9,27
பண் சுமந்த பாடல்கள் 36
பண்பாட்டுச் செல்வங்கள் 71
பண்பாட்டுப் பாரம்பரியங்கள் 56,69,72
பண்பாட்டுப் பின்னணிகள் 1
பத்துப்பாட்டு 10
பத்மன் 8
பத்மாவதி 14
பதிற்றுப்பத்து 2,3,8
பரசுராமன் 11
பரமசிவம், கு. 78
பரிபாடல் 3-5,9,12,19-27, 29,32-36, 38,39,42-46,48,49
பரிமேலழகர் 20,21
பல்கலைக்கழக மானியக்குழு 67
பல்லவர் காலம் 9
பல்லவி 47
பழந்தமிழ் இலக்கியம் 4
பழந்தமிழ்க் கவிதைகள் 76
பழநி 17
பழைய இலக்கியங்கள் 35
பழைய ஏற்பாடு 11
பழைய தமிழ்ச் செந்நெறி இலக்கியங்கள் 21
பழைய தமிழ் மரபு 6
பழைய தாய்வழிச் சமுதாயம் 6
பழைய நினைவுச் சின்னங்கள் 69
பழைய மரபுகள் 35
பழையோள் 6
பன்மொழிக்கல்வி 61
பன்னிரு திருமுறைகள் 63,72
பாட பேதங்கள் 21
பாண்டிச்சேரி 81
பாணர்கள் 19,20,41,42,47
பாம்பன் சுவாமிகள் 16
பார்த்த சாரதி, ஜெ. 81
பார்வதி 9
பாரதம் 22
பாரதிதாசன் 72
பாலி 61
பிரச்சார நோக்கம் 32
பிரதேச இலக்கியங்கள் 51,52
பிரதேசச் சந்தை 54,55,58,59
பிரதேச நிலை 18
பிரதேச முயற்சிகள் 58
பிரபஞ்சத்திலுள்ள குழப்பம் 10
பிரான்சு 18
பிரிட்டிஷ் கலைக்களஞ்சிய அமைப்பு 73
பிறமொழிப் புலமை 61
பிஜி 18
புகழ்ச்சிப் பாடல்கள் 29
புதிய அறிவியல் கண்டு பிடிப்புக்கள் 50
புதிய சமய மரபு 5
புதிய சமுதாயக் கோட்பாடுகள் 27
புதுப்புனல் விழா 20
புதுமைச் சமுதாயம் 23
புராணச் செய்திகள் 22
புராண மரபு 7,10,11,13,15
புராண வழிபாட்டு மரபு 1
புராதனக் கவிதைகள் 39,43
புராதன மந்திரச் சடங்குகள் 39
புலமை 79
புலனெறி வழக்கு 12
புலைப்பாடியும் கோபுரவாசலும் 80
புறநானூறு 2,3,37,76
புறவடிவம் 19,39
பெருந்தெய்வம் 5
பெப்சி 58
பைந்தமிழ் ஆய்வு 72
பொங்கல் 2000 74
பொங்கல் பண்டிகை 69
பொது இலக்கியக் கோட்பாடு 51
பொது இலக்கிய மரபு 51

பொழுதுபோக்கு இலக்கியங்கள் 25
போக்குவரத்துத் தொடர்பான அறிவியல் கண்டுபிடிப்புக்கள் 50
போப், ஜி.யு. 58,66
போர்த் தெய்வம் 9
போலந்து 59
பௌத்த இலக்கண நூல் 17
பௌத்த சமயம் 57
பௌத்தம் 21,74
பௌத்தவியல் 67
பௌராணிகச் சமய மரபுகள் 14
பௌராணிக மரபுகள் 10
மகாலிங்கம், நா. 56
மகிழ்வுணர்வு 45
மடலேறுதல் 12
மடைமாற்றம் 11
மதுரை 6,77-79
மதுரைக்காஞ்சி 3,6
மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை 79
மதுரைப் பல்கலைக்கழகம் 78
மயில் 11,48
மரபு இலக்கியங்கள் 32
மரபுக் கவிஞர்கள் 35
மரபுவழிப்பட்ட அறிவியல் 70
மரபுவழிப்பட்ட தமிழறிஞர்கள் 78
மருதப்பண் 20
மருதப்பாடல்கள் 32,35
மலையாளம் 67
மலைவாழ் மக்கள் 5
மலேயா 18
மழு 11
மன்றாட்டு 35
மன்றாட்டுக் கவிதைகள் 43
மன்றாட்டுப் பகுதி 49
மன்றாட்டுப் பாடல்கள் 38,39
மாக்சிம் கார்க்கி 44
மாக்ஸ்முல்லர் 57,66
மாமரம் 11
மார்க்சிய அணுகுமுறை 80
மார்க்சியக் கண்ணோட்டம் 80
மார்க்சியத் திறனாய்வாளர்கள் 27
மீட்டுருவாக்கம் 34
மீனவர்களின் வட்டார வழக்கு 77
முதல் சர்வதேச கந்தன்-முருகன் கருத்தரங்கு 74
முரண் 46
முருகக் கடவுளின் வழிபாடு 32
முருகப் பெருமான் 32,35,47
முருக வழிபாட்டின் தோற்ற வளர்ச்சி நிலைகள் 1
முருக வழிபாடு 1,2,5-7,15,16,18
முருகன் 2-14,16,17,19,22,23,26, 27,44,74
முருகன்-கந்தன் இணைப்பு 9
முருகன்-கந்தன் பற்றிய மரபு 7
முருகன்-சூரன் முரண்பாடு 10
முருகன்-தெய்வயானைத் திருமணம் 12
முருகன் பற்றிய சமய மரபு 5
முருகன்-வள்ளி திருமண மரபு 12
முருகன், வி. 81
முருகனது வழிபாட்டிடம் 5
முருகியல் அனுபவம் 45
முருகியல் உணர்வு 45
முழவுகள் 47
மெய்யுணர்வுப் பாடல்கள் 24
மென்தகடுகள் 63
மேல்நிலையாக்கம் 80
மேலைநாட்டு ஆய்வு நெறிமுறை 78
மேலைநாட்டுக் கல்வி 50
மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் 36
மேலைநாட்டு மரபிலமைந்த கல்வி முறை 53
மேலை நாடுகள் 61
மொரிசியசு 18
மொழிக்குழு 30
மொழிபெயர்ப்பு 67,71
மொழிபெயர்ப்புத் துறை 71
மொழிபெயர்ப்பு முயற்சிகள் 66
மொழியியல் 78
மோகினி 8
மோசே 11
யாழ் 20,41,47
யாழ்ப்பாணத் தமிழறிஞர் 79
யாழிசை 19
யுனெஸ்கோ 60,67
ருக்மணி 14
வட இந்தியப் புராண மரபு 12
வட இந்தியா 1
வடநாட்டுக் கந்தன் 4,13
வடநாட்டுக் கயிலாயம் 7
வடநாட்டுச் சமயக்கூறுகள் 17
வடநாட்டு மரபு 7,8,17
வடமொழிக் கந்தன் 10
வடமொழிப் புராணங்கள் 9

வடமொழி மரபு 7,10,12
வடசெச் சமய புராண மரபுகள் 16
வடவர்-திராவிட சமய மரபு 13
வடவர் நெறி 3
வடவர் பண்பாட்டுக் கலப்பு 5
வடவர் புராண மரபு 6
வடவர் மரபு 12,13
வண்ணச்சரபம் தண்டபாணி
சுவாமிகள் 16
வரலாற்றுநிலை ஆய்வு 1
வள்ளி 3,4,6,7,12,13
வள்ளி-கந்தன் காதல் 15
வள்ளி-தெய்வயானை
முரண்பாடு 13
வள்ளி-முருகன் உறவு 4
வள்ளி-முருகன் கதை 13
வள்ளுவர் 53
வாட்ஸ்வொர்த் 57
வாய்மொழி 69
வாய்மொழி வழக்காறுகள் 70
வார்சா 59,60
வால்ட்விட்மன் 57
வால்மீகி 22
வாழ்த்துப் பாடல்கள் 26,43
வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள் 8
வானநூல் ஆய்வு 21
விநாயகர் 10,17
வியாசர் 22
விருத்தம் 29
வில்லியம் கேம்பல் 57
வில்லியம் ஜோன்ஸ், சர். 57,66
விழுமிய மொழிநடை 45
விளக்க அட்டவணை 69
விஸ்வ சாகித்யம் 51
விஷ்ணு 22
வீட்டின்பம் 41
வீரசோழியம் 17
வீரயுக இலக்கிய இயல்புகள் 29
வீரயுக இலக்கியங்கள் 26
வீரயுகக் கலைஞர்கள் 30
வீரயுகக் கவிதைகள் 24,31
வீரயுகக் காலம் 44
வீரயுகச் சமுதாய அமைப்பு 23,26
வீரயுகச் சமுதாயம் 23,25
வீரயுகச் செய்திகள் 31
வீரயுகப் பாடல்கள் 22,25,28,29,31
வீரயுகப் போக்கு 23,24
வீரயுகம் 19,21,25,29,31
வீரவுணர்வு 26
வீறுணர்ச்சிக் கவிதைகள் 37
வெங்கடேசுவரன் 14
வெண்பா 28,29
வெறியாட்டு 7,15
வெறியாட்டுக்களம் 6
வெறியாடல் 32
வெறியாடும் மரபு 5
வேங்கை 6
வேடர்கள் 7
வேடர்களின் கடவுள் 4
வேடர் குலம் 7
வேதகாலப் பண்பாட்டுக்
கூறுகள் 66
வேதங்கள் 57
வேல் 10,11
வேலன் 4,32
வேலன்-முருகன் மரபு 5
வேலன் வெறியாடுதல் 12
வேற்கோட்டம் 6,9
வேற்படை 9
வைதேகி 14
வையை 20-24,49
ஜப்பான் 58,62,67,74,75
ஜப்பானிய இந்திய அறிஞர்களின்
கூட்டு முயற்சி 65
ஜப்பானியக் கூட்டுறவு 61
ஜப்பானியம் 67
ஜார்ஜ் தாம்சன் 39
ஜூலியான்வின்சன் 58
ஜெர்மன் 62
ஜெர்மன் நாடு 51,74
ஜெர்மனி 18,67
ஸ்கந்த புராணம் 14
ஷெல்லி 57
ஹார்ட் 58,62
ஸ்ரீ ஸ்கந்த மகாபுராணம் 14

♦ ♦ ♦



# ஆசிரியரின் நூல்கள்

1. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு-ஓர் அறிமுகம்
2. இலக்கியத் திறனாய்வு - முதற்பகுதி
3. ஷெல்லியின் கவிதைக்கலை
4. திறனாய்வுச் சிந்தனைகள்
5. ஷெல்லியும் பாரதியும்-ஒரு புதிய பார்வை
6. இலக்கியத்தில் சமுதாயப் பார்வை
7. இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள்
8. கலையும் கலைக் கோட்பாடுகளும்
9. பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும்
10. பண்பாட்டுப் பயணங்கள்
11. தமிழும் நானும் - முதற் பகுதி
12. தமிழும் நானும் - இரண்டாம் பகுதி
13. குமரி முதல் வார்சா வரை
14. உதிரும் தமிழ் மலர்கள்
15. செம்மொழிகளின் வரிசையில் தமிழ்
16. செவ்வேளும் செந்தமிழும்
17. **Studies in Comparative Literature**
18. **Comparative Literature - vol. I**
19. **Studies in Tamil Poetry**
20. **Collected papers on Tamil Literature**
21. **The Harp and the Veena**
22. **Tamil Identity and Resistance to Sanskrit**